REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN

2023 பெப்ரவரி 17 வெள்ளிக்கிழமை

1932 - 2022

வரு. 91 இல. 41 | Friday 17, February, 2023 | 20பக்கங்கள் | 50/-

அவசர தேவைகளின் நிமித்தம்

## D.I.G. தரத்திலுள்ள ஐவருக்கு இடமாற்றம்

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைய அவசர தேவைகளை கருத்திற் கொண்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் 05 பிரதி பொலிஸ் மாஅதிபர்கள் உடன் அமுலாகும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 06

கட்டண அதிகரிப்புகளை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் அதிகாரிகளுக்கு பணிப்பு

# மின் துண்டிப்புக்கு முற்றுப்புள்ளி நேற்று முதல் அமுலுக்கு வந்தது



லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதியுடன் மின்சாரக் கட்டணங்களில் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து துண்டிப்பின்றி தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மற்றும் மின்விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுக்கும் அது தொடர்பில் ஜனாதிபதி வழிகாட்டல்களை வழங்கியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மின்சாரக் கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதோடு மின் பாவனையாளர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குமாறும் அத்துடன் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார். அதேவேளை மதவழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரச கல்வி 06



மின் கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் ஜனாதிபதி உத்தரவு

## புனித மிஃராஜ் தின நிகழ்வு கொழும்பில்

முஸ்லிம் சமய, கலாசார திணைக்களம் ஏற்பாடு

(அஜ்வாத் பாஸி)



முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் கொழும்பு, வாழைத்தோட்டம் மஸ்ஜிதுல் நஜ்மி ஜும்ஆ பள்ளிவாசலுடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ள புனித மிஃராஜ் தின இரவை சிறப்பிக்கும் முகமாக விசேட இஸ்லாமிய நிகழ்வுகள் வாழைத்தோட்டம், மஸ்ஜிதுல் நஜ்மி ஜும்ஆ பள்ளிவாசலில் நாளை (18) சனிக்கிழமை இஷாத் தொழுகையின் 06

விசேட தெரிவுக்குழுவை நியமிக்க யோசனை

## தேர்தல் தொடர்பிலான பல்வேறு சிக்கல்கள்

லோரன்ஸ் செல்வநாயகம்



உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க தவறியுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவொன்றை நியமிக்கும் யோசனை பாராளுமன்ற ஒழுங்குப் 06

## மின் கட்டணம் 66 சத வீதத்தால் புதன் நள்ளிரவு முதல் அதிகரிப்பு

முதல் 30 அலகுகளுக்கான கட்டணம் 22 ரூபாவால் அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மின் கட்டணங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 66 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கான பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளதையடுத்து அந்த கட்டண அதிகரிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மின்கட்டண திருத்தத்திற்கு அமைய 30 மின் 06

## சப்ரகமுவ பல்கலை மாணவரிடையே மோதல்

காயமடைந்த 09 மாணவர் ஆஸ்பத்திரியில்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் 09 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட முதலாம் வகுப்பு மாணவர்களுக்கும், இன்னுமொரு குழுவுக்குமிடையில் நேற்று முன்தினம் இரவு இந்த




மோதல் இடம்பெற்றுள்ளது. மோதலில் படுகாயமடைந்த மாணவர்கள் அனைவரும் பலாங்கொடை 06

## இலங்கை இந்தியாவுக்கிடையே இணைந்த மின்சார கட்டமைப்பு

இரு மாதங்களுக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் மின்சார கட்டமைப்புகளை இணைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு மாதங்களுக்குள் கையெழுத்திடப்படுமென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ரொய்டர் செய்திச் சேவைக்கு அவர் தெரிவித்துள்ளார்.



மேலும் தெரிவித்துள்ளதாவது, இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் மின்சார கட்டமைப்புகளை ஒன்றிணைக்கும் உடன்படிக்கையை எற்படுத்திக்கொண்டதன் பின்னர் செயலாக்க ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக முன்மொழியப்பட்ட 06

நிதியை பெற்றுக்கொள்வதே முதல் தேவை

## தேர்தல் நடத்துவது தொடர்பில் பொருத்தமான திட்டம் அவசியம்

தேர்தல் கண்காணிப்பு தேசிய மத்திய நிலையம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்



உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான செலவினங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் எழுந்துள்ள சிக்கலான நிலைமையை தெளிவுபடுத்தி அதனை பாரிய நெருக்கடியாக மாற்றுவதற்கு முதல் சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் பேச்சுவார்த்தை மூலம் 06

## பெப்ரவரி 27 ஆம் திகதிக்குள் பாடப்புத்தகங்கள் விநியோகம்

ஆரம்ப வகுப்புடன் 06 – 11 தரங்களுக்கு முன்னுரிமை



2023 ஆம் கல்வியாண்டுக்குரிய பாடபுத்தகங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் விநியோகிக்க எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

ஆரம்ப வகுப்பு மற்றும் 06 முதல் 11 06



### பாராளுமன்றத்தை கூட்டுமாறு சு.ம.கூ. பிரதமருக்கு கடிதம்

கூட்டமைப்பு MP க்கள் கையெழுத்திட்டு கோரிக்கை 06



மாணவரிடையே கைகலப்பு

### சப்ரகமுவ பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல் வரை பூட்டு

06

## மலையகத்தில் இந்திய அரசின் வீடமைப்பு திட்டம் குறித்து ஆராய்வு

அமைச்சர் ஜீவனுடன் தூதரக அதிகாரிகள் சந்திப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டம் தொடர்பில் இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் இ.தொ.கா. பொதுச்செயலாளர், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்குமிடையே நேற்று (16) விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் 06



## மஸ்கெலியா வனப் பகுதி விஷமிகளால் தீ வைப்பு

வன ஜீவராசிகள் அழிந்து போகும் நிலை



மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்சீக் தோட்ட சின்ன நடு தோட்ட பிரிவில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைந்துள்ள பகுதியிலுள்ள வனப் பகுதி நேற்றுமுன்தினம் விஷமிகளால் தீ வைக்கப்பட்டமையால் முழுமையாக எரிந்து அழிவடைந்துள்ளது.

இதனால் அப்பகுதியில் வாழ்ந்த வன ஜீவராசிகள் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. விஷமிகளின் தீ வைப்புகள் மத்திய மலைநாட்டில் அதிகரித்துள்ளதால் நீர் ஊற்றுகள் வற்றி போகும் அபாயம் தோன்றியுள்ளது.

இதனை கட்டுப்படுத்த மலையக பகுதிகளிலுள்ள அனைத்து மக்களும் முன் வர வேண்டுமென மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

## தபால் மூல வாக்களிப்பு அடுத்த வாரம் தீர்மானம்

தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு



தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்கள் இந்த வாரத்தின் இறுதிக்குள் கிடைக்கப்பெறவில்லையாயின், அடுத்த வாரம் தபால் மூல வாக்களிப்பு தொடர்பான தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்புக்கான திகதியை மாற்றுவது குறித்து இதுவரையில் எந்த தீர்மானமும் எடுக்கவில்லையென அவர் தெரிவித்துள்ளார். 06

பொது பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர்

## ஜனக்க ரத்நாயக்கவின் அலுவலகத்துக்கு சீல்

நீதிமன்ற உத்தரவுக்கமைய பொலிஸார் நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

PUCSL

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவின் உத்தியோகபூர்வ அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவுக்கமைய மேற்படி 06

## கப்ராலுக்கு எதிரான பயணத்தடை நீடிப்பு

ஏப்ரல் 06 வரை நீடித்தது நீதிமன்று



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை நீடித்து நீதிமன்றம் நேற்று (16) உத்தரவிட்டுள்ளது. அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதாகவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 06

## சிறைக்கைதிகளை உறவினர்கள் பார்வையிட E VISIT முறைமை

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் பயிற்சி

லோரன்ஸ் செல்வநாயகம்



சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கு வசதியாகவும் வீடியோ தொழில்நுட்ப மூலம் அவர்களோடு தொடர்புகொள்ளும் வகையில் E VISIT முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக 06

மின் கட்டண அதிகரிப்பின் எதிரொலி

## சோறு, கொத்து, பிரைட் ரைஸ் என்பவற்றின் விலை அதிகரிப்பு

சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கம் அறிவிப்பு

மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் அனைத்து தொழிற்சாலை உற்பத்திகளின் விலைகளும் 20 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக 06



தேர்தலை தடையின்றி நடத்த உத்தரவிடவும்

## முஜிபுர். தாக்கல் செய்த மனு பெப்.23 பரிசீலனைக்கு தீர்மானம்



உள்ளூராட்சித் தேர்தலை தடையின்றி நடத்த தேர்தல் ஆணைக் குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்க கோரி முஜிபுர் ரஹ்மான் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 23ஆம் திகதி பரிசீலிக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொழும்பு மாநகர சபை மேயர் பதவிக்காக ஐக்கிய 06

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு ஆதீனத்தில் மகா சிவராத்திரி விரதம்

**காரைதீவு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு ஆதீனத்தில் நாளை (18) மாலை மகா சிவராத்திரி விரதம், ஆதீன ஸ்தாபகத் தலைவர் ஸ்ரீமான் மு.ஜெயபால் தலைமையில் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், நாளை மாலை 3 மணி முதல் 6 மணி வரை ஆதீனத்திலுள்ள 108 சிவலிங்கங்களுக்கும் அடியவர்களின் கைகளினால் நல்லெண்ணெய் திருமஞ்சனம் சாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நான்கு சாமப் பூஜைகளும் நடைபெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அத்துடன், 'திருமந்திரமும் அறிவியல் விளக்கமும்' எனும் தொனிப்பொருளில், இந்தியாவிலிருந்து வருகை தரவுள்ள சிந்தனை மருத்துவரும் சிவபக்தருமான எம்.ஏ. ஹுஸைன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

மேலும் ,கிழக்கு பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மற்றும் கிருபாஞ்சனா குழுவினுடைய வீணை இசை ஆராதனையும் கண்ணகி முத்தமிழ் மன்றத்தினுடைய சிவலீலை தென்மோடி நாட்டுக்கு கூத்தும் நடைபெறவுள்ளன.


**பதவி வெற்றிடங்கள்**

**கைத்தொழில் அமைச்சு**

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

1. ஆராய்ச்சி விஞ்ஞானி
2. ஆராய்ச்சி பொறியியலாளர்
3. உதவி ஆராய்ச்சி தொழில்நுட்பவியலாளர்

பதவிகளிற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம்:**
2023.03.03

**மேலதிக விபரங்களிற்காக**
2023.02.17 Daily News பத்திரிகையைப் பார்க்கவும்.

**பணிப்பாளர் நாயகம்/பி.நி.அ.**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்**



**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்**

**வெற்றிடங்கள்**

**- வியாபாரக் கட்டமைப்பு -**

1967ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம் கடற்றொழில் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் கடற்படை படகுகள், சுற்றுலா படகுகள் மற்றும் மீன்பிடிப் படகுகளை உற்பத்தி செய்யும் ஒரே அரச நிறுவனமாகும்.

வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனத்தின் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) - தரம் III**

**வெற்றிடங்கள் - 02**

➢ **தகைமை:**
**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள்**

**(அ)** கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்
III. ஆங்கில மொழி

போன்ற பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**(ஆ)** கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்) தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாரரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்

**(இ) பதவிக்கான விசேட ஏனைய தகைமை:**
கணனி சொல்லாக்கம் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஆறு (06) மாதத்திற்குக் குறையாத கற்கைநெறியொன்றைக் கற்றிருத்தல்.

➢ **வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
➢ **சம்பள அளவு:** MA 1-1 ரூபா (27,910/- 10x300/- 7x350/- 4x495 - 20x660 = 48,540/-
➢ **கொடுப்பனவுகள்:** திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.

**2. சந்தைப்படுத்தல் அதிகாரி (JM 1-1) - தரம் II**

**வெற்றிடங்கள் - 02**

➢ **தகைமை:**
**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சந்தைப்படுத்தல் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின் 01 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

➢ **வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
➢ **சம்பள அளவு:** JM 1-1 ரூபா (42,600/- 10x755/- 18x1,135/- = 70,580/-
➢ **கொடுப்பனவுகள்:** தொடர்பாடல் பற்றுச்சீட்டு செலுத்தல்கள், திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.

அரச சேவையில் தற்போதுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை பிரிவுத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

தம்மால் பூர்த்திசெய்துகொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இந்த விளம்பரத்தின் பிரசுரமாகி 14 நாட்களுக்குள் விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்குக் அனுப்பவும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட சீநோர் நிறுவனம்,**
**இல. 335 (90), டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**


# மண்வளத்தை பாதுகாப்பதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும்

## கிழக்கு ஆளுநர் அநுராதா யஹம்பத் வேண்டுகோள்





**றொட்டவெவ, தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

"விவசாயச் செய்கைக்கு இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டு வரும் பட்சத்தில் எதிர்வரும் 2050ஆம் ஆண்டாகும் போது, எமது நாட்டின் மண் வளம் முற்றாகப் பாதிக்கப்பட்டு விடுமென்பதுடன், அவ்வாறு வளம் குன்றிப் போகும் மண்ணை புத்துணர்ச்சி பெற வைப்பதில் சிரமம் காணப்படுமெனவும், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

ஜப்பானிலுள்ள அரசசார்பற்ற நிறுவனமான 'பீஸ் வின்' நிறுவனத்தின் உதவியுடன், திருகோணமலை கலாசார மண்டபத்தில் 'இயற்கை உற்பத்திகளுக்கான விழிப்புணர்வும் விவசாய உணவு உற்பத்திச் சந்தையும்' எனும் தொனிப்பொருளின் கீழ் கண்காட்சியொன்று நேற்று (16) ஆரம்பமாகியதுடன், இதில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் Mizukoshi Hideaki பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர்,

"எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஏக்கர் கணக்கில் நெல் வேளாண்மைச் செய்கையை மேற்கொண்டு வரும் பெருமளவிலான விவசாயிகள் உள்ளனர்.

எமது மண் வளத்தைப் பாதுகாப்பதை நாம் ஒருபோதும் பின்தள்ளிப் போடக்கூடாதென்பதுடன், இன்று முதல் மண் வளத்தைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

ஆகையினால், திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி, கிழக்கு மாகாணம் முழுவதிலுமுள்ள விவசாயிகள், மண் வளத்தைப் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும்" என்றார்.

நஞ்சற்ற உணவு உற்பத்திகளுக்காக ஜப்பானில் மிக முக்கியமான திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், அவ்வாறான உணவு உற்பத்திகளுக்கு சிறந்த கிராக்கியும் உள்ளதாகவும், ஆளுநர் தெரிவித்தார்.

இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் Mizukoshi Hideaki க்கும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்துக்குமிடையில் திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் விசேட சந்திப்பொன்றும் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் விவசாயம், தொல்லியல், சுற்றுலாத் துறைகளை மேம்படுத்துவதற்காக ஜப்பானிலிருந்து புதிய முதலீட்டாளர்கள் வருகை தருவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்பதுடன், திருகோணமலை மாவட்டத்திலுள்ள கனியமணல் கூட்டுத்தாபனத்தில் ஜப்பான் அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டுமெனவும், ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மூதூரில் 'கடலும் கண்ணீரும்' காவிய நூல் வெளியீட்டு விழா

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூரில் முதுபெரும் எழுத்தாளரும் கவிஞருமான முகம்மது முகைதீன் அனஸ் எழுதிய 'கடலும் கண்ணீரும்' எனும் மூதூர் மீனவர்களின் காவிய நூல் வெளியீட்டு விழா, நாளை மறுதினமான ஞாயிற்றுக்கிழமை (19) மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மூதூர் உமர் நெய்னா கழகத்தின் ஏற்பாட்டிலும் ஓய்வுநிலை அதிபர் வி.எம்.நகீப் தலைமையிலும் இவ்விழா நடைபெறுவதுடன், இவ்விழாவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் ஏ.எப். எம்.அஸ்ரப் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நூலாசிரியர் முகம்மது முகைதீன் அனஸ் எழுதிய 34ஆவது நூலாக இந்நூல் வெளியிடப்படுகின்றது.

இதில் எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள், மீனவர்களெனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## காத்தான்குடி பள்ளிவாசல்களில் மிஃறாஜ் இரவு அனுஷ்டிக்க ஏற்பாடு

**புதிய காத்தான்குடி விசேட நிருபர்**



முஸ்லிம் சமூகத்தின் மீது இறைவனினால் கடமையாக்கப்பட்ட ஐவேளைத் தொழுகை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விண்ணுலக யாத்திரையான மிஃறாஜ் பயணம், ரஜப் மாதம் பிறை 27இல் இடம்பெற்றதையிட்டு, 111 வருடங்களாக ஓதப்பட்டு இம்முறையும் ஒரு மாத காலம் புனித ஸஹீஹுல் புகாரி ஷரீப் பாராயணம் செய்யப்பட்டு, மிஃறாஜ் இரவான நாளை (18) மாலை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காத்தான்குடி முஹ்யித்தீன் மெத்தை பெரிய ஜும்ஆ மஸ்ஜித் ஜாமிஉழ்ழாபிரீன் பெரிய ஜும்ஆ மஸ்ஜித் மற்றும் காங்கேயனோடை முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் தொடர்ந்து ஒரு மாத காலம் ஓதப்பட்டு, ஆலிம் உலமாக்களினாலும் ஓதப்பட்டு மார்க்க அறிஞர்களினால் பயான் செய்யப்பட்டு வருகின்றது.

இதன் தமாம் வைபவம் நாளை மாலை இடம்பெறவுள்ளதினால், நாட்டின் நலன், மக்களின் பொருளாதாரப் பிரச்சினை, ஒற்றுமை, சக வாழ்வுக்காக விசேட பிரார்த்தனை வைபவம் நடைபெறவுள்ளது.

வைபவத்தின் இறுதியில் ஊர் மக்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமென, பள்ளிவாசல்கள் மரைக்காயர்மார் தெரிவித்துள்ளனர்.

## சிவராத்திரிதின கொடிவாரம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

**கல்லடி குறூப் நிருபர்**



மகா சிவராத்திரியையிட்டு அகில உலக இளம் சைவ மன்றத்தினால் சிவராத்திரி தின விழிப்புணர்வுக் கொடிவாரம் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், இம்முறையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இக்கொடிவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவுக்கு சிவராத்திரி தின முதலாவது விழிப்புணர்வுக் கொடி, உலக இளம் சைவ மன்றத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் தலைமையில் நேற்று (16) அணிவிக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இளம் சைவ மன்றத்தின் இலட்சினை பொறிக்கப்பட்ட நினைவுச்சின்னம் அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டதுடன், அனைத்து சமய நம்பிக்கைகளை உள்ளடக்கிய 'உலகெலாம்' எனும் நூலின் பிரதியை அதன் ஆசிரியர் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் வழங்கி வைத்தார்.

## திருமலையைச் சேர்ந்தவர் குவைத் நாட்டில் உயிரிழப்பு

**கிண்ணியா மத்திய நிருபர்**

முள்ளிப்பொத்தானையில் 96ஆம் மைல்கல் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் குவைத்தில் நேற்று முன்தினம் (15) உயிரிழந்துள்ளார்.

குவைத்தில் இடம்பெற்ற வாகன விபத்திலேயே இவர் இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான குலாம் நாஹிர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, உறவினர்கள் தெரிவித்தனர். பொருளாதாரச் சிரமத்தை எதிர்நோக்கி வந்த இவர், பல இலட்சம் ரூபா கடன் பெற்று, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் குவைத்துக்கு வேலை வாய்ப்புத் தேடிச் சென்றிருந்தார்.

## அட்டாளைச்சேனையில் சுகாதார வைத்திய அதிகாரி நியமனம்

**பாலமுனை விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்**



அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன், அவ்வலுவலகத்தில் வைத்து தனது கடமையை கடந்த செவ்வாய்க்கிழமை (14) பொறுப்பேற்றுக் கொண்டார். அட்டாளைச்சேனையில் சுகாதார வைத்திய அதிகாரிக்கான வெற்றிடம் கடந்த பல மாதங்களாக நிலவியதைத் தொடர்ந்து, இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றி வந்த நிலையிலேயே, அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகள் சிலருக்கு உதவித்தொகை வழங்கப்படாதுள்ளதாக கவலை தெரிவிப்பு

**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித்தொகை சில விவசாயிகளுக்கு வழங்கப்படாதுள்ள நிலையில், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அவ்வுதவித்தொகையை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, அம்பாறை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடமே, அவர்கள் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

பெரும்போக விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஹெக்டேயரொன்றுக்கு 10 ஆயிரம் ரூபா படி அரசாங்கத்தினால் வைப்புச் செய்யப்பட்டது. ஆனால், பெரும்போகச் செய்கையில் ஈடுபட்டுள்ள சில விவசாயிகளுக்கு இக்கொடுப்பனவு வங்கிகளில் வைப்புச் செய்யப்படவில்லையெனவும், விவசாயிகள் தெரிவித்தனர்.



மருதமுனையின் முதல் நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எச்.எம்.அன்சார் 38 வருட அரச சேவையிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து, கல்முனை பிரதேச செயலகத்தினால் கௌரவிக்கப்பட்டார். மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் கடந்த சனிக்கிழமை (11) இக்கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

(படம்: மருதமுனை தினகரன் நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk



தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மாசி 05
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

### புற்றுநோய்க்கான இலவச மருந்தை பெற்றுக்கொடுப்பதற்கு

# 20,000 ரூபா இலஞ்சம் கோரியுள்ள அபேக்ஷா ஆஸ்பத்திரி ஊழியர்

### 28 ஆம் திகதி வரை விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மஹரகம அபேக் ஷா மருத்துவமனை நோயாளர்களுக்காக இலவசமாக வழங்கப்படும் 'காபொபெடின்' என்ற மருந்தை பெற்றுக்கொடுப்பதற்காக 20,000 ரூபாவை இலஞ்சமாகக் கோரிய அந்த வைத்தியசாலையில் மருந்தாளரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மஹரகம அம்பகஹபுர பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி ஆஸ்பத்திரியின் மருந்தாளரான உதயங்க கந்தமுல்ல என்பவரே இவ்வாறு இலஞ்சம் பெறும் முயற்சித்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புற்றுநோய்க்காக வழங்கப்படும் காபொபெடின் என்ற மருந்து ஆஸ்பத்திரியில் இல்லையென்றும் மேற்படி சந்தேகநபரிடமிருந்து அதனைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அந்த ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஒருவர் சம்பந்தப்பட்ட நபரிடம் தெரிவித்துள்ளார் என முறைப்பாடு செய்துள்ள முறைப்பாட்டாளர் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார். மேற்படி இலஞ்சத்தைப் பெற்றுக்கொள்ள அவர் முற்பட்டதாக கிடைத்த முறைப்பாட்டிற்கிணங்கவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அவரை

06

## பாகிஸ்தானில் பன்னாட்டு கடற்படைகளின் பயிற்சி நிறைவு





பாகிஸ்தான் கடற்படையினர் ஐந்து நாட்கள் ஏற்பாடு செய்த அமான் 2023 பன்னாட்டு கடற்படைகளின் பயிற்சி வடக்கு அரபுக்கடலில் (14) வெற்றிகரமாக நிறைவுற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரிப், கடற்படையின் பிரதம தளபதி அட்மிரல் அம்ஜத் கான் நியாஸி மற்றும் தளபதிகள் முஆவின் கப்பலில் அமைக்கப்பட்டிருந்த விஷேட மேடையில் இருந்தபடி பயிற்சி பங்குபற்றி அணிவகுத்து சென்ற கப்பல்களுக்கு எழுந்து நின்று கையசைத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். அந்தவகையில் இலங்கை கப்பலுக்கு பாகிஸ்தான் பிரதமரும் அந்நாட்டு கடற்படைத் தளபதி உள்ளிட்ட தளபதிகளும் கையசைத்து வாழ்த்து தெரிவிப்பதையும் மேடையின் முன்வரிசையில் இலங்கை கடற்படை அட்மிரல் நிஷாந்த அமரோசா காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

(படம்: கராச்சியிலிருந்து மர்லின் மரிக்கார்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.02.15
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5032
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 31,229,078.00
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 2 4 7 5 4 3

**ராசி சுப பலன்** හඳහන Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 341
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,944,774.40
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 02 18 34 51
விசேட இலக்கினம்: மேஷம்

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1487
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 10,723,774.40
வெற்றி இலக்கினம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 0 5 4 4 4 8

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம்: 3274
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 79,119,078.80
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 18 29 38 44

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1062
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 83,768,772.40
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 11 19 67 82

**மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம்: 1380
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 300,407,582.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: H
சுப்பர் இலக்கம்: 24
வெற்றி இலக்கங்கள்: 17 29 66 68


நகர அபிவிருத்தி மற்றும்
வீடமைப்புத்துறை அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை

## கேள்வி அறிவித்தல்

### கொழும்பு-12, செபஸ்தியன் மேடு, சட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதியின் தரை மாடியின் 34/52 ஆம் இலக்க அலுவலக இடப்பரப்பின் ஒதுக்கீட்டிற்கான கேள்வி

ஒப்பந்த இல.: **PD/UDA/RTB/LOC/005/2023**

01. 03 வருடங்களுக்கு பின்னர் மறுபரிசீலனை செய்யும் தன்மையில் மாதாந்த வாடகை அடிப்படையில் 5 வருட காலப்பகுதிக்கு அனைத்து வசதிகளுடன் கொழும்பு-12, செபஸ்தியன் மேட்டிலுள்ள சட்டத்தரணிகளின் அலுவலக கட்டிடத்தொகுதியின் 34/52 ஆம் இலக்கத்திலுள்ள அலுவலக இடப்பரப்பை ஒதுக்கீடு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாராரசபையின் இறைவரி கேள்விச் சபையின் (கீழ் மட்டம்) தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. அலுவலக இடப்பரப்பானது சட்டத்தரணிகளின் அலுவலகத்திற்கு மாத்திரமே பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஏனைய செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**01 ஆம் அட்டவணை**

| அலுவலக இலக்கம் | தரைப்பரப்பு | அடிப்படை விலை | மாதாந்த வாடகை (ரூபாவில்) | விலைமனு உத்தரவாதம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| சட்டத்தரணிகளின் கட்டிடத்தொகுதியின் மதிப்பீட்டு இல. 34/52 | 137.88 ச.அடி | 360,000/- | 4,750/- | 10,000/- |

02. ஆர்வமுள்ள சாரார் மேலேயுள்ள 01 ஆம் அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட அடிப்படை விலைக்கு மேற்பட்ட தன்மையில் அவர்களின் முன்வைப்புக்களை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் குறிப்பிட்டுள்ள அடிப்படை விலைக்கு மேற்பட்ட அதியுயர் பெறுமதியை கருத்திற் கொண்டு வழங்குனருக்கான தெரிவு மேற்கொள்ளப்படும்.

03. 2023 பெப்ரவரி 17 ஆம் திகதியிலிருந்து 2023 மார்ச் 09 ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் 5,000 ரூபா மற்றும் அரசாங்க வரிகள் அடங்கிய மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகு, அலகுத் தலைவரிடமிருந்து கேள்வி ஆவணங்களை கையேற்கலாம்.

04. விலைமனு உத்தரவாதமாக 10,000 ரூபா தொகையை ரொக்கப் பணத்தில் நஅஅ உடன் வைப்புச் செய்த பின்னர் கேள்வி ஆவணத்துடன் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. கேள்வியானது 2023 மார்ச் 10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு பத்தரமுல்ல, I ஆம் படிமுறை, ''செத்சிரிபாய'', 6 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிதிப் பிரிவில் மூடும் நேரத்தின் பின்னர், உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது (ஆண்/பெண்) அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியானவர் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

06. கேள்வி ஆவணங்களில் சமர்ப்பித்தலுக்கான நடைமுறையானது குறித்துரைக்கப்பட்டுள்ளது.

07. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களான மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் பத்தரமுல்ல, I ஆம் படிமுறை, ''செத்சிரிபாய'', 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0112875916-20 நீடிப்பு 2936, 0112872389.

**தலைவர்,
இறைவரி கேள்விச் சபை (கீழ் மட்டம்),
நகர அபிவிருத்தி சபை,
6 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', I ஆம் படிமுறை,
பத்தரமுல்ல.**





தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 25

**குறள் தரும் சிந்தனை**



அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு

*நல்வழிக்கான அறிவுரைகளைப் போற்றி அவ்வழி நடக்காத அறிவிலிகள், தமக்குத் தாமே பெருந்துன்பத்தைத் தேடிக் கொள்வார்கள்.*

# அரசுக்கு எதிராக மக்களை திசைதிருப்புகின்ற முயற்சி!

உள்ளூராட்சிசபைத் தேர்தலை இலக்கு வைத்து எதிரணியினர் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அரசுக்கு எதிராகக் கூக்குரலிட்டு வசைமாரி பொழிகின்றனரே தவிர, நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கான தீர்வுத் திட்டம் எதனையும் முன்வைத்ததாகத் தெரியவில்லை.

வெறுமனே கூப்பாடு போடுவதால் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அரசாங்கம் மீது கண்டனங்களைத் தெரிவிக்கின்றனரே தவிர, நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகள் எதனையுமே எதிரணியினர் முன்வைக்கவில்லை. இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் மக்களைத் தங்கள் பக்கம் திசைதிருப்ப வேண்டுமென்பதே எதிரணியினரின் திட்டமாக இருக்கின்றது.

அவர்கள் முதலில் தீர்வை மக்கள் முன்பாக வைக்க வேண்டும். அந்தத் தீர்வு இன்றைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உதவுமா என்பதை மக்கள் முதலில் கண்டுகொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் மேடைகளில் ஏறிநின்று கூக்குரல் இடுவது நியாயமல்ல. எதிரணியினரின் தந்திரம் என்னவென்று நன்றாகவே புரிகின்றது.

நாட்டின் பாதிப்புகள் பற்றியோ பொதுமக்களின் துன்பங்கள் பற்றியோ அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. நாட்டின் இன்றைய வீழ்ச்சி நிலைமையிலும் கூட, தங்களது அரசியல் செல்வாக்கை பெருக்கிக் கொள்ள வேண்டுமென்பதே எதிரணியினரின் திட்டமாக உள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த சில வருட காலமாக விசித்திரமான காட்சிகளை நாம் கண்டு வருகின்றோம். அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுகின்ற சமயம் பார்த்து, எதிரணிக் கட்சிகள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தி வருகின்ற காட்சியே அதுவாகும். அரசுக்கு எதிரான பெரும்பான்மையின அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, சிறுபான்மையின அரசியல் கட்சிகளும் இவ்விதமான போராட்டங்களில் ஈடுபட்டு வருவதை கடந்த சில வருட காலமாக அவதானிக்க முடிகின்றது.

பொருளாதார நெருக்கடி அதிகரித்தமைக்குக் காரணம் கொவிட் தொற்றினால் உருவாகிய பாதிப்பு ஆகும். கொவிட் தொற்று காரணமாகத் தோன்றிய நெருக்கடியானது இலங்கைக்கு மாத்திரம் உரியதல்ல. உலகின் பல நாடுகளில் கொரோனா தொற்றின் விளைவாக பொருளாதாரம் வீழ்ச்சிக்குச் சென்றுள்ளது. விலைவாசி உயர்வினால் மக்களின் வாழ்க்கைச் செலவு பெருமளவு அதிகரித்துள்ளது.

உள்நாட்டு வருமானம் வீழ்ச்சியடைந்ததால் இவ்வாறான நெருக்கடிக்கு உலக நாடுகள் முகம் கொடுத்துள்ளன. இந்த நெருக்கடிக்கு இலங்கை மாத்திரம் விதிவிலக்கு அல்ல. பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் விலையுயர்வு காரணமாக மின்சார உற்பத்தியிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான கட்சிகளுக்கும் இந்த உண்மை புரியாமலில்லை. ஆனாலும் அந்த உண்மைமை மறந்த நிலையில், அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களை விதைப்பதிலும், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதிலுமே எதிரணிகள் முனைப்பாக உள்ளன.

பொருளாதார நெருக்கடியை எதிரணிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முற்படுகின்றன. அரசுக்கு எதிராக மக்களைத் திசைதிருப்பி விடுவதன் மூலம் மக்கள் செல்வாக்கை தங்களது பக்கம் பெருக்கிக் கொள்வதற்கு அந்தக் கட்சிகள் எதிர்பார்க்கின்றன. இது சந்தர்ப்பவாத அரசியலின் உச்சம் எனலாம்.

தென்னிலங்கையில் அரசுக்கு எதிரான பெரும்பான்மைக் கட்சிகள் அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களை திரைமறைவில் இருந்தபடி அரங்கேற்றுகின்றன. அதன் பின்னணியில் எதிரணி அரசியல் கட்சிகளே உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. கொவிட் தொற்று நாட்டில் உச்சகட்டத்தில் இருந்த வேளையிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை அரசஎதிர்ப்பு சக்திகள் தூண்டியமை நினைவிருக்கலாம்.

அதேபோன்று தமிழ் அரசியல் கட்சிகளும் காலத்துக்குக் காலம் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதும், பின்னர் சில காலத்துக்கு மௌனம் காப்பதும் வழமையாகும். தமிழ்க் கட்சிகள் நீண்ட காலத்துக்கு உறங்குநிலையில் இருப்பது வழமை. அதன் பின்னர் தேர்தலொன்று வருகின்ற வேளையிலோ அல்லது ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகவிருக்கின்ற வேளையிலோ உறக்கம் கலைவது வழமையாகும்.

நாட்டில் தற்போது நிலவுவது உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பரபரப்பு ஆகும். அத்தேர்தல் நடைபெறுமா அல்லது இல்லையா என்பது இன்னுமே தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் அரசுக்கு எதிராக சக்திகள் முழுமையாகக் களத்தில் இறங்கியுள்ளன. நாட்டின் ஆட்சியைத் தீர்மானிப்பதற்கான தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தல் இல்லாத போதிலும், அரசுக்கு எதிராக மக்களை திசைதிருப்புவதே எதிரணியினரின் நோக்கமாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# சிவபெருமானின் அனுக்கிரகத்தை முழுமையாக பெறுவதற்கு முதன்மையான விரதம் சிவராத்திரி

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். அவரது அனுக்கிரகத்தைப் பெற பல விரதங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவற்றுள் முதன்மையானது சிவராத்திரி விரதம் ஆகும். மகாசிவராத்திரி நாளை அனுஷ்டிக்கப்படுகின்றது.

மகாசிவராத்திரியன்று விரதம் இருந்தால் மூன்று பிறவியில் செய்த பாவங்கள் முழுவதுமாக நீங்கும் என்பது ஐதீகம். மனக் கவலைகள், உடல் மற்றும் மனரீதியான நோய்கள், வறுமை ஆகியவை நீங்கி வாழ்வில் மேன்மை பெறுவதற்கு மகாசிவராத்திரி விரதம் வழியமைக்கும்.

சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி. சக்திக்கு ஒன்பது ராத்திரி நவராத்திரி.மாசி தம் வரும் மகாசிவராத்திரி.

மகாசிவராத்திரி நாளில் விரதம் இருந்தால் இருமடங்கு நன்மை கிடைக்கும். மாசிமாதம் வருகின்ற மகாசிவாராத்திரிக்கு தனிச்சிறப்பு உண்டு.

எந்த ஆண்டும் இல்லாத ஒரு விசேஷமாக, மகாசிவராத்திரியன்றே சனி பிரதோஷமும் நடைபெறுகிறது. எனவே இந்த ஆண்டு மகாசிவராத்திரி மிக சக்தி வாய்ந்தது மற்றும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

பொதுவாக நான்கு சாமப் பூஜைகள் ஆலயங்களில் நடைபெறுவதுண்டு. இரவு 8.30 இரவு 10.30 நள்ளிரவு 12.30 பின்னிரவு 2.30 ஆகிய நான்கு சாமங்களில் சிவராத்திரி பூஜை வழிபாடு இடம்பெறும்.

நாளை 18ஆம் திகதி பகலில் திரயோதசி திதியும், இரவில் சதுர்த்தசி திதியும் சேர்ந்து ஒரே நாளில் வருவதால் இம்முறை சிவராத்திரி விசேஷமான சிவராத்திரியாக அமைந்துள்ளது. இந்த நாளில் பக்தர்கள் விரதமிருக்க இருமடங்கு பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

எல்லோராலும் மகாசிவராத்திரியன்று முழுமையாக விரதம் இருக்க முடியாது. "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பது போல சிவபெருமானின் ஆசி இருந்தால் மட்டுமே மகாசிவராத்திரியன்று விரதம் இருக்க முடியும் எனக் கூறுவார்கள்.

பண்டைய கால புராணங்கள் மற்றும் இதிகாசங்களில் மகாசிவராத்திரி பற்றி பல கதைகள் இருக்கின்றன. பார்வதி தேவி



நீண்ட காலம் கடும் தவமிருந்து, ஈசனை அடைந்த தினம் தான் மகாசிவராத்திரி.

உலகம் முழுவதும் கடலில் மூழ்கி உலகில் உயிரினங்களே இல்லாது போகும் ஒரு நிலை ஏற்பட்ட நேரத்தில் பார்வதி தேவி உலகத்தில் இருக்கும் உயிர்களைக் காக்க வேண்டுமென்று தீவிரமாக தவம் இருந்து சிவபெருமானை பூஜித்தார். அவர் பூஜை செய்த அந்த இரவுதான் மகாசிவராத்திரி நாள் என்பது ஐதீகம்.

அதேபோல பார்வதிதேவி சிவபெருமானின் இடதுபக்கத்தில் தனக்கு பாகம் பெற்ற நாளும் மகாசிவராத்திரிதான் என்று கூறப்படுகிறது.

மகாபாரத காலத்தில், பாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனன் தீவிரமான தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து ‘பாசுபதம்’ என்ற அஸ்திரத்தை வரமாகப் பெற்ற நாள் சிவராத்திரியாகும்.

அதேபோல மார்க்கண்டேயன் என்றென்றும் இளமையாக இறப்பே இல்லாமல் இருப்பதற்கு எமனை சம்ஹாரம் செய்த நாளும் சிவராத்திரிதான்.

கண்ணப்ப நாயனார் கதை பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். அவர் குருதி வழிய தன்னுடைய கண்களை எடுத்து ஈச

**நாளை அனுஷ்டிப்பு**

னுக்கு பொருத்திய அந்த நாளும் சிவராத்திரிதான்.

அதுமட்டுமில்லாமல் மும்மூர்த்திகளில் விஷ்ணு மற்றும் பிரம்மாவிற்கு யார் பெரியவர் என்று சண்டை ஏற்பட்ட போது லிங்க வடிவமாக சிவபெருமான் இவர்களுக்கும் மகாவிஸ்வரூபமாக காட்சியளித்ததும் மகாசிவராத்திரி அன்றுதான்.

மேலும், பிரம்மா மற்றும் விஷ்ணுவை விட, சிவபெருமான் சக்தி வாய்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வகையில் ஜோதிர் லிங்கமாக சிவபெருமான் உருவெடுத்ததும் சிவராத்திரி நாளில்தான் என்று கூறப்படுகிறது.

சனிப் பிரதோஷம் மற்றும் மகாசிவராத்திரி இரண்டும் அரிதாக ஒன்றிணையும் நாளைய சிவராத்திரி நாளில் விரதம் இருந்து சிவபெருமானை வழிபட்டு வந்தால் நாட்பட்ட நோய்கள் தீரும், தோஷங்கள் நிவர்த்தியாகும், கடன் தொல்லை நீங்கும், வாழ்க்கையில் உன்னதமான நிலையை அடைய முடியும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் முன்பள்ளிகளின் மாதாந்த முழுநிலா நாள்

அனைத்துலக மருத்துவநல அமைப்பு மற்றும் ரட்ணம் பவுண்டேசன் அனுசரணையில் கிளிநொச்சி வடக்கு கல்விவலயம், ஆரம்ப முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் 'முழு நிலா நாள்' றங்கன் முன்பள்ளிக் கொத்தணியில் உள்ள றங்கன் முன்பள்ளியின் முன்றலில் அண்மையில் நடைபெற்றது.

இரண்டாவது முழு நிலா நாள் விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவாறு அனைத்து விருந்தினர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் இவ்விழாவுக்கு பெற்றோர் பெருந்திரளாக வருகை தந்திருந்தனர். பெற்றோர் மத்தியில் ஏற்பட்டுள்ள கல்வி விழிப்புணர்வு பற்றி அங்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக IMHO மற்றும் ரட்ணம் பவுண்டேசன் நிறுவனங்களின் அர்ப்பணிப்புடனான கொடை உதவி இப்பிரதேசத்தின் வரப்பிரசாதம் என்று பலரும் தெரிவித்தனர். அவர்களுக்கு வாழ்த்துக்கள் கூறுவதாக விருந்தினர்கள் தெரிவித்தனர்.







இப்பகுதி மக்கள் வறுமையில் மிக நலிவடைந்தவர்கள். அவ்வாறிருந்தும் இவ்விழாவுக்கு பெற்றோர் பெருமளவில் வருகை தந்திருந்தனர். அவர்கள் தம் நெருங்கிய உறவுகளின் மங்கள நிகழ்வுக்கு வருவது போல வந்திருந்தனர். இம்மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்ற முழு நிலா நாள் நிகழ்வில் அரங்க நிகழ்வுகளாக குழந்தைகளின் கலைநிகழ்வுகள், ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேறின. காலை ஆரம்பமான நிகழ்வுகள் பிற்பகலில் நன்றியுரையுடன் நிறைவடைந்தன.பெற்றோர்,ஆசிரியர்களின் முற்றத்து ஆடல் பாடலுடன் நிகழ்வுகள் முடிவுற்றன.

# இந்திய கோஹினூர் வைரம் பதித்த கிரீடத்தை சூடிக் கொள்ளாத முதலாவது மகாராணி கமீலா!

இங்கிலாந்து மன்னராக சார்ள்ஸ் முடிசூட்டும் விழாவில் ராணி கமீலா கோஹினூர் வைரம் கொண்ட கிரீடத்தை அணிவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் கோஹினூர் வைரம் கொண்ட கிரீடத்தை அணிய மாட்டார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழா எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் ஏற்கனவே பிரிட்டனில் பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. சார்லஸ் முடிசூட்டு விழாவுக்குப் பிரிட்டனே தயாராகி வருகிறது. இந்த முறை பொருளாதார வீழ்ச்சி காரணமாக முடிசூட்டு விழா எளிமையாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னரின் முடிசூட்டு விழாவில் ராணி அணியும் கிரீடம் பலரது கவனத்தை ஈர்க்கும். இந்த முடிசூட்டு விழாவில் ராணி கமீலா கோஹினூர் வைரம் கொண்ட கிரீடத்தை அணிவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.. ஆனால், இந்தாண்டு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடக்கும் சார்ள்ஸ் முடிசூட்டு விழாவில் சர்ச்சைக்குரிய கோஹினூர் வைரத்தை மன்னரின் மனைவி ராணி கமீலா





அணிய மாட்டார் பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது. அதற்குப் பதிலாக ராணி மேரி கிரீடத்தை அவர் அணிவார்.

உலகிலேயே மிகவும் மதிப்புமிக்க வைரங்களில் ஒன்றாக கோஹினூர் வைரம் கணிக்கப்படுகிறது. இந்தியாவில் இருந்த இந்த வைரம் 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டன் வசம் சென்றது. 1849ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணிக்கு சீக்கிய அரசர் மகாராஜா துலீப் சிங் இந்த கிரீடத்தைப் பரிசாக அளித்தாகக் கூறப்படுகிறது. இருப்பினும், அப்போது துலீப் சிங்கின் தாயார் பிரிட்டனின் கைதியாக இருந்தார். இதனால் வேறு வழியில்லாமல் தான் மகாராஜா துலீப் சிங் இந்த கிரீடத்தை வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அப்போது இருந்தே இந்த கிரீடம் பிரிட்டனின் அரச குடும்பத்தின் சொத்தாக இருந்து வருகிறது.. 105 கேரட் வைரத்தைக் கொண்ட இந்த கிரீடத்தின் இன்றைய மதிப்பு 200 மில்லியன் டொலராகும். அதாவது இந்திய மதிப்பில் சுமார் ரூபா 1652 கோடியாகும். இந்தியாவுக்குச் சொந்தமான இந்த கிரீடத்தைப் பிரிட்டன் திருப்பி தர வேண்டும் என்று பலரும் வலியுறுத்தும் நிலையில், அந்த கிரீடத்தை அணிவதில்லை என்று ராணி கமீலா முடிவு செய்துள்ளார். அதற்குப் பதிலாக ஏறக்குறைய அதைப் போலவே இருக்கும் ராணி மேரியின் கிரீடத்தை அணிய ராணி கமீலா முடிவு செய்துள்ளார். சமீப கால வரலாற்றில் ராணி மேரியின் கிரீடத்தை அணியும் முதல் நபராக கமீலா உள்ளார்.

# AIA இன் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரியாக சசித் பம்பரதெனிய

AIA இன்ஷுரன்ஸ் ஜனவரி 2023 முதல் அமுலாகும் வகையில் தனது புதிய பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரியாக (CMO) சசித் பம்பரதெனியவை அறிவித்துள்ளது. சசித் சந்தைப்படுத்தல், தகவல் தொடர்புகள், மூலோபாயத் திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுத் தலைமைத்துவத்தில் 15 வருடத்திற்கும் அதிகமான அனுபவத்துடன் உள்நாட்டுக் காப்புறுதித் துறையில் விருதுகள் பெற்றவராவார்.

அவர் AIA ஸ்ரீலங்காவில் முகாமைத்துவப் பயிற்சியாளராக தனது பணியினை ஆரம்பித்திருந்தவர். AIA இற்குப் பின்னர் காப்புறுதித் துறையில் பல்வேறுபட்ட தனித்துவமான அனுபவங்களைப் பெற்றிருப்பதோடு பெயாபெஸ்ட் இன்ஷுரன்ஸ் லிமிட்டட் நிறுவனத்தில் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரியாக சமீப காலங்களில் பதவி வகித்திருந்தார். புதுமையான படைப்பாற்றலுக்கான விருப்பம், வாடிக்கையாளர்களின் எண்ணங்களை அறிந்து அதற்கேற்ப புதுமைகளையும், மாற்றங்களையும் வழிநடத்தல் ஆகிய பண்புகளுடன் பல தரப்பட்ட அனுபவங்களின் கலவையினை நிறுவனத்திற்குக் கொண்டு வந்தவராவார்.

காப்புறுதித் திட்ட மேலாண்மை, இலத்திரனியல் வணிகம், வர்த்தகநாம மேம்பாடு மற்றும் தகவல் தொடர்பாடல்கள் போன்ற வேறுபட்ட துறைகளை உள்ளடக்கியதாக சசித்தின் திறமை அமைந்திருக்கின்றது. இவர் இலங்கை ஸ்ரீ ஜய



வர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின் கல்லூரியில் (PIM) வியாபார நிர்வாக முதுமாணி பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் நியுகாஷல் பல்கலைக்கழகத்திலிருந்து பிரதான பாடமாக சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தில் வியாபார இளமாணிப் பட்டத்தையும் பெற்றிருக்கின்றார்.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர இந்த நியமனம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ‘சசித் புதிய வர்த்தக நாமங்களைக் கட்டியெழுப்புவதில் மிகச்சிறந்த உறுதியான கடந்தகால அனுபவங்களைக் கொண்டுள்ள மிகவும் அனுபவம் வாய்ந்த மற்றும் திறமயான இளம் சந்தைப்படுத்தல் தலைவராகத் திகழ்வதோடு, சந்தைப்படுத்தலுக்கென மிகவும் வெற்றிகரமான வாடிக்கையாளர் மற்றும் விற்பனையினை மையப்படுத்திய அணுகுமுறைகளையும் வழிநடத்துகின்றார். இவர் AIA ஸ்ரீலங்காவிலும் மற்றும் நிறைவேற்றுக் குழுவிலும் இணைவதையொட்டி நான் உண்மையில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்" என்றார்.

‘AIA இன் மூலோபாயப் பயணத்தில் இணைவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்’ என நிறுவனத்திற்கு தனது மிகச்சிறந்ததை வழங்குவதாக உறுதியளிக்கும் சந்தர்ப்பத்தில் சசித் கருத்துத் தெரிவித்திருந்த அதேவேளை, ‘நான் எனது பணியினை AIA இல் இருந்தே ஆரம்பித்திருந்தேன். AIA என் உள்ளத்தில் மிகவும் சிறப்பான ஒரு இடத்தையே பெற்றிருந்தது. ஏனெனில், AIA எனது தொழில் அபிலாஷைகளை வேகமாக அடைவதற்கு அதிசிறந்த அடிப்படைத் தளத்தையே எனக்கு வழங்கியிருந்தது. எனக்காக அனைத்தும் ஆரம்பித்த இடத்திலிருந்து மீண்டும் பயணிக்கப் போவதில் நான் மிவும் ஆவலாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றேன். AIA அணியுடன் இணைந்து இந்த வணிகத்தை முன்னோக்கி வெற்றிகரமாகப் பயணிக்கச் செய்வதில் உதவுவதற்கு நான் உறுதி பூண்டிருக்கின்ற அதேவேளை, எங்களுடைய பிரதான ஈடுபாட்டுக்குரிய விடயமாக இருக்கும் மக்கள் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், மிகச்சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் AIA இன் குறிக்கோளுடன் இந்த எழில் மிகுந்த தீவு முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கையில் ஒரு அர்த்தமுள்ள தாக்கத்தையும் இது ஏற்படுத்தும்" என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

இஸ்லாத்தில்

# இஸ்ராவும் மிஃராஜும் பெற்றுள்ள முக்கியத்துவம்

**இஸ்ரா என்பது, நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து பலஸ்தீனிலுள்ள குத்ஸ் நகருக்கு, அல்லது மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு இரவு நேரம் பூமியில் அழைத்துச் செல்லப்பட்ட பயண நிகழ்வாகும்.**

**மி.ஃராஜ் என்பது, பூமியிலிருந்து வானத்தை நோக்கி, அல்லது குத்ஸிலிருந்து எந்த தனி மனிதர்களோ ஜின்களோ வானவர்களோ சென்றடையாத சித்ரதுல் முன்தஹாவை நோக்கி நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட பயணமாகும்.**

இவ்விரு பயணங்களும் நபி (ஸல்) அவர்களது வாழ்வின் ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தன. நபி (ஸல்) அவர்கள் மக்காவில் கொடுந்துன்பம் தாளாது தாஇபை நோக்கி பயணிக்கிறார்கள். அங்கு அவர்கள் சொல்ல முடியாத துயரங்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். தூண்டப்பட்ட சிறுவர்கள், அடிமைகள், மடையர்கள் நபியவர்கள் மீது கல்லெறிகிறார்கள். தலையில் காயம் பட்டு இரத்தம் வழிந்தோடுகிறது. இத்தகைய நிலையில் கூட அப்பிரதேசத்தை அழிக்க வந்த மலக்குகளிடம் 'அவர்களது பரம்பரையிலிருந்து அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்கள், அவனை நிராகரிக்காதவர்கள் தோன்றுவதையே நான் எதிர்பார்க்கிறேன்''என்று கூறுகின்றார்கள். நபியவர்களின் அன்புணர்வையும், தஃவா நோக்கையும் நாம் உணர்ந்து செயற்பட வேண்டும். இதன் தொடரில் தான் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் வழங்கும் விதமாக அல்லாஹூத் தஆலா இப்பயணத்தை ஏற்பாடு செய்கிறான். பூமியில் இருப்பவர்கள் உங்களைப் புறக்கணித்தாலும் வானத்திலிருப்பவர்கள் உங்களை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற உணர்வு நாம் அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய ஒரு விடயமாகும். மனிதர்கள் எங்களைத் தடுத்தாலும் அல்லாஹ் எங்களை வரவேற்கிறான் என்ற உணர்வு நபியவர்களை எந்தளவு மகிழ்வூட்டியிருக்கும்.

அல்லாஹூத்தஆலா இப்பயணத்தின் மூலம் ஹிஜ்ரத்தின் பின்னரான சமூக வாழ்விற்கு நபி(ஸல்) அவர்ளைத் தயார்படுத்தினான். அனைத்து அரபிகளும் ஒன்றிணைந்து நபியவர்களை எதிர்த்த போதும் வீரியத்தோடு முன்னோக்கிச் செல்ல இது உந்து சக்தியைக் கொடுத்தது. அறபுலக சிலை வணங்கிகள், பாரசீக நெருப்பு வணங்கிகள், தௌராத்தைத் திரிபுபடுத்தியவர்கள், ஏகத்துவத்தைக் குழப்பியடித்தவர்கள், பைஸாந்திய, ரோமானியப் பேரரசுகள் இம்மார்க்கத்தை எதிர்த்து நின்ற போதிலும் நபியவர்கள் சவாலை எதிர்க்கொண்டு தாக்குப்பிடித்தார்கள். எத்துனை சவால்கள் எம்மை நோக்கி வந்தாலும் இஸ்லாத்திற்காக துணிவோடு இயங்கும் உணர்வை இந்நிகழ்வு எம்மில் ஏற்படுத்தக்கூடியதாகும்.

இம்மார்க்கத்தை இவ்வுலகில் நிலைநாட்டுவதற்கான பெரியதொரு அத்தாட்சியையே இந்நிகழ்வு மூலம் அல்லாஹ் காட்டுகின்றான்.'தனது அத்தாட்சியை காட்டுவதற்காக மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து அருள்சூழப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு தனது அடியானை அழைத்துச் சென்ற அல்லாஹ் தூய்மையானவன்'. (அல் குர்ஆன் 17:01)

**'அவர் அல்லாஹ்வின் மிகப்பெரிய அத்தாட்சியை கண்டுகொண்டார்'.**

**(அல் குர்ஆன் 53:18)**

காட்டப்பட்ட அத்தாட்சிகள் மூலம் அல்லாஹ் நபியவர்களின் உள்ளத்தைப் பலப்படுத்தினான். அவரது நாட்ட சக்தியை அதிகரித்தான். பலதரப்பட்ட அசத்திய சக்திகளை எதிர்கொள்ளும் திராணியை வழங்கினான். உலகில் தன்னை இலாஹ் என்று பறை சாற்றிய பிர்அவ்னிடம் மூஸா நபியை அனுப்பிய போது இத்தகைய அத்தாட்சியைத்தான் அல்லாஹ் காட்டினான். ஆறுதலாகவும் எதிர்காலத்துக்கு தயார்படுத்தலாகவும் இவ்வத்தாட்சிகள் காணப்பட்டன.

நபி (ஸல்) அவர்களுக்கு இஸ்ராவும் மிஃராஜும் ஒரு கௌரவிப்பாகவும், ஆறுதலாகவும், தயார்படுத்தலாகவும் அமைந்தது. முஸ்லிம்களின் எதிர்கால வாழ்விலும் அது அவ்வாறே இருக்க வேண்டுமென்பது இறைநியதி. எனவே தான் அன்றையதினமே கடமையாக்கப்பட்ட தொழுகையை வழங்கினான்.

சில முக்கியமான விடயங்களை செய்தியாகவோ, கட்டளையாகவோ மாத்திரம் பிறப்பிக்காது தூதுவர்களை தம்மிடம் அழைத்து, ஆலோசித்து, உபதேசித்து கட்டளை பிறப்பிப்பது நாடுகள் பொதுவாக கடைப்பிடிக்கும் வழமையாகும். இவ்வகையில்தான் மனித குலத்துக்கான தூதுவரை அல்லாஹ் தன்னிடம் அழைத்து தொழுகையை வழங்குகின்றான். இதனூடாக இதன் முக்கியத்துவத்தை தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் உணர்த்துகின்றான். இது, குறித்த நேரத்தில் அல்லாஹ்வை சந்திப்பதற்கான ஒரு ஏற்பாடாகும். ஐந்து முறைதான் செயல்பட்டாலும் ஐம்பது முறை இயங்கிய நன்மை கிடைக்கும் ஒரு கொடைதான் தொழுகையாகும்.

தொழுகை அனைத்து முஸ்லிம்களதும் மிஃராஜாகும். நபி(ஸல்) அவர்கள் தொழுகை மூலம் அல்லாஹ்வோடு உரையாடினார்கள். எமக்கு அதன்மூலம் அல்லாஹ்வை நெருங்கவும், அவனுடன் உரையாடவும் முடியும். **அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள் 'எனக்கும் எனது அடியாருக்குமிடையில் தொழுகையை இரு பகுதிகளாக பிரித்துவிட்டேன். எனது அடியான் கேட்பது அங்கு கிடைக்கும். எனது அடியான் 'அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்று கூறினால் 'எனது அடியான் என்னை புகழ்ந்துவிட்டான்' என்று நான் சொல்வேன். 'அர்ரஹ்மானிர்ரஹீம்' என்று சொன்னால் 'எனது அடியான் என்னை பாராட்டிவிட்டான்' என்று கூறுவேன். 'மாலிகியவ்மித்தீன்' என்று கூறினால் 'எனது அடியான் என்னை சங்கைப்படுத்திவிட்டான்' என்று நான் கூறுவேன். ''இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன்' என்று சொன்னால் ''இது எனக்கும் எனது அடியானுக்கும் இடையிலான விடயம் எனது அடியான் எதனை கேட்கிறானோ அது கிடைக்கும்' என்று கூறுவேன். 'இஹ்தினஸ்ஸிராதல் முஸ்தகீம்.... என்று இறுதிவரை கூறினால்' 'இது எனது அடியானுக்குரியது. அவன் கேட்டது அவனுக்கு கிடைக்கும்' என்று கூறுவான்**

**(ஆதாரம் : முஸ்லிம்,திர்மிதி, நஸாஈ)**

அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து நேரடியாக தன்பால் அழைத்துச்செல்லாமல் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஏன் அழைத்துச்சென்றான் ? ஏன் அங்கு நபியவர்கள் ஏனைய நபிமார்களுக்கு இமாமாக தொழுவித்தார்கள் ? இதன் அர்த்தத்தை நாம் நின்று நிதானமாக சிந்திக்க வேண்டும். மஸ்ஜிதுல் அக்ஸாவின் முக்கியத்துவத்தை இங்கு நாம் உணர்வதுபோன்றே தலைமைத்துவ மாற்றத்தையும் கண்டுகொள்கிறோம். முன்பிருந்த சமூகங்களிடமிருந்து முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவரது சமூகத்திற்கும் தலைமைத்துவம் மாறுகின்றது. பிராந்திய, கிராமிய மட்டத்தோடு சுருங்கியிருந்த தலைமை சர்வதேசத் தன்மை பொருந்தியதாக அனைத்து மக்களுக்குமாக மாற்றப்படுகிறது. கால இட வரையறைக்கு அப்பாட்பட்ட உலகம் அழியும்வரை நிலைத்துநிற்கும் விதமான தலைமை தோற்றுவிக்கப்படுகிறது.

ஆனால் மனிதகுலத்துக்கு தலைமைத்துவம் வழங்குமளவுக்கு எமது தலைமைத்துவ பண்புகளை நாம் வளர்த்துக்கொண்டிருக்கிறோமா? எமது செயல்பாடுகள் தலைமைவகிக்கும் சமூகத்திற்கு பொருத்தமானதாக உள்ளனவா? இதற்கான அறிவார்ந்த, பண்பாட்டு, செயல்பாட்டு ஒழுங்குகள் குறித்து எமது கவனஈர்ப்பு என்ன? இது குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இங்கு இரு பள்ளிவாயில்கள் இணைக்கப்படுகின்றன. ஒன்று இஸ்ரா ஆரம்பிக்கப்பட்ட மஸ்ஜிதுல் ஹராம் மற்றது அது முடிவடைந்த மஸ்ஜிதுல் அக்ஸா. அது மாத்திரமல்லாமல் மஸ்ஜிதுல் அக்ஸாவை சூழ பரகத் செய்யப்பட்டுள்ளது என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுதான் முஸ்லிம்களின் முதல் கிப்லாவுமாகும். மக்காவில் மூன்று வருடங்களும் மதீனாவில் ஆறு மாதங்களும் அக்ஸாவை நோக்கியே தொழுகை நிறைவேற்றப்பட்டது. புனித யாத்திரை மேற்கொள்ள முடியுமான பள்ளிவாயில்கள் மூன்றில் அதுவும் ஒன்றாகும். மற்றவை மக்காவில் உள்ள அல்மஸ்ஜிதுல் ஹராமும், மதீனாவில் உள்ள அல் மஸ்ஜிதுன் நபவியுமாகும்.

அக்ஸா என்பது நிலமல்ல அது எமது நம்பிக்கை கோட்பாடு, எமது அகீதா. எனவேதான் வரலாறு நெடுக முஸ்லிம்கள் அதன் முக்கியத்துவத்தை அறிந்து புனிதத்தை பேணிவந்தனர். என்றாலும் இவ்விவகாரம் அரபிகளுக்கு மாத்திரமுரிய விவகாரமல்ல. ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையாகும்.

அக்ஸா என்பது உமர் (ரழி) அவர்களால் கட்டப்பட்ட 'அல் மஸ்ஜிதுல் கிபலி' மற்றும் அப்துல் மலிக் இப்னு மர்வான் என்ற உமைய ஆட்சியாளரால் நிர்மாணிக்கப்பட்ட 'குப்பதுஸ் ஸக்ரா' என்ற இரு பள்ளிவாசல்களும் மற்றும் பல வரலாற்று சின்னங்களும் உள்ளடங்கிய பரந்த பிரதேசமாகும். 'ஸக்ரா' என்பது கற்பாறையைக் குறிக்கிறது. நபி (ஸல்) அவர்கள் இப்பாறையிலிருந்தே 'மிஃராஜ்' பயணத்தை ஆரம்பித்ததாக நம்பப்படுகிறது. அதன்மேலாக அமைக்கப்பட்ட கும்மட்டமே அந்த அழகிய பள்ளிவாசலாகும்.

இஸ்ராவும் மிஃராஜும் முடிவடைந்து விட்ட ஒரு நிகழ்வாக இருந்தாலும் அது எமக்கு தருகின்ற ஏராளமான பாடங்களும் படிப்பினைகளும் நிலையானவையாகும். அவற்றை சிந்தித்து உணர்ந்து செயற்படுவது எமது கடமையாகும்.

அஷ் ஷெய்க் யூ.கே.றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# அன்பும் கருணையும் பொழியும் மார்க்கம்

இஸ்லாம் சமாதானம், அன்பு, கருணை என்பவற்றை வலியுறுத்தும் மார்க்கமாகும். இதற்கு இஸ்லாம் என்ற சொல்லில் பொருளில் பொதிந்துள்ள அமைதி என்ற சொல்ல நல்ல எடுத்துக்காட்டு.அதே நேரம் முஸ்லிம்கள் தாங்கள் செய்யும் எந்தச் செயலின் துவக்கத்திலும் 'பிஸ்மில்லா ஹிர் ரஹ்மா னிர்ரஹீம்' என்பர். அதாவது அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)' என்பதாகும்.

அதேபோன்று ஒரு முஸ்லிம் பிறரை சந்திக்கும் போதெல்லாம் கூறும் முகமன் கூட 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்பது 'சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக' என்பதனைக் குறிப்பதே. இவ்வாறு வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் அன்பையும் சாந்தியையும் சமாதானத்தையும் இம்மார்க்கம் போதித்து வலியுறுத்துகிறது.

மேலும் முஸ்லிம்கள் வழிபடுகின்ற அகில உலகங்களின் ஏக இறைவனும் தன்னைப் பற்றி அவனுடைய இறுதிவேதத்தில் கூறும் போது **'அவன் மிகவும் மன்னிப்பவன், மிக்க அன்புடையவன்' (85:14)** என்றும், **'மேலும், உங்கள் நாயன் ஒரே நாயன், அவனைத் தவிர வேறு நாயனில்லை அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்'(2:163)** என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது.

அத்தோடு உலக இறுதி நாள் வரை தோன்றக்கூடிய முழு மனித குலத்துக்கும் நேர்வழி காட்ட இறைவன் அனுப்பிய தன்னுடைய இறுதி தூதரைப் பற்றி அவன் தன் திருமறையில், **'(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக – ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை' (அல்குர்ஆன் 21:107)** என்று குறிப்பிட்டுள்ளான். அத்தோடு நபி (ஸல்) அவர்களின் கனிவைப் பற்றி புகழ்ந்து பாராட்டவும் அல்லாஹ் தவறவில்லை.

**'அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர், (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள். எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்தி விடுவீராக, அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக, தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும். பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக! – நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்'. (அல்குர்ஆன் 3:159)**

இதேவேளை நபி (ஸல்) அவர்களும் அன்பையும் கருணையையும் வலியுறுத்தியுள்ளார்கள். குறிப்பாக **'(படைப்பினங்களின் மீது) கருணை காட்டாதவர் (படைத்தவனால்) கருணை காட்டப்படமாட்டார்' (ஆதாரம்: புஹாரி)** என்றும் **'மனிதர்களின் மீது கருணை காட்டாதவனுக்கு அல்லாஹ் கருணைகாட்டமாட்டான்' (ஆதாரம்: புஹாரி)** என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

அந்த வகையில் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் ஒன்றுவிடாது பின்பற்றுவது மிக மிக முக்கியமானது. அன்னாரின் வாழ்வில் நடந்த அனைத்து சம்பவங்களும் ஒவ்வொருவரும் பின்பற்றி நடக்க வேண்டிய முன்மாதிரிகளாகும். ஒருவர் இதை விட்டும் வேறு ஒரு பாதையை பின்பற்றினால் அவர் வழிதவறியவராகவே கருதப்படுவார். இந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருக்கின்ற அன்பையும் கருணையையும் மற்ற ஜீவன்களிடத்தில் காட்டாத எவரும் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவராக மாட்டார்.

இஸ்லாத்தில் விபசாரம் கடுமையான தண்டனைக்குரிய குற்றம். ஆனால் விபசாரி ஒருவர் தாகத்தினால் தவித்த நாய் ஒன்றுக்கு தண்ணீர் புகட்டியதன் காரணமாக அவரின் பாவங்கள் இறைவனால் மன்னிக்கப்பட்டு அவள் சுவர்க்கம் சென்றுள்ளாள். இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள், **'விபசாரியான ஒரு பெண், ஒரு கிணற்றின் விளிம்பில் தன்னுடைய நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்த நாயொன்றைக் கடந்து சென்றாள். அந்த நாயைத் தாகம் சாகடிக்கவிருந்தது. அதைக் கண்ட அப்பெண் உடனே தன் காலுறையைக் கழற்றி அதைத் தன் முந்தானையில் கட்டி (கிணற்று) நீரை இறைத்து அதற்குக் கொடுத்தாள். எனவே, அது பிழைத்தது. அவள் ஓர் உயிருக்குக் காட்டிய இக்கருணையினால் அவளுக்கு (பாவ) மன்னிப்பு வழங்கப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)**

இந் நபிமொழியின் படி, இஸ்லாம் கருணை, அன்புக்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் அளித்துள்ளது என்பது தெளிவாகிறது. அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் தன்னைக் கொல்ல வந்தவரிடமே கருணை காட்டி மன்னித்துள்ளார்கள். இது தொடர்பில் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரழி) அறிவித்துள்ள ஹதீஸ் ஒன்று புஹாரியில் பதிவாகியுள்ளது.

**('தாத்துர் ரிகாஉ' எனும்) நஜ்துப் போருக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் நாங்கள் சென்றோம். (போரை முடித்துக் கொண்டு திரும்பிய போது) நபி(ஸல்) அவர்கள் கருவேல முள் மரங்கள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கினை அடைந்தபோது மதிய (ஓய்வு கொள்ளும் நண்பகல்) நேரம் வந்தது. அவர்கள் ஒரு மரத்திற்குக் கீழே நிழல் பெற்று ஓய்வெடுத்தார்கள். தம் வாளை அம்மரத்தில் தொங்கவிட்டார்கள். (ஆங்காங்கே இருந்த) மரங்களின் கீழே மக்கள் பிரிந்து சென்று நிழல் பெற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். நாங்கள் இவ்வாறு இருந்து கொண்டிருந்தபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களை அழைத்தார்கள். உடனே நாங்கள் (அவர்களிடம்) வந்தோம். அப்போது ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் அமர்ந்து கொண்டிருந்தார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'நான் தூங்கிக் கொண்டிருந்தபோது என்னிடம் இவர் வந்து என்னுடைய வாளை உருவி எடுத்தார். உடனே நான் விழித்துக் கொண்டேன். என்னுடைய வாளை உருவிய நிலையில் என்னுடைய தலைமாட்டில் இவர் நின்றிருந்தார். 'என்னிடமிருந்து உங்களைக் காப்பது யார்?' என்று கேட்டார். நான், 'அல்லாஹ்' என்று பதிலளித்தேன். உடனே அவர் வாளை உறையிலிட்டார். பிறகு அவர் அமர்ந்தார். அது இவர்தான்' என்று கூறினார்கள். பிறகு அவரை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தண்டிக்காமல் (மன்னித்து) விட்டார்கள்.**

அதேநேரம் ஒருவருக்கு ஒருவர் கோபம் கொள்வதைத் தவிர்த்து அன்பு காட்டிக்கொள்ளுமாறும் அன்னார் வலியுறுத்தியுள்ளார்கள். இது குறித்த ஹதீஸும் புஹாரியில் பதிவாகியுள்ளது.

**'ஒருவருக்கொருவர் கோபம் கொள்ளாதீர்கள். பொறாமை கொள்ளாதீர்கள். பிணங்கிக் கொள்ளாதீர்கள். அல்லாஹ்வின் அடியார்களே! (அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள். ஒரு முஸ்லிம் தம் சகோதரருடன் (மனஸ்தாபம் கொண்டு) மூன்று நாள்களுக்கு மேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று'** என்றும் அன்னார் கூறினார்கள்.

இவ்வாறு அன்பையும் கருணையையும் போதித்து வலியுறுத்தும் நபிமொழிகள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்நபிமொழிகளை உயிரோட்டமாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு இறைவிசுவாசிக்கும் உள்ளது.

எனவே அல் குர்ஆனினதும் நபிமொழிகளதும் வழிகாட்டல்களின் அடிப்படையில் அன்பையும் கருணையையும் பயன்படுத்துவோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அருள்களை அடைந்திடுவோம்.

அபூமுஷீரா...

# பாவங்களைத் தவிர்ந்து கொள்வோம்

மனிதனது வாழ்க்கைப் பாதையில் இடம்பெறுகின்ற நாளாந்த செயல்பாடுகளில் பாவங்களையும் புண்ணியங்களையும் காண முடிகின்றன. இதில் பாவமான செயல்கள் என்பது உள்ளத்தைக் கறைபடுத்தும் கொடிய வழிமுறைகளாக அமைந்து விடுகின்றன. பாவமான செயல்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஆரம்பத்தில் அதன் தாக்கம் விளங்காவிட்டாலும் போகப் போக அதன் விளைவு ஆபத்தாக இருக்கலாம்.

உலகில் தோன்றிய உத்தமர்கள் யாவரும் பாவமான செயல்களை ஒதுக்கியுள்ளார்கள். அதற்கு மிகவும் பயந்தும் இருக்கிறார்கள். இறைவன் மீது பக்தி கொண்டவர்கள் பாவங்களை நீக்கி சதா புண்ணிய செயல்களை செய்து நன்மைகளைத் தேடிக்கொள்ள முற்படுவார்கள். அல்லாஹ்வின் நாட்டமின்றி எவரையும் நல்வழிக்குத் திருப்ப முடியாது. சதா பாவமான காரியங்கள் செய்தே பழக்கப்பட்ட ஒருவன் நன்மையான செயல்கள் செய்வதில் விருப்பம் உள்ளவனாக இருப்பான் என்பது சந்தேகம்.

அதாவது பொய், களவு, சூது, கொள்ளை, அநாசாரம் உள்ளிட்ட பல தீமைகளைச் செய்வது அவனுக்கு சர்வசாதாரணமாகி விடுகின்றன. அதனால் ஏற்படும் தீயவிளைவுகள் பற்றியும் அவன் பொருட்படுத்த மாட்டான்.

இதுபற்றி அல்லாஹ்தஆலா அல்குர் ஆனிலே இவ்விதமாக குறிப்பிட்டிருக்கிறான். 'நீங்கள் பகிரங்கமான பாவத்தையும் இரகசியமான பாவத்தையும் விட்டு விடுங்கள். ஏனென்றால் எவர்கள் பாவத்தைச் சம்பாதிக்கின்றாரோ அவர்கள் தாங்கள் தேடிக்கொண்ட தீமைகளுக்கு தக்க பலனை அனுபவிப்பார்கள்.(அல் குர்ஆன்)

அல்லாஹ் மீது உண்மையான பக்தி கொண்டவர்கள் திருக்குர்ஆனின் இவ்வசனத்தையிட்டு மிகுந்த மன அச்சம் கொள்வார்கள். சூது விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்ட ஒருவன் அதன் மூலம் கிடைக்கும் பயனைச் சுவைத்துக் கொண்டே இருந்தால் நாட் செல்லச் செல்ல இருக்கும் சொத்து சுகங்களையும் இழக்கக்கூடிய நிலையை அவன் சந்திக்கிறான். அந்த சந்தர்ப்பத்தில் தான் இவ்வளவு நாள் செய்து வந்த பாவமான செயல்களின் காரணமாக நான் இந்நிலைக்கு வந்து விட்டேன் என்று மனம் வருந்துவான். ஆனால் காலம் கடந்த பின்னரான மன வருந்துதலால் என்ன பயன் இருக்கிறது.

ஏதேனும் ஒரு பாவத்தை செய்துவிட்டால் அதற்கு அல்லாஹ் விடத்தில் உடனுக்குடன் பாவ மன்னிப்பு கேட்பதன் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள வழி இருக்கிறது. அது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவது அவசியம். குறிப்பாக அல்லாஹ்வை தொழுதல், துஆ கேட்டல், தான தர்மங்கள் செய்தல், பிறருக்கு உதவுதல், சிறியவர்கள் மீது அன்பு காட்டுதல், வளர்ந்தவர்கள் மற்றும் முதியோருடன் மரியாதையோடும் நடந்துகொள்ளுதல் போன்ற பல புண்ணிய காரியங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான செயற்பாடுகளில் தினமும் ஈடுபட்டு எமது நன்மைகளை அதிகரித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இதை விடுத்து அல்லாஹ் எமக்களித்துள்ள வாழ்வைக் கெடுக்கும் பாவமானதும் மோசமானதுமான செயல்களில் ஈடுபடுவதானது தீமைகள் பெருகவே வழி வகுக்கும்.

ஆகவே பாவச் செயல்களைத் தவிர்ந்து கொள்ளும் வகையில் எமது வாழ்வை அமைத்துக் கொள்வோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் நல்லருள்களைப் பெற்றுக்கொள்வோம்.

மாத்தறை எம்.ஏ.அத்தாஸ்...

# பாராளுமன்றத்தை கூட்டுமாறு சு.ம.கூ. பிரதமருக்கு கடிதம்

## கூட்டமைப்பு MP க்கள் கையெழுத்திட்டு கோரிக்கை

பாராளுமன்றத்தை கூட்டுமாறு கோரி சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடனான கடிதம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தின் பிரதிகள் சபாநாயகர், எதிர்க் கட்சியை அங்கத்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சுதந்திர மக்கள் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வாக்கு சீட்டு விநியோக பணிகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டமை நாட்டின் ஜனநாயகத்திற்கு கடும் அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளதாக அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உரிய வாக்கு சீட்டுக்களை விநியோகிப்பதற்காக திறைசேரி நிதி வழங்காமை ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை தெளிவாக எடுத்துக்காட்டுவதாக சுதந்திர மக்கள் கூட்டமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கப்ராலுக்கு எதிரான...

பொறுப்பு கூற வேண்டுமெனவும் அதன் காரணமாக அவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்குமாறு கோரி முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சோறு, கொத்து, பிரைட் ரைஸ்...

அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மின் கட்டண அதிகரிப்பினால் சோறு, பிரைட் ரைஸ், மற்றும் கொத்து ஆகியவற்றின் விலைகளும் 10 வீதம் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அப்பம் உள்ளிட்ட ஏனைய கோதுமை மா உணவு பொருட்களின் விலை அதிகரிக்கப்படாதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சப்ரகமுவ பல்கலை...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்ய விசாரணைகள் நடைபெறுவதாக சமனலவெல பொலிசார் தெரிவித்தனர்.

### தேர்தல் தொடர்பிலான...

பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் மேற்படி செயற்பாடு காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்றத்தின் சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளதுடன் அதுதொடர்பில் விடயங்களை விசாரணைசெய்யவேண்டுமென மேற்படி யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரி பாராளுமன்றத்தில் 14 எம்.பிக்களின் கையொப்பத்துடன் கடிதமொன்றையும் சபாநாயகருக்கு எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளது. அந்த யோசனை பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### ஜனக்க ரத்நாயக்கவின்...

அலுவலகத்தை மூடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு தரப்பினர் அங்கு வருகைதந்து அந்த அலுவலகத்திலுள்ள முக்கியமான ஆவணங்களை அழிப்பதற்கு முயற்சித்தனரென கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

அதன்படி கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து நீதிமன்றம் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளதுடன் அந்த உத்தரவுக்கமையவே பொது பயன்பாட்டு ஆணைக்குழு தலைவரின் அலுவலகம் சீல்வைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தற்போது வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொண்டுள்ளதால் அவர் நாடு திரும்பிய பின்னர் மேற்படி அலுவலகத்தை மீளத்திறப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக சைவப் பேரவை நடத்தும் சிவராத்திரி கொடிவாரம் நாளை



மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை வழமைபோல இவ்வருடமும் நாடு முழுவதும் சைவக் கொடி வாரத்தையும், கொடி தினத்தையும் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் மஹா சிவராத்திரி தினமான நாளை 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலய முன்றலில் நடைபெற விருக்கின்றது.

உலக சைவப் பேரவை இலங்கைக் கிளையின் தலைவர் கலாநிதி சின்னத்துரை தனபாலா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வண. ஸ்ரீமத் அக்ஷராத்மானந்த மகாராஜ், சர்வதேச இந்துமதபீடச் செயலாளர் வண. கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, மயூராபதி ஸ்ரீ பத்திரிகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெ. சுந்தரலிங்கம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் முன்னாள் செயலாளருமான திருமதி. சாந்தி நாவுக்கரசன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளரும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான அ. உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவில் அறங்காவலர் சபைத் தலைவர் ஏ. மாணிக்கவாசகர் முதலாவது கொடியைப் பெற்று நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது அந்தந்த மாவட்டத்திலுள்ள சமய நிறுவனங்கள் மற்றும் அறநெறி பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், பல வகையிலும் பாதிக்கப்பட்ட வசதியற்ற இந்து மக்களின் வாழ்வாதாரத்திற்கும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### மாணவரிடையே கைகலப்பு

# சப்ரகமுவ பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல் வரை பூட்டு

*லோரன்ஸ் செல்வநாயகம்*

சப்ரகமுவ பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க விடுதி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பீடங்களிலும் கல்விகற்கும் 2020/2021 மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேறுமாறு பல்கலைக்கழகம் அறிவித்தது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலும் கல்வி கற்கும் 2020/2021 மாணவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் இடம்பெறாதென்றும் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க, அனைத்து பீடங்களிலுமுள்ள மாணவர்கள் 2020/2021 மாணவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாணவர்களையும் நேற்றைய தினம் பிற்பகல் நான்கு மணிக்குப்பின்னர் பல்கலைக்கழக வளாகத்தில் பிரவேசிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

### இலங்கை இந்தியாவுக்கிடையே...

இந்தத் திட்டம் இதுவரை சிறிய அளவிலான முன்னேற்றத்தையே எட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ள மிலிந்த மொரகொட, இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் மின் கட்டமைப்பை உருவாக்கி, தீவில் உற்பத்தி செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்க முடியுமென இலங்கை நம்புவதாகவும் கூறியுள்ளார். இலங்கையின் பொருளாதார மீட்சித் திட்டத்தின் முக்கியப் பகுதியானது, தீவின் வடக்கில் அதன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதில் தங்கியுள்ளது. இங்கிருந்து, எல்லை தாண்டிய மின்சார பரிமாற்ற கேபிள் மூலம் மின்சாரத்தை தென்னிந்தியாவுக்கு கொண்டு செல்ல முடியுமென நம்பப்படுகிறது.

### தபால் மூல வாக்களிப்பு...

எவ்வாறாயினும், தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறவில்லையாயின் அதற்கான திகதியை மாற்றுவது தொடர்பில் தீர்மானிக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதற்கு முன்னர் வாக்குசீட்டு அச்சிடல் பணிகளுக்கான நிதி வழங்குமாறு அரச அச்சக கூட்டுத்தாபனத் தலைவர் கோரப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தேர்தல் நடத்துவது தொடர்பில்...

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தேர்தல் கண்காணிப்பு தேசிய மத்திய நிலையம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளது. அந்த மத்திய நிலையம் அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பெப்ரவரி 13 ஆம் திகதி நாம் கடிதம் ஒன்றின் மூலம் இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடமுள்ளதாக எச்சரிக்கை விடுத்திருந்தோம். அதற்காக திறைசேரி அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழு ஆகிய தரப்பினர்கள் மத்தியில் பேச்சுவார்த்தையை நடத்தி தீர்வுகாணுமாறு கேட்டுக்கொண்டிருந்தோம். அந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருந்தால் தற்போதைய நிலை உருவாகாமல் தேர்தல் நடத்துவதற்கான சிறந்த இணக்கப்பாட்டிற்கு வரக்கூடிய நிலைமை உருவாகியிருக்கும் என நாம் நம்புகிறோம். அவ்வாறில்லாமல் தற்போது அதிகாரிகள் மத்தியில் அச்சுறுத்தல் விடுப்பது உள்ளிட்ட அச்சத்தை உண்டுபண்ணுவதன் மூலம் சில விடயங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சில நபர்கள் சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சமூக வலைத்தளங்கள், அரசியல் கூட்டங்கள் மற்றும் ஊடக சந்திப்புகளை உபயோகப்படுத்தி பாரிய பாதிப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளது பெயர்களும் குறிப்பிடப்பட்டு அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

அரசாங்க அச்சகத்தின் தலைவர் கங்காணி லியனகே மற்றும் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகிய இருவரும் நடத்தும் நாடகத்தினால் சில அரசியல் தலைவர்கள் மூலம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் விடுக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் நாம் எமது அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### சிறைக்கைதிகளை உறவினர்கள்...

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். சிறைச்சாலைகள் இணையத்தளத்துக்குச் சென்று பதிவுசெய்துகொள்வதன் மூலம் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கான நேரம் மற்றும் தினங்களை ஒதுக்கிக்கொள்ளக்கூடிய வசதிகளை வழங்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, சிறைக் கைதிகள் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் காலத்தை நீடிக்கும்போது அதற்கான தினத்தை பெற்றுக்கொள்வதற்கும் வீடியோ தொழில்நுட்பம் மூலம் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் சிறைக்கைதிகளில் நீண்டகாலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் செயற்பாடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின்படி அவர்களை விடுதலை செய்வதற்கும் தண்டனைக் காலத்தை குறைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, 16 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்ட போதைப் பொருளுக்கு அடிமையானதன் காரணத்தால் புனர்வாழ்வு பெற்றுக்கொண்டுள்ள இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும்நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஐந்து வருட கால திட்டமொன்றின் கீழ் 9 முக்கிய யோசனைகள் முன்வைக்கப்பட்டு நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு வேலைத்திட்டமொன்றை தயாரிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைக்குள் சிறைக்கைதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துதல் மற்றும் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல் கையடக்கத்தொலைபேசி உபயோகித்தல் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் வகையில் சிறைச்சாலைகள் கட்டமைப்பு மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார்துறையினரின் ஒத்துழைப்புடன் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் சிறந்த திறமையுடைய சிறைக்கைதிகளின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் சிறு குற்றங்களுக்காக சிறையில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் சிறைக்கைதிகளை வீடுகளில் வைப்பதற்கும் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் முறைமையொன்றை நடைமுறைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரி செலுத்தும் மக்களின் நிதி மூலமே சிறைக்கைதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் அவர்களின் உணவுக்கான செலவாக 4.7 பில்லியன் செலவிடப்படுவதுடன் சிறைச்சாலை கட்டமைப்புக்காக மேலும் 11 பில்லியனையும் வருடாந்தம் செலவிடவேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மின் கட்டணம் 66 சத வீதத்தால்...

அலகுகளுக்காக இதுவரை அறவிடப்பட்டுவந்த 8 ரூபா கட்டணம் 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்கிணங்க, 31 முதல் 60 வரையான அலகுகளுக்காக இதுவரை அலகொன்றுக்கு அறவிடப்பட்டுவந்த 10 ரூபா கட்டணம் தற்போது 37 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 61 முதல் 90 வரையிலான அலகுகளுக்கு இதுவரை அறவிடப்பட்டு வந்த அலகொன்றுக்கான 16 ரூபா தற்போது 42 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

91 அலகு முதல் 120 வரையான அலகு மற்றும் 121 முதல் 180 அலகு வரையான மின்கட்டணத்திற்கு இதுவரை அறவிடப்பட்டு வந்த 32 ரூபா கட்டணம் தற்போது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 181க்கு அதிகமான அனைத்து அலகுகளுக்கும் தற்போது அறவிடப்பட்டு வரும் 75 ரூபா கட்டணத்தில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மின்சாரசபை தெரிவித்துள்ளது.

அதேவேளை முதல் 30 அலகுகளுக்கான நிலையான கட்டணம் 400 ரூபாவரையிலும் 31இலிருந்து 60 அலகுக்கான நிலையான கட்டணம் 550 ரூபாவாகவும் 61 முதல் 90 அலகு வரையிலான நிலையான கட்டணம் 650 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 91 அலகு முதல் 120 அலகுவரை மற்றும் 121 முதல் 180 அலகுகளுக்கான நிலையான கட்டணம் 1500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதேவேளை மதவழிபாட்டுத் தலங்கள், தர்மசாலைகள் ஆகியவற்றுக்கான முதல் 30 அலகுகளுக்காக அறவிடப்பட்டு வந்த 8 ரூபா கட்டணம் 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 31 முதல் 90 அலகு வரையிலான அலகுகளுக்கு 15 ரூபாவாக இருந்த கட்டணம் 37 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தர்ம நிலையங்களுக்கு முதல் 30 அலகுகளுக்கு அறவிடப்பட்டு வந்த நிலையான கட்டணம் 90 ரூபாவில் இருந்து 400

ரூபாவரை அதிகரித்துள்ளதுடன் 31 முதல் 90 வரையிலான அலகுகளுக்கு 120 ரூபாவாக இருந்த நிலையான கட்டணம் தற்போது 550 ரூபா வரையும் 180க்கு அதிகமான அலகுகளுக்கு அறவிடப்பட்டு வந்த 1500 ரூபா நிலையான கட்டணம் தற்போது 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் துறைக்கான முதல் 300 அலகுகளுக்கு ஒரு அலகுக்காக அறவிடப்பட்டுவந்த 20 ரூபா தற்போது 26 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க 300 அலகுகளுக்கு அதிகமான ஒவ்வொரு அலகுக்கும் 20 ரூபாவாக இருந்த கட்டணம் தற்போது 26 ரூபாவாக அதிரிக்கப்பட்டுள்ளது.

முதல் 300 அலகுக்காக அறவிடப்பட்டு வந்த 960 ரூபா நிலையான கட்டணம் 1,200 ரூபாவாகவும், 300 அலகுகளுக்கு மேல் கைத்தொழில் துறைகளுக்கு அறவிடப்பட்டு வந்த 1,500 ரூபா நிலையான கட்டணம் தற்போது 1600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொது ஸ்தாபனங்கள் ஹோட்டல்கள் மற்றும் நிறுவனங்களுக்காக 180 அலகுகளுக்கு குறைந்த கட்டணம் ஏற்கனவே 25 ரூபாவாக இருந்துள்ள நிலையில் அதன் அலகொன்றுக்கான விலை 40 ரூபாவாகவும் 180 அலகுக்கு மேலான கட்டணம் 32 ரூபாவிலிருந்து 47 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொது ஸ்தாபனம், ஹோட்டல் மற்றும் அரச நிறுவனங்களுக்கு 180 அலகுகளுக்கு நிலையான கட்டணமாக அறவிடப்பட்டுவந்த 360 ரூபா தற்போது 1,000 ரூபாவாகவும் 180க்கு அதிகமான அலகுகளுக்கு 1,500 ரூபாவாக இருந்த நிலையான கட்டணம் 1,600 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### உலக சாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத்தலைவர் சந்திப்பு



உலக சாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத்தலைவர் செய்கு ஸஜ்ஜாதா அஷ்ஷெய்கு மொஹமட் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி ஹபிழகுல்லாஹ் அவர்களை, எகிப்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நேற்று (16) சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச்செயலாளர் எம்.எம். ஷிஹாப் ஹாஜியார் சந்தித்து உரையாடினார். செய்கு நாயகத்தை சந்தித்த முதல் இலங்கையர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்னாரை இலங்கை வருமாறும் அழைப்பு விடுத்தார்.

# சாயி மத்திய நிலையத்தில் மஹா சிவராத்திரி



கொழும்பு கொட்டாஞ்சேனை பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மஹாசிவராத்திரி தின சாயி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இலங்கையில் உள்ள சாய் ஸ்தானங்களில் சாயி நிலையத்தில் மட்டுமே சிவராத்திரி நிகழ்வுகள் நான்குகால பூஜை நடைபெறவுள்ளன. புட்டப்பத்தியில் பகவான் மகாசமாதியில்வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு நவபிஷேகம் செய்யப்பட்டு சாயி பூஜைகள் நடைபெறும்.

விசேட நிகழ்வாக 'ஈசனுடன் ஓர் இரவு' என்ற தலைப்பில் உலகப்புகழ் பெற்ற ஆன்மீகப்பேச்சாளர் தென்றல் அவர்களின் சொற்பொழிவும், பிரபல சங்கீத ஆசிரியர் திருமதி மொறாயஸ் அவர்களின் இசை விருந்தும் இடம்பெறும்.

### பெப்ரவரி 27 ஆம் திகதிக்குள்...

வரையிலான வகுப்புகளுக்கு பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்க முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், வருடாந்தம் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு 4.5 பில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும், இந்த வருடம் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு 16 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

### மின் துண்டிப்புக்கு முற்றுப்புள்ளி...

நிறுவனங்களுக்காக சூரிய சக்தி மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ள ஜனாதிபதி, அது தொடர்பான பணிப்புரைகளை அமைச்சருக்கும்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

### முஜிபுர். தாக்கல் செய்த மனு...

மக்கள் சக்தி சார்பாக போட்டியிடுகிறார். பிரியந்த ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று (16) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

### புனித மிஃராஜ் தின...

பின்னர் இரவு 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைஸல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உலமாக்களின் விசேட உரைகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் உலமாக்கள், புத்திஜீவிகள், முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் , மஸ்ஜிதுகளின் நிர்வாகிகள் உட்பட திணைக்கள அதிகாரிகள், பொதுமக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் கொழும்பு 12, கெஸல்வத்தை அல் மஸ்ஜிதுந் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலில் இருந்து இந்நிகழ்வுகள் யாவும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளதாகவும் இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் நிகழ்வின் திணைக்கள ஏற்பாட்டாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.முப்தி தினகரனுக்கு தெரிவித்தார்.

### D.I.G. தரத்திலுள்ள...

அதற்கமைய சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவுக்கு பொறுப்பாக செயற்பட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் யு.பீ.ஏ.கே.பீ. கருணாநாயக்க மேல் மாகாண போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் ஜீ.ஐ.டீ.ஆர் விஜேசிங்க , காலி மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதிபொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் எல்.ஏ.யூ.சரத்குமார, மேல் மாகாண குற்றப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண குற்றப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் டபிள்யூ.கே.ஜே.ஆர்.டயஸ், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவுக்கான பிரதி பொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

காலி மாவட்டத்துக்கு பொறுப்பாக பணியாற்றிய பிரதி பொலிஸ் மாஅதிபர் ஏ.எல்.யூ.என்.பீ.லியனகே மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

### மலையகத்தில் இந்திய அரசின்...

தலைமையில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், விசேடமாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மூவர் கலந்துகொண்டிருந்தனர். மலையக மக்களுக்காக இந்தியா வழங்கிய 04 ஆயிரம் வீடுகள் திட்டத்தில் ஒரு சில பகுதிகளில் வீடமைப்புத் திட்டம் இன்னும் முழுமைப்படுத்தப்பாடமல் உள்ளதால், அவற்றை பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக, இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது விளக்கமளித்தார். அத்துடன், இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கமைய, முன்னதாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாதநிலை காணப்படுவதால், மேலதிகமாக தேவைப்படும் உதவிகள் தொர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

### 20,000 ரூபா இலஞ்சம்... 03ஆம் பக்க தொடர்...

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளது.

அதற்கிணங்க மேற்படி முறைப்பாட்டாளர் சந்தேகநபரிடமிருந்து மஹரகம பகுதியில்வைத்து இந்த மருந்தை பெற்றுக்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டு அவரைக் கைதுசெய்துள்ளதாகவும் அந்த ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

# திருகோணமலை துறைமுகத்தில் இரவு நேர கப்பலோட்ட செயற்பாட்டுத் தொகுதியை வழங்கும் நிகழ்வு

## 2023 பெப்ரவரி மாதம் 17ஆந் திகதி திருகோணமலை துறைமுகத்தில்

### திருகோணமலை துறைமுகத்தில் கடல்சார் நடவடிக்கைகளின் அபிவிருத்தி

இலங்கை அரசாங்கத்திற்கும் ஜப்பான் அரசாங்கத்திற்கும் இடையில் 2017இல் ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடலின் விளைவாக ஜப்பானிய திட்டம் இல்லாத உதவி வேலை திட்டத்தின் கீழ் (Under the Japanese Non Project Grant Aid Program - 2017 ) பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டம் (Economic and Social Development Program) மூலம் இந்த நன்கொடை வழங்கப்பட்டது. இந்த மானியத்தின் பெறுமதி 01 யென் பில்லியனாகும். இந்த மானியம் காரணமாக தற்போது துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இரவு நேரப் பணிகள் தொடங்க முடியுமாவதுடன் 24 மணி நேரமும் பணிகள் நடைபெறும்.

இரவு நேர கப்பலோட்ட செயற்பாட்டு தொகுதிக்கு

01 கப்பலோட்ட செயற்பாட்டு முகாமைத்துவ முறைமை (VTMS)

02 ரேடார் உபகரணங்கள்

03 வெளிச்ச வீட்டு உபகரணங்கள்

04 கடல் மிதவைகள் 15

05 நீர் மிதவைகள் 02

06 400 கிலோவோட் மின் உற்பத்தி இயந்திரம் ஒன்று

07 தீ அணைக்கும் குழாய்கள் மற்றும் உபகரணங்கள் 14

08 வழிகாட்டிக் கலங்கள் 01 (pilot vessel)

என்பன நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த மானியம் வழங்கப்பட்டுள்ளது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவன (JICS) திட்டத்தின் மூலம் ஜப்பான் அரசாங்கம் மற்றும் அதன் மக்களின் ஆதரவுடன் ஆகும்.

இந்த செயற்பாட்டினை வலுப்படுத்த இலங்கை துறைமுக அதிகாரசபை பின்வரும் பணிகளைச் செய்துள்ளது.

01 கடல்சார் மிதவைகளை நிலைப்படுத்துதல்

02 நீர் மிதவைகளை நிலைப்படுத்துதல்

03 ரேடார் கோபுரத்தின் நிர்மாணம்

04 தேவையான வேறு நிர்மாணங்கள்

05 VTMS வளாகத்தின் நிர்மாணிப்பு

06 வெளிச்ச வீடு புதுப்பித்தல்

07 மின்சார கேபல்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்

இதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை சுமார் 90 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது.



ஜப்பானிய அரசாங்கம் இரவுநேர கப்பலோட்ட செயற்பாட்டு தொகுதியை நிறுவுவதற்காக 01 யென் பில்லியன்களுக்கு மேல் பெறுமதியான உபகரணங்களை வழங்கியமைக்காக இலங்கை அரசு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை தனது நன்றியினை ஜப்பான் அரசாங்கத்துக்கும் அதன் மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்திக்கு இது இன்றியமையாத அங்கமாக உள்ளது.

காலம்காலமாக இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கிவருவதுடன் இலங்கைக்கு அதிகளவு உதவிகளை வழங்கிய நாடு என்ற பெருமையை இலங்கை மக்களால் பெற்றுக்கொண்டுள்ளது.

அதே போன்று ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய மானியங்களை கருத்தில் கொண்டு இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தச் செய்வதற்கு அவை பயன்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக கல்வி, தொழில்நுட்பம், தொழிற்சாலை, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

துறைமுகத்தை போன்று விமான சேவை துறையிலும் ஜப்பானினால் வழங்கப்பட்ட ஆதரவினை நன்றியுடன் நினைவு படுத்துகின்றேன்.

கொழும்பு துறைமுகத்தின் ஜயகொள்கலன் முனையம் நிர்மாணிப்புக்கு ஜப்பான வழங்கிய நிதியுதவியைப் போல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது பயணிகள் முனையம் நிர்மாணிப்புக்கு ஜைக்கா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சலுகை கடன் தொகை என்பவற்றுக்கும் ஜப்பான் அரசினால் எமக்கு வழங்கிய ஆதரவினை மகிழ்ச்சியுடன் நினைவு படுத்துகின்றேன்.

அதன்படி, ஜப்பானிய அரசாங்கமும் அதன் மக்களும் இலங்கை மக்கள் மீது காட்டும் அன்பையும் பாசத்தையும் நான் குறிப்பாக பாராட்டுவதுடன், ஜப்பானுக்கும் அதன் மக்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எங்கள் அன்பான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நிமல் சிறிபால த சில்வா**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் கௌரவ அமைச்சர்**



திருகோணமலை துறைமுக இரவு இயக்க முறைமையை கையளிக்கும் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வருடம் ஜப்பானும் இலங்கையும் ஒரு புதிய படிமுறை ஒன்றினை முன்னெடுத்துச் செல்கின்றன. அதற்கு இந்த நிகழ்வு மிகவும் சிறப்பானதொரு சந்தர்ப்பமாகும்.

திருகோணமலை துறைமுகத்தில் இரவு நேர செயற்பாட்டு அமைப்பை நிறுவுவதன் நோக்கம் துறைமுக நடவடிக்கைகளை இரவு நேரத்தில் பாதுகாப்பானதாக மாற்றுவதும் 24 மணி நேரமும் துறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஆகும்.

இந்த திட்டத்திற்காக ஜப்பான் அரசாங்கம் 2.63 பில்லியன் ரூபாவை மானியமாக வழங்கியுள்ளது. இந்த திட்டத்தின் மற்றுமொரு எதிர்பார்ப்பு யாதெனில் நாட்டில் முரண்பாடு ஏற்பட்ட பகுதிகளை புனரமைத்து மாகாணங்களுக்கிடையிலான தொடர்பை மேம்படுத்துவதன் மூலம் சற்றில் இலங்கையின் ஒட்டு மொத்த சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு நல்குவதாகும்.

இத்திட்டத்தின் விளைவாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் வலுவடையும். அவ்வாறே சேவை வழங்கலின் உற்பத்தித்திறன் மூலம் உள்நாட்டு பொருளாதாரம் வளர்ச்சி அடைவது போன்று மற்றும் சர்வதேச தொடர்புகளும் வளரும் என நான் மேலும் எதிர்பார்க்கின்றேன்.

**மிசுகொஷி ஹிதெகி**
**இலங்கைக்கான அதி மேதகு ஜப்பான் தூதுவர்**



இலங்கையின் வர்த்தக கப்பல் துறையின் முன்னேற்றத்திற்கு ஜப்பான் நல்கும் ஆதரவு இலங்கையை வர்த்தக கப்பல் மத்திய நிலையம் ஒன்றாக நிறுவும் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதை நான் முதலில் குறிப்பிட விரும்புகின்றேன்.

சமூக - பொருளாதார ரீதியில் முன்னேறிய நாடாக ஜப்பானிடம் உள்ள அறிவு, தொழில்நுட்பம் மற்றும் பெறுமதிகளை இலங்கை துறைமுகத் துறையுடன் பகிர்ந்து கொள்வதற்கு காட்டும் ஆர்வம் மற்றும் ஜப்பானின் பங்களிப்பு இலங்கை துறைமுக அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஆரம்பமானது என்பதற்கு எம்மிடம் பல சான்றுகள் உள்ளன.

கொழும்பு நவீன துறைமுகம் ஒன்றாக நவீனத்துவத்திற்கு பொருந்தும் வகையில் சம்பிரதாய துறைமுக நிலையில் இருந்து கொள்கலன் கையாளல் மத்திய நிலையம் ஒன்றாக தெற்காசியாவின் கேந்திர துறைமுகம் ஒன்றாக மாற்றும் ஆரம்ப செயற்பாடு ஆரம்பமானது 1980 ஆம் ஆண்டில் ஜப்பான் ஆதரவினால் ஆகும்.

இதன் ஆரம்பம் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை இன்று இலங்கையின் வர்த்தக மற்றும் கப்பல் துறையின் வளர்ச்சியைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறானதோர் சுற்றுப்புற சூழலில் இருந்து இலங்கையின் பிரதேச துறைமுகங்களிலும் துறைமுக இயக்கச் செயற்பாடுகளை உயிர்ப்பித்துக்கொள்ள துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய திட்டங்கள் திருகோணமலை துறைமுகத்திலுள்ளும் நிஜமாவது ஜப்பான் -(JICS) ஜிக்ஸ் வேலைத்திட்டத்தினால் கிட்டத்தட்ட 01 யென் பில்லியன் பெறுமதியுடைய இரவு நேர கப்பல் கையாளல் உபகரணங்களை வழங்கும் திட்டத்தினூடாகவேயாகும். இது 2017ஆம் ஆண்டு தொடங்கி இன்று நிஜமாகி இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

திருகோணமலை துறைமுகத்தில் இரவு வேளைகளில் இயக்கச்செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு நீண்ட காலமாக இருந்து வந்தாலும் அதற்கான செலவினை ஈடு செய்வதில் சிக்கல்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. அவ்வாறே அது திருகோணமலை துறைமுக அபிவிருத்தியின் அடிப்படை திட்டத்தின் முக்கிய அங்கமாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

இந்த நோக்கம் இன்றைய தினம் நிஜமாகி விட்டது. துறைமுகத்திலான உற்பத்தித் திறன் கிராமாளிக்கப்படுவது அது 24 மணி நேரம் செயற்பாடுகளை ஆற்றக்கூடிய துறைமுகமாக மாறும்போதேயாகும். இதற்காக ஜப்பானிய அரசாங்கம் மற்றும் (JICS) ஜிக்ஸ் வேலைத் திட்டம் வழங்கிய இந்த விசேட மானியத்திற்காக ஜப்பானிய அரசாங்கம், அதன் மக்கள், இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம், ஜைக்கா நிறுவனம் மற்றும் இந்த நிகழ்விற்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இந்த செயற்பாட்டுக்கு நல்லாசிகளையும் ஒன்று சேர்க்கின்றேன். மேலும் இரவு நேர கப்பல் செயற்பாடுகள் வெற்றிகரமாகி இந்த முதலீட்டின் சரியான பலன் நாட்டிற்கு கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**கே. டீ. எஸ். ருவன்சந்திர**
**செயலாளர் - துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**



1951 ஆம் ஆண்டு முதல் இலங்கையுடன் மிக நெருக்கமாக பணியாற்றி வரும் ஜப்பான், இலங்கையின் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் மிக உயர்ந்த தொழில்நுட்ப உதவிகளையும் ஆதரவினையும் வழங்கி வருகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஜய கொள்கலன் முனையமும் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து பெறுமதி மிக்க ஆதரவை பெற்றது. இந்த முனையமானது இன்றும் இயங்கிவருவதுடன், இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான வருமானத்தை ஈட்டுகின்றது.

திருகோணமலை துறைமுகத்தில் இரவு நேர இயக்க நடவடிக்கைகளின் தேவை தேசிய துறைமுக அபிவிருத்தித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். ஏனெனில் இது எதிர்கால வருவாய் மற்றும் உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கு உதவும். ஜப்பான் அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடத்தப்பட்ட பல இணக்கமான கலந்துரையாடலுக்கு பிறகு, திருகோணமலை துறைமுக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் வருவாயை அதிகரிப்பதற்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பாக ஜப்பான் மக்களிடம் இருந்து சுமார் ஒரு யென் பில்லியன் பெறுமதியுள்ள இரவு நேர இயக்க செயற்பாட்டு தொகுதி மானியமாக பெறப்பட்டது.

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வரும் இவ் வேளையில் இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள துறைமுகங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வரும் நிலையான ஆதரவிற்காக ஜப்பான் அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த நன்கொடையானது இலங்கையின் வர்த்தக கப்பல் துறை மற்றும் அதேபோல் இலங்கை துறைமுக அதிகார சபையின் திருகோணமலை துறைமுகத்தின் நீண்ட கால அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

**கீத். டீ. பேர்னாட்**
**தலைவர்**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**

## இலங்கையின் துறைமுக இயக்கச் செயற்பாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்காக ஜப்பான் வழங்கிய இந்த மானியத்திற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களின் மனமார்ந்த நன்றிகளை ஜப்பான் அரசு மற்றும் அதன் மக்களுக்கு இந்த நிகழ்வின் போது தெரிவித்துக் கொள்கின்றோம்.



துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

இலங்கை துறைமுக அதிகாரசபை



















# முஸ்லிம்கள் எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்பட வேண்டும்

## மூன்று மொழிகளில் ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா

## நூலாசிரியர் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச்.உமர்தீன்

**அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச்.உமர்தீன் எழுதிய 'மாற்று மதத்தவர்களை மதித்து வழிகாட்டும் மார்க்கம் இஸ்லாம்'. 'மஸ்ஜிதின் ஊடாக சமூகத்தை வளப்படுத்துவோம்', 'மழலைகளுக்கான அழகிய பெயர்கள்', 'அருள்மிகு ரமழானும் அதன் சட்ட திட்டங்களும்' ஆகிய ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா தெஹிவளை களுபோவில வீதியில் அமைந்துள்ள முகைதீன் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் (தெஹிவளை பெரிய பள்ளி) இடம்பெற்றது. இந்நூல்கள் பற்றிய அறிமுகவுரையினை பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மது, நூல்கள் பற்றிய மதிப்பீட்டு உரையினை நிதா பவுண்டேசன் அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் ஹஸன் பரீத் ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையினை நூலாசிரியர் அஷ்ஷெய்க் எச் உமர்தீன் நிகழ்த்தினார். நிகழ்ச்சி தொகுப்பினை பௌஸார் வழங்கினார்.**

**இந்நிகழ்வில் பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி ரிஸ்வி முப்தி, அகில இலங்கை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பிரதித் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக், கண்டி அல்புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் ராயிஸ் முப்தி உள்ளிட்ட பல வர்த்தகப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மது நூல் அறிமுக உரையை நிகழ்த்தினார்....**

## ஏ.சி.அகார் முஹம்மது



சன்மார்க்கப் பணியில் சமூக சீர்திருத்தப் பணியில் பிரசாரப் பணியில் ஈடுபடுபவர்கள் மூன்று வழிமுறைகளை கண்டிப்பாக கைக்கொண்டு ஆக வேண்டும்.

இந்த மூன்று வழிமுறைகளுக்கு ஊடாகத்தான் சமூக சீர்திருத்தப் பணியை முன்னெடுக்க முடியும். இந்த மூன்று வழிமுறைகளிலே முதலாவது பேச்சு, இந்தப் பேச்சின் மூலமாக சமூகத்தை நல்வழிப்படுத்தலாம். சீர்திருத்தலாம். பேச்சு மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று. இரண்டாவது எழுத்து. பேச்சு எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அதே அளவு எழுத்தும் சமூக சீர் திருத்தப் பணியிலே அதி கூடிய முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது. மூன்றாவது அம்சம் யாதெனில் அது முதலாம் இடம்பெறும் அம்சமாக இருக்கும் என்பதில் பிழையாக இருக்காது. பேச்சு ஏற்படுத்தாத தாக்கத்தை எழுத்து ஏற்படுத்தாத தாக்கத்தை முன்மாதிரியான வாழ்க்கை முறையும் ஏற்படுத்தும்.



எனவே நாம் அனைவரும் பேச்சை விட, எழுத்தை விட முன்மாதிரியான வாழ்க்கை முறைமை மிக மிக முக்கியமானது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். எமது நடத்தையினால் எமது செயல்களினால் மிகப் பெரிய தாக்கத்தை எல்லா மட்டத்திலும் ஏற்படுத்தலாம். இது தான் நபி நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறையாகவும் நமது முன்னோர்களது வழிமுறையாகவும் இருந்து வந்திருக்கிறது. அதனை அடுத்து முக்கியத்துவம் பெறுபவைத்தான் பேச்சும், எழுத்தும். இந்த வகையிலே பேச்சு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றி நான் சொல்லி விளங்கிக் கொள்ளத் தேவையில்லை. உலமாக்கள் என்றால் அவர்கள் எல்லோரும் பேச்சாளர்களாக இருப்பார்கள். குத்பா, ஏனைய சொற்பொழிவுகள் மூலம் அவர்களது பணியை முன்னெடுப்பார்கள். பேச்சு மிகவும் தாக்கம்மிக்கது. பேச்சைப் போலவே மிகப் பெரிய ஊடகம் தான் எழுத்து. எழுத்து, அழைப்பு பணியில் குறிப்பாக உரிய முக்கியத்துவத்தைப் பெறத் தவறியிருக்கிறது என்பதன் கசப்பான உண்மையை இங்கு பதிவு செய்யாமல் இருக்க முடியாது. குறிப்பாக நமது நாட்டைப் பொறுத்தவரையில் ஒப்பீட்டு ரீதியில் எழுத்துத் துறைக்கு கொடுத்துள்ள முக்கியத்துவமானது மிகக் குறைவானதாக உள்ளதென்பதை சொல்லாமல் இருக்க முடியாது.

எழுத்து மிக மிக முக்கியமானது. எனவேதான் அல்லாஹ்தஆலா ஆரம்ப வசனங்களிலே இந்த வாசிப்பைப் பற்றியும் எழுத்தைப் பற்றியும் வாசிப்புக்கும் எழுத்துக்கும் ஊடகமாக இருக்கின்ற பேனாவைப் பற்றித்தான் பேசியிருக்கின்றான். வாசிப்பு, எழுத்து, பேனா ஆகிய மூன்றும் குர்ஆனில் ஆரம்பத்தில் சொல்லப்பட்டுள்ள முக்கியமான வார்த்தைகள். இது சூறத்துல் களம் என்பதின் ஆரம்ப வசனங்கள். பேனா என்ற பெயரிலே தனியான அத்தியாயம் இருக்கிறது. இறைவன் எழுத்தின் மீது சத்தியமாக என்று கூறுகின்றான் என்றால் எழுத்து எவ்வளவு முக்கியமானது. புத்தகங்கள் மீது சத்தியம் செய்கின்றான் என்றால் புத்தகங்கள், நூல்கள் எவ்வளவு முக்கியமானது. அவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. சில மட்டத்தில் தவறான புரிதல் இருக்கலாம். இன்று அல்லாஹ் எழுத்தின் மீதுதான் சத்தியம் செய்திருக்கின்றான். அல் குர்ஆன் அரபு மொழியில் இறக்கி இருக்கின்றான். எனினும் எல்லா மொழிகளுக்கும் சொந்தக் காரன் இறைவன்தான். அந்தளவுக்கு எழுத்து முக்கியத்துவம் வாய்ந்தது. புனிதமானது. பேனா முக்கியத்துவம் வாய்ந்தது புனிதமானது. புத்தகங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை புனிதமானவை. முஸ்லிம்களாகிய நாம் யார் ? எழுத்தின் சமூகம். பேனாவின் சமூகம். புத்தகங்களின் சமூகம் எங்களது அடையாளம் பேனா. முஸ்லிம்கள் பேனாவினால் அடையாளம் காணப்பட வேண்டும். எழுத்தினால் அடையாளம் காணப்பட வேண்டும். புத்தகங்களால் அடையாளம் காணப்பட வேண்டும். அல்குஆன் கடந்த 1500 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றால் ஒரு பக்கம் உள்ளங்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மறுபக்கம் எழுத்து உருவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அல்குர்ஆனுக்கு பல பெயர்கள் இருக்கின்றன. கிரந்தங்கள் உள்ளன.

அறிஞர் சித்திலெப்பை நமது சமூகத்தில் மிகப் பெரிய அறிஞர். அக்காலத்தில் ஆங்கிலம், தமிழ் , அரபு ஆகிய மொழிகளில் புத்தகங்களைத் தந்தவர். இலங்கையில் முஸ்லிம் நேசன் என்ற முதலாவது பத்திரிகையை நீண்ட காலமாக வெளிக்கொணர்ந்தவர். அவர் அப்பொழுது எழுதும்போது 'முஸ்லிம் சமூகம் சாப்பாடு என்றால் கூட்டம் கூட்டமாக வெளிக்கிளம்பிச் செல்லுகிறார்கள், படிப்பு புத்தகம் என்றால் ஆட்களையே காணவில்லை' என்று எழுதியிருந்தார். இன்றும் அந்த நிலைமைதான் இருக்கிறது. நாங்கள் எமது பேச்சுக்களால் எழுத்துக்களால் என்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்று யோசிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். எனவே வாசிப்புப் பழக்கம் ரொம்ப அரிதாகிக் கொண்டே செல்லுகிறது. எமது இளம் தலைமுறையினர்கள் இந்தப் பக்கம் தலைவைத்துப் படுப்பதற்கே நேரம் இல்லாமற் போய் விட்டது. சமூக வலைத்தளங்களின் பயங்கரத் தாக்கத்தினால் வெறுமனே நிகழ்வுகளும் ஆட்களும் மட்டும் தான் பேசப்படுகிறார்கள். சிந்தனைகள் கிடையாது. இந்த சமூகம் நாளுக்கு நாள் அதலபாதாளத்தை நோக்கி, வங்குரோத்து நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதை நாம் மிகவும் கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். எந்தளவுக்கு என்றால் படித்தவர்கள் கூட ஒரு நாளைக்கு எத்தனை பக்கங்கள் வாசிக்கிறார்கள் என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியிருக்கிறது. நமது நூலாசிரியர் மௌலவி உமர்தீன் ஒரு சிறந்த பேச்சாளர். நல்ல நாவன்மைமிக்கவர். ஒரு முன்மாதிரியான தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முயற்சிப்பவர். இந்த இரண்டு ஊடகங்களின் ஊடாக தன்னுடைய பிரசாரப் பணியை முன்னெடுப்பது போலவே எழுத்தின் மூலமாகவும் தன்னுடைய பிரசாரப் பணியை முன்னெடுப்பதில் அதி தீவிர கவனம் செலுத்தி வருகிறார். இது இன்றைய காலத்தின் தேவையும் சன்மார்க்கக் கடமையுமாகும் என உணர்ந்து பல நூல்களை எழுதி வெளியிட்டு வருகிறார். அவரது நூல்கள் சமூகத்திற்குத் தேவையானதும் அருமையான அற்புதமான தலைப்புக்களைக் கொண்டதும் ஆகும். அவர் நடைமுறைக்குத் தேவையான போதனைகளை வழங்கும் நோக்கோடு நல்ல புத்தகங்களை எழுதி வருகிறார். அது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

தமிழில் எழுதினால் சொல்வார்கள். இந்தக் காலத்து பிள்ளைகளுக்கு சரியாக தமிழ் விளங்குவதில்லை. ஆங்கிலத்தில் வரவேண்டும் என்பார்கள். ஆங்கிலத்தில் எழுதினால் ஆங்கிலத்தை யார் வாசிப்பது என்பார்கள். மூத்தவர்கள் சொல்வார்கள் தமிழில் எழுத வேண்டும் என்பார்கள். சிங்கள மக்கள் பெரும்பான்மையினமாக வாழும் நாட்டில் சிங்களத்தில் எழுத வேண்டும் என்பார்கள். எழுதாவிட்டால் எழுதவில்லை என்பான். எழுதினால் எந்த மொழியில் எழுதுவது பற்றிப் பேசுவான். ஒரு மொழியை அடுத்த மொழியைப் பற்றிப் பேசுவான். இவை எல்லாவற்றிற்கும் தீர்வாக மௌலவி உமர்தீன் எல்லா புத்தகங்களையும் முடியுமானவரை மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளார். இதற்குப் பின்பு என்னசொல்வார்கள் என்பதை பிறகுதான் பார்க்க வேண்டி இருக்கிறது. 'மாநபியின் மருத்துவ வழிகாட்டல்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நபி நாயகம் (ஸல்) அவர்கள் மருத்துவத் துறையில் எப்படிப்பட்ட வழிகாட்டல்களைத் தந்துள்ளார்கள் என்பது பற்றி எழுதியுள்ளார். இந்நூல் மிகவும் ஆய்வு ரீதியாக மிக ஆழமாகவும் பேசப்படக் கூடிய நூல்.

அடுத்து 'மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை' என்னும் நூலாகும்.எவ்வாறு எங்களுடைய குடும்ப வாழ்க்கையை வெற்றிகரமாக சந்தோசமாக மனநிறைவோடு அமைத்துக் கொள்வது சம்பந்தமான ஒரு நூலாகும். இந்நூலும் மும் மொழிகளிலும் வெளிவந்துள்ளது. அடுத்து 'மஸ்ஜிதின் ஊடாக சமூகத்தை வலுவூட்டுவோம்' என்னும் நூல்.பள்ளிவாசல்களை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தைக் கட்டி எழுப்பலாம் என்று பேசப்படும் நூலாகும். இது ஒரு இன்றியமையாத தலைப்பு. ஒவ்வொரு பள்ளிவாசல் நிர்வாகத்திலுள்ள நிருவாக சபை உறுப்பினர்களும் இந்தப் புத்தகத்தை வாசித்து கலந்துரையாட வேண்டும். அதற்குரிய வழிகாட்டல்கள் இந்த நூலில் அமைந்துள்ளது. ரமழான் பற்றிய நூல். இது அருள் மிகு ரமழானும் அதற்குரிய சட்ட திட்டங்கள் பற்றி எழுதியிருக்கிறார்கள். நாம் ரமழான் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் என்ன? நோன்பை முறிக்கக் கூடிய காரியங்கள் யாவை. பல விசயங்களை இந்த நூலிலே நூலாசிரியர் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய நூல்களின் சிறப்பம்சம் என்னவென்றால் பெரிய பெரிய நூல்களை எழுதாமல் சிறிய கைநூலாக வெளிக்கொணர்ந்துள்ளார். இன்றைய அவசர உலகத்தில் யாரும் பெரிய புத்தகங்களை வாசிப்பதில் தயாரில்லை. புகையிரதத்தில் பஸ் வண்டியில் செல்லும் போது வாசித்து முடிக்கின்ற அளவுக்கு புத்தகம் இருத்தல் வேண்டும். இன்று வாசிப்பவர்களே குறைவு. ஆனால் புத்தகங்கள் பெரிதாக இருந்தால் வாசிக்கவே மாட்டார்கள்.

அடுத்து மழலைகளுக்கான அழகிய பெயர்கள். இதனைப் பார்க்கிற பார்வைக்கு இந்தப் புத்தகம் எதற்கு என்று தோன்றலாம். ஆனால் இன்று பெயர் விடயத்தில் சமூகம் நியாயமான பிழைகளை விடுகின்றன. இந்தப் புத்தகத்தில் பிள்ளைகளுக்குப் பெயர் வைத்தல் தொடர்பான முன்னுரையில் பிள்ளைகள் பிறந்து விட்டால் பெயர் வைப்பது தொடர்பில் கடமைகள் என்னவென்று மிக அழகாக விளக்கி இருக்கிறார்கள். அப்படி அழகான பெயர் என்றால் அர்த்தம் உள்ள பெயர். கருத்துள்ள பெயர், நமது மார்க்க அடையாளத்தை வெளிப்படுத்துகிற பெயர். நமது நம்பிக்கைளுக்கு முரண் இல்லாத பெயர். இந்தப் பெயர்களைத் தெரிவு செய்து கொள்வது சாமானிய விடயமல்ல. இதில் மிகப்பெரிய தவறு நடக்கிறது. குகூல் இணையத்தளத்திற்குச் சென்று அதில் ஆய்வு செய்து பெயர் வைக்கிறார்கள். அந்தப் பெயர் அரபு மொழியில் இருந்து பெறப்பட்டதா அல்லது பாரசீக மொழியில் இருந்து பெறப்பட்டதா அல்லது வேறு எந்த மொழியில் இருந்து பெறப்பட்டதா என்று தெரியாது. நிறைய பிழையான கருத்துக்களையுடைய பெயர்களைச் சொல்லி அர்த்தம் பற்றி கேட்பார்கள். ஆனால் அவற்றைத் தேடிப்பார்த்தால் சரியான அசலான பெயர்கள் பொருத்தப்பாடான பெயர்கள் இருக்காது. நிறையப் பேர் தொடர்பில்லாத பெயர்களைச் சூட்டிக் கொள்கிறார்கள். பின்பு அந்தப் பிள்ளைகள் பெரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். ஒரு ஆலிமை போய் சந்தித்தால் அவர் அவர்களுடைய பெயரைக் கேட்பார். அவர் ஒரு சிரிப்பு சிரிப்பார். என்ன ஹஸரத் சிரிக்கின்றீர்கள் என்று கேட்டால் அதற்கு அவர் உங்கள் பெயர் பிழையாக இருக்கிறது என்று சொல்வார்.

எனவே பெயர் வைப்பதில் நிறைய பிழைகள் தவறுகள் நடைபெறுகின்றன. எவ்வளவுதான் பெயர்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருந்தாலும் ஒரு தகுதியுடைய ஆலீம் அதனை ஆய்வு செய்து பெயர்களைத் தொகுத்து இருக்கிறார். இதில் ஆண் குழந்தைகளுடைய பெயர்களும், பெண் குழந்தைகளுடைய பெயர்களும் தொகுக்கப்பட்டு இருக்கின்றன. ஆண் குழந்தைகளுடைய பெயர்கள் எ இல் ஆரம்பித்து இஸட்டில் முடிந்துள்ளது. பெண் குழந்தைகளுடைய பெயர்களும் அதே ஒழுங்கில் இடம்பெற்றிருக்கிறது. இவற்றுடன் சிறப்பான அம்சம் என்னவென்றால் அரபு மொழியில் பெயர் இருக்கிறது. அதனுடைய கருத்து தமிழிலும் சிங்களத்திலும் வந்திருக்கிறது. அதே நேரம் பெயர் தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. இது அவசியமான விடயமாகும். பிறப்பு பதிவுகள் வைக்கின்ற நேரத்தில் நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். சரியான உச்சரிப்பில் எழுத்துக்கள் அமையாது. ஒரு வினோதமான முறையில் எழுதியிருப்பார்கள். மிகச் சரியான முறையில் எவ்வாறு மும்மொழிகளிலும் எழுதலாம் என்று இந்நூலில் உள்ளது. பெயருடைய கருத்துக்களும் தமிழிலும் அமைந்துள்ளது.

அடுத்த நூல் 'மாற்று மதத்தவர்களை மதித்து வாழ வழிகாட்டும் மார்க்கம் இஸ்லாம்' இந்த நாட்டுக்கு சமூகத்திற்கு நடைமுறைக்குத் தேவையான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலைப்பை கொண்ட நூல் இது.இலங்கையில் பல்லினத்தவர்கள் வாழுகின்றனர். இது இன்றியமையாத ஒரு விடயமாகும் சமூக நல்லிணக்கமும் சக வாழ்வும் ஆகும். சிறுபான்மையின மக்கள் கடந்த 3 தசாப்த காலங்களுக்கு மேலாக தொண்டை கிழிய குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இது தொடர்பில் ஏனைய சமூகத்தவர்கள் எந்தளவு கவனம் செலுத்துகிறார்கள் என்பது ஒரு கவலைக்குரிய விடயம். யார் செய்தாலும் செய்யா விட்டாலும் நமக்கு ஒரு தார்மீகக் கடமையிருக்கிறது. அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் உடன் பட்டாலும் உடன் படா விட்டாலும் நாம் தொடர்ச்சியாக சமூக நல்லிணக்கத்திற்காக பாடுபட வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த வகையில் உமர்தீன் ஹஸ்ரத் அவர்கள் கடந்த காலங்களாக தனிப்பட்ட முறையிலும் ஜம்மியதுல் உலமா சபை சார்பாகவும் நாடளாவிய ரீதியில் உழைத்து பாடுபட்டு வருபவர். இந்த தலைப்பிலே பேசுவதற்கு எழுதுவதற்கு கருத்து சொல்லுவதற்கு எல்லா வகையிலும் தகுதியுடையவராக அவர் இருக்கிறார். அவர் இந்த தலைப்பில் காலத்தின் தேவை உணர்ந்து சமூகங்களுக்கிடையே பரஸ்பர உறவை வலுப்படுத்துவதற்கும் சகிப்புத்தன்மை விட்டுக் கொடுப்பு புரிந்துணர்வு போன்றவற்றை கடைப்பிடித்து ஒழுகுவதற்கும் ஊடகம் மிகுந்த பங்களிப்புமிக்கதாக உள்ளது. பேச்சின் ஊடாக எந்தளவு சமூக நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப முயற்சி செய்கின்றோமோ அதே போன்று எழுத்து ஊடகம் மூலம் சமூக மயப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இது தமிழில் மாத்திரமல்ல சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பரவலாகப் பேசப்பட வேண்டும். எல்லோருடைய கரங்களிலும் போய் சேர வேண்டும். அந்த வகையில் உமர்தீன் ஹஸ்ரத் அவர்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் தமிழிலும் சிங்களத்திலும் வெளியிட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட புத்தகங்கள் பல புத்தகங்கள் தொடர்ச்சியாக வர வேண்டும்.உமர்தீன் ஹஸ்ரத் எழுத்துக்களுக்கு நாம் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

**– இக்பால் அலி**



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே கொடுக்கப்பட்ட பந்தியை வாசித்து விடையளிக்குக.**

மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் ஒரு பெரிய அரசமரம் நின்றது. ஆற்றிலிருந்து தொலைவில் நின்ற மரங்களுக்கெல்லாம் மழை பெய்யும் போதுதான் ஏராளமான நீர் கிடைக்கும். மற்றைய காலங்களில் அவை மிக ஆழத்திற்குத் தங்கள் வேரை நீட்டி அங்குள்ள ஈரத்தைத்தான் இழுத்துக் கொள்ள வேண்டும்.

1. ஆறு எங்கு ஓடிக்கொண்டிருந்தது?

…………………………………………………………………………

2. பந்தியிலுள்ள பெயர் அடைமொழியொன்றினைத் தருக.

…………………………………………………………………………

3. அ்.றிணை பன்மை படர்க்கை பெயர்ச்சொல் ஒன்றினை பந்தியிலிருந்து எழுதுக.

…………………………………………………………………………

4. ஒத்தகருத்து தருக

i. ஆறு - ……………………… ii. அடர்ந்த - ………………………

5. எதிர்கருத்து தருக.

i. பெரிய - ……………………… ii. தொலைவில் - ………………………

6. மரங்களுக்கெல்லாம் இதனை பிரித்து எழுதுக.

…………………………………………………………………………

**II. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

7. ஆக்கங்களாலான / பெற்றோர்கள் / பிள்ளைகளின் / பார்வையிட்டனர் / கண்காட்சியை

…………………………………………………………………………

8. வீட்டுக்கு / சந்தையில் / நானும் அப்பாவும் / இருந்து / சேர்ந்தோம் / வந்து

…………………………………………………………………………

**III. பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

9. சுதந்திரமற்று வாழ்பவன் ………………………………………

10. சிலை வடிப்பவன் ………………………………………

11. இரவில் கூடும் சந்தையானது ………………………………………

**IV.**

12. சேர்த்தெழுதுக.

i. பூ + செண்டு - ……………………… ii. நஞ்சு + பாம்பு - ………………………

iii. அறிவு + இயல் - ……………………… iv. கண் + இமை - ………………………

13. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

i. சூடு கண்ட பூனை - ………………………………………

ii. சுத்தம் சுகம் - ………………………………………

14. மரபுத் தொடருக்குரிய கருத்தை எழுதுக.

i. கை கூடுதல் - ………………………………………

ii. கண் திறத்தல் - ………………………………………

iii. தலை கவிழ்தல் - ………………………………………

15. பொருத்தமான சொல்லை எழுதுக

i. மயில் அகவும் எனில் கோழி - ………………………………………

ii. மாவின் இளங்காய் - ………………………………………

16. பின்வரும் சொற்களை சரியான வடிவத்தில் எழுதுக.

i. ஒண்டு - ……………………… ii. கிணத்தடி - ………………………

17. சரியான சொல்லை தெரிந்து எழுதுக.

i. திருமணத்தில் மணப்பெண் ……………….. சேலை கட்டினாள். (கூரை / கூறை)

18. அந்த மரத்தில் பெரிய …………………. இருந்தது. (கோரை / கோறை) இருந்தது.

19. பின்வரும் ஆங்கில சொற்களின் தமிழ் கருத்தை தமிழில் எழுதுக.

i. Monday - ……………………… ii. Fifty - ………………………

20. பின்வரும் சிங்கள சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக

i. எலியட்ட - ……………………… ii. சீய்யா - ………………………

**V.**

21. கொடுக்கப்பட்ட உருவை அரைப்பங்கு நிழற்றுக.



22. 

இக்கடிகார முகம் காட்டும் நேரம் அடுத்துவரும் செங்கோணத்தை உருவாக்க இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உள்ளன?

…………………………………………………………

23. ஒரு கூடையில் 72 மாம்பழங்கள் உள்ளன. அவ்வாறான 5 கூடைகளில் உள்ள மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

…………………………………………………………………………

24.




மேலே வரைபில் மாணவர்கள் தாம் விரும்பும் பூக்களின் வகைகளை வகைக்குறித்துள்ளனர். இதன் அடிப்படையில் கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்குக.

i. அதிகமான மாணவர்கள் விரும்பும் பூ எது?

…………………………………………………………………………

ii. ஒரேயளவான மாணவர்கள் விரும்பும் பூ எது?

…………………………………………………………………………

iii. தாமரையை விரும்பும் மாணவர்களுக்கும் அல்லியை விரும்பும் மாணவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?

…………………………………………………………………………

iv. மேலே வரைபில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

…………………………………………………………………………

25. ☐ x 8 = 48 எனில் வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண் யாது?

26. இவ்வெண் சட்டம் வகை குறிக்கும் எண் யாது?

………………………………………………




27. 614 cm இதனை மீற்றர், சென்ரிமீற்றரில் தருக.

………………………………………………

28. 100g தேயிலை பைக்கற்றுகள் 5 வாங்கினால் அதன் மொத்த நிறை யாது?

…………………………………………………………………………

29. 60, 50, 56, 40, ………, …………….

**VI. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. எமது நாட்டின் பரப்பளவில் பெரிய மாகாணம் எது?
i. வடமத்திய மாகாணம் ii. வடமாகாணம் iii. மேல் மாகாணம்

31. இலங்கையில் பால் உற்பத்தித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
i. அம்பேவல ii. நுவரெலியா iii. கண்டி

32. தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
i. மு.நல்லதம்பி ii. ஆனந்த சமரகோன் iii. கன்னங்கர

33. இலங்கையிலுள்ள மிக உயரமான மேட்டுநிலம் எது?
i. சிவனொளிபாத மலை ii. திருகோணமலை iii. ஹற்றன் மேட்டுநிலம்

34. அன்னமுன்னா பூக்கும் மாதமானது
i. கார்த்திகை மாதம் ii. தை மாதம் iii. ஐப்பசி மாதம்

35. பூ ஒன்றின் காயாக மாறும் பகுதியானது
i. சூலகம் ii. மகரந்தம் iii. அல்லி

36. நீரின் மூலம் பரம்பலடையும் தாவரமானது
i. எண்ணெய் ii. மாங்காய் iii. புன்னை

37. இறக்கை இல்லாது உரோமத்தால் மூடப்பட்ட பறவை
i. கிவி ii. வாத்து iii. கோழி

38. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்றானது
i. வலைப்பந்து ii. கரப்பந்து iii. கிளித்தட்டு

39. இலங்கை தேசப்படத்தில் மலைகளை குறிக்கும் நிறமானது
i. கபிலம் ii. பச்சை iii. கறுப்பு

40. தாவர இலையில் கூடமைக்கும் பிராணியானது
i. கம்பளிப்பூச்சி ii. செவ்வெறும்பு iii. மண்புழு

41. எமது நாட்டில் அடிக்கடி மண்சரிவு அனர்த்தத்திற்கு உள்ளாகும் மாவட்டமானது
i. காலி ii. களுத்துறை iii. இரத்தினபுரி

42 சூரிய ஒளி குறைவாக கிடைக்கும் போது இலை சுருங்காத தாவரம்
i. அகத்தி ii. தொட்டாச்சுருங்கி iii. தேக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

43. பின்வருவனவற்றுள் கட்டாயமாக தனியாக பயன்படுத்தப்படவேண்டிய பொருளானது
i. கைக்குட்டை ii. சீப்பு iii. உணவுத்தட்டு

44. இரவு வேளையில் பாதையில் பிரயாணம் செய்யும் போது அணிவதற்கு பொருத்தமான நிறம்
i. நீலம் ii. பச்சை iii. வெள்ளை

45. பச்சை நிறத்தை பெறவேண்டுமாயின் சேர்க்கப்படவேண்டிய நிறங்களானவை
i. சிவப்பு, மஞ்சள் ii. பச்சை, மஞ்சள் iii. நீலம், மஞ்சள்

46. பகவத்கீதை எந்த சமயத்தவரின் புனித நூலாகும்
i. பௌத்தர்கள் ii. இந்துக்கள் iii. இஸ்லாமியர்கள்

47. எம்மை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவானது
i. மீன் ii. முட்டை iii. பசளி

48. பெருந்தெருக்களில் பயணம் செய்யத்தக்க அதிக சில்லுகளை உடைய வாகனமானது
i. புகைவண்டி ii. பேருந்து iii. முச்சக்கரவண்டி

49. வேறொரு பிராணியின் கூட்டில் முட்டையிடும் பிராணியானது
i. குயில் ii. கிளி iii. மைனா

50. நாம் பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகை அல்லாதது
i. கிழங்கு ii. தக்காளி iii. கெரட்

51. போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டை அமைந்துள்ள நகரம்
i. காலி ii. கண்டி iii. திருகோணமலை

52. தேசிய ஒற்றுமையை வலியுறுத்த தேசிய கொடியில் காணப்படும் நிறமானது
i. பச்சை ii. சிவப்பு iii. மஞ்சள்

53. நல்ல நிலையிலுள்ள முட்டை ஒன்றினை உப்பு கரைசலில் இடும்போது
i. முட்டை மிதக்கும் ii. முட்டை அமிழும் iii. முட்டை நிறம்மாறும்

54. ஊசித்துளை கமராவில் திரையில் விம்பம் தோன்றும் விதம்
i. தலைகீழானது ii. நேரானது iii. சாய்வானது

55. சிமெந்து தரையில் விழுந்ததும் மிக வேகமாக ஆவியாகும் திரவமானது
i. பெற்றோல் ii. நீர் iii. தேங்காய் எண்ணெய்

56. பின்வருவனவற்றுள் துளையிட்டு உறிஞ்சிக் குடிக்கும் பிராணி அல்லாதது
i. பேன் ii. நுளம்பு iii. வண்ணத்துப்பூச்சி

57. காந்தத்தால் கவரப்படும் பொருளானது
i. பித்தளை ii. இரும்பு ஆணி iii. தங்கம்

58. வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத பிராணியானது
i. தும்பி ii. எலி iii. கரையான்

59. குழந்தைகள் கட்டாயமாக செல்லக்கூடாத இடமானது
i. சீமெந்து தரை ii. மண்தரை iii. வழுக்கும் தரை

VII.

60. 'சுத்தம் சுகம் தரும்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமலும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட்டும் காணப்பட வேண்டும். ஒரே கருத்தினை தரும் இரண்டு வாக்கியங்கள் எழுதப்படக் கூடாது. மூன்று வாக்கியங்களும் வெவ்வேறு கருத்துக்களை தரக்கூடியதாக இருக்க வேண்டும்.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

### கடந்த வார (10.02.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 3 | 21. | 2 | 31. | 1 |
| 2. | 2 | 12. | 1 | 22. | 2 | 32. | 1 |
| 3. | 3 | 13. | 2 | 23. | 2 | 33. | 1 |
| 4. | 1 | 14. | 3 | 24. | 3 | 34. | 2 |
| 5. | 2 | 15. | 1 | 25. | 1 | 35. | 3 |
| 6. | 1 | 16. | 2 | 26. | 2 | 36. | 2 |
| 7. | 1 | 17. | 1 | 27. | 3 | 37. | 2 |
| 8. | 2 | 18. | 2 | 28. | 2 | 38. | 3 |
| 9. | 1 | 19. | 3 | 29. | 2 | 39. | 1 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 3 | 40. | 1 |

# வட்டுவாகல் மீனவர் பாதை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் நேற்று காலை வட்டுவாகல் பகுதியில் மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் நேரில் சென்று கலந்துரையாடியுள்ளார். வட்டுவாகல் பகுதி மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்லும் பாதையில் படையினரின் முகாம் அமைந்துள்ளதால் அந்த பாதையை திறந்து விடுமாறு நீண்டநாட்களாக கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

இவ்விஜயத்தின் போது முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன்,கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகள், மீனவர்களுடன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.திலீபன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.



காணி வரைப்படம் ஊடாக 59 ஆவது படைப்பிரிவினைச் சேர்ந்த இராணுவ அதிகாரிக்கு அரச அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் கலந்துரையாடவுள்ளதாகவும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மக்களின் வழிபாட்டிற்கும்,கடற்றொழிலுக்கும் இடையூறு இல்லை என மீனவர்கள் தெரிவித்தபோது இதுவரை இராணுவம் அவ்வீதியால் செல்லவோ அல்லது இராணுவ காணியிலுள்ள ஆலய வழிபாட்டிற்கு விடவோ அனுமதிக்கவில்லையென மீனவர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்கள். இது குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர் காணி விடுவிப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் ஜனாதிபதி தலைமையிலான உயர்மட்ட கூட்டத்தில் கோரிக்கை விடுத்து ஜனாதிபதி எனக்கு பணிப்புரை விடுத்திருந்தார். அதற்கமைய சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி விரைவில் அதற்கான முடிவு எட்டப்படும் என அவர் தெரிவித்தார்.

# நிலுவை பணத்தை செலுத்தாவிடின் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நடாத்த தடை

**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்**

சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் யாழ்.மாநகர சபைக்கு வழங்க வேண்டியுள்ள நிலுவையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடாத்த அனுமதி வழங்குவதில்லையென யாழ். மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்களுக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று காலை 10 மணியளவில், முதல்வர் இம்மானுவல் ஆனோர்ல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் போது, எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. இவ்விவாதத்தின் போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளுக்கான வரி, மற்றும் இதர கட்டணமாக சுமார் 39 இலட்சம் ரூபா செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள 2023 ஆம் ஆண்டு கண்காட்சியை நடாத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிலுவையைச் செலுத்தாமல் அனுமதி வழங்குவதில்லை என்றும், மாநகர சபையினால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச்சேவைகள் எதனையும் வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.



யாழ்/ வடமராட்சி துன்னாலை வல்லிபுரம் ஆழ்வார் நாலாயிர திவ்ய பிரபந்த முற்றோதல் கடந்த 14ஆம் திகதி பெப்ரவரி மாதம் ஆரம்பமாகி மார்ச் மாதம் 30ஆம் திகதி காலை 10 மணிமுதல் காலை 11.00 மணிவரை நடைபெறும். ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய, மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் கலாசாலை மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கலாசாலை முகாமைத்துவ குழுவினர் மாணவத் தலைவர்களுக்கான சின்னங்களை அணிவித்தனர்.

## வீதியில் மயங்கி விழுந்து முதியவர் உயிரிழப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி கச்சாய் வீதிப்பகுதியில் நேற்று மதியம் வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த 72 வயதான தெய்வேந்திரம் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் உதயம்

## பேசாலை சங்கவி திரையரங்கில் 'தாவீது' நாட்டுக்கூத்து



மன்னார், பேசாலை சங்கவி திரையங்கில் 'தாவீது' என்னும் மன்னார் மாதோட்டப் பாங்கு நாட்டுக்கூத்து எதிர்வரும் 25.02.2023 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த நாட்டுக் கூத்து நிகழ்ச்சி தினகரன் மற்றும் வாரமஞ்சரி அனுசரணையில் இடம்பெறுவதுடன் இதில் பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமரும் கௌரவ அதிதியாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரும் கலந்து கொள்வார்கள்.

தேசியக் கலைஞர் 'எஸ்.ஏ.உதயனின்' நெறியாள்கையில் விழிகள் கலாமுற்றக் கலைஞர்கள் வழங்கும் மன்னார் மாதோட்டப் பாங்கு நாட்டுக்கூத்தான 'தாவீது' கூத்து, அண்ணாவியார் சி.எம். பெர்னாந்து தலைமையில் அரங்கேறவுள்ளது. சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் இதனை தயாரித்து வழங்குகிறார்.

உள்ளூர் கலைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த கூத்து இங்கு முதன் முறையாக அரங்கேற்றப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரலாற்றில் திரையரங்கம் ஒன்றில் கூத்து அரங்கேற்றப்படுவது முதன் முறையாக என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூத்தில் பங்கேற்கும் இயக்குநர் எஸ்.ஏ.உதயன், கூத்து அண்ணாவியார் சீ.எம்.சேவியர் பெர்ணாந்து, பிற்பாடல் கலைஞர் கி.டேவிட் குரூஸ், ஆர்மோனியக் கலைஞர் செ.அல்போன்ஸ் பீரிஸ், பிற்பாடல் கலைஞர் ஆ.முரளி, அரங்க முகாமையாளர் சி.ஆனந்தநாயகம் லியோன், நடிகர் அ.நிரோசன் குலாஸ், நடிகர் ஆர்.திலீப்துரம், மத்தளக் கலைஞர் பெஸ்கோ பஸ்ரியன் றொற்றிக்கோ, நடிகை செல்ரன் மேரி லக்ஷியா மிராண்டா, நடிகர் சகாயநாதன் விதுசன் மிராண்டா, நடிகர் கலிஸ்ரர் திவ்யன் லோகு, நடிகர் ரூபினஸ் வெரோனிக்சியஸ் குரூஸ், நடிகை சாந்தகுமார் அக்ஷயா, நடிகை இமானுவேல் செபாலினி மிராண்டா, நடிகை ரூபினஸ் ஆன் செரோனா குரூஸ், நடிகை அலெக்ஸ்மேரி எல்க்கானா குரூஸ், ஒப்பனையாளர் அ.ச.மா. மில்லன் குரூஸ், நடிகை ஜெயபாலன் ருக்மிலா பீரிஸ் ஆகியோர் படங்களில் காணப்படுகின்றனர்.





# ஹெட்டிப்பொல கொட்டாம்பிட்டிய ஜமாலிய்யா அரபுக் கல்லூரியின் மீள் திறப்பு விழா

ஹெட்டிப்பொல கொட்டாம்பிட்டிய ஜமாலிய்யா அரபுக் கல்லூரியின் மீள் திறப்பு விழாவும் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வைபவம் அதிபர் அப்பாஸ் இர்ஸான் அஹ்மத் (ஜமாலி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட சொற்பொழிவாளர்களாக ஸம் ஸம் பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் பிரநிதி அஷ்ஷெய்க் அம்ஹர் ஹக்கம்டீன், கொழும்பு பெரிய பள்ளிவாசல் மதீனத்துல் இல்ம் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ், மௌலவி அபூபக்கர் பஹ்ஜி ஆகியோர் கலந்து கொண்டதுடன் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் எச். உமர்தீன், குருநாகல் மாட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி சுஜப் தீனி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி,அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், உலமாக்கள், பௌத்த சமயப் பெரியார்கள், ஊரிலுள்ள சிங்கள, முஸ்லிம் பிரமுகர்கள் உள்ளிட்டவர்கள பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த அரபுக் கல்லூரி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்பு இடம்பெற்ற கலவரத்தின் போது 2019.05.12 ஆம் திகதி முற்றாகப் பாதிக்கப்பட்டது. மீண்டும் இக்கல்லூரியின் நிர்வாகிகள், பழைய மாணவர்கள் மற்றும் ஊர்பிரமுகர்களின் அயராத முயற்சியினால் மீளவும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 2023.0.13 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

**கடவெலகெதர ஸ்ரீ விமலோதய பிரிவினா மஹா விஹாராதிபதி பூச்சிய கரம்பலே பியதிஸ்ஸ நாயக்க தேரர் அவர்கள் ஆசியுரை வழங்கும் போது**

இன்றைய கொட்டாம்பிட்டிய ஜமாலிய்யா அரபுப் கல்லூரியில் இடம்பெறும் இந்நிகழ்வு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இடம்பெறுகின்றது.ஒரு கல்வி நிலையம் திறக்கப்படும் போது 10 சிறைச்சாலைகள் மூடுவதற்கான சமநிலையான ஒத்த தன்மையைக் கொண்டதாக காணப்படுகிறது. அந்த வகையில் கல்வி நிலையம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அவையே சமூகத்தின் மேம்பாட்டை வளப்படுத்துவமாக அமைந்துள்ளன.சமூகத்தில் நல்ல நற்பிரஜைகளை உருவாக்குவதன் மூலம் சிறைச்சாலைகள் அவசியப்படப் போவதில்லை.

எனவே இந்த அரபுக் கல்லூரியில் இடம்பெறும் கல்வி நடவடிக்கைகள் யாவும் எங்களது அறநெறிப் பாடசாலையிலும் பிரிவெனாக்களிலும் இடம்பெறும் ஒத்த கல்வி நடவடிக்கைகளே நடைபெறுகின்றது. எங்களுடைய பிரிவெனாக்களில் சகல சர்வ சமயங்கள் பற்றியும் சகல மொழிகள் பற்றியும் மாணவர்கள் மத்தியில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதேபோன்று சமூக நிலை குறித்தும் போதிக்கப்படுகின்றன. எங்களுடைய அறநெறிப் பாடக் கல்வியிலும் ஆரம்பமாக சமயக் கல்வி அறிவு பற்றி மாணவர்களுக்கு தெளிவூட்டப்படுகிறது. எங்களது முஸ்லிம் மாணவச் சிறார்களுக்கு அரபுக் கல்லூரிகளில் அவர்களுக்குத் தேவையான ஆரம்பகல்வி அரபு மொழிகளிலும் தமிழிலும் போதிக்கப்படுகிறது. அதன் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் நான் ஒரு யோசனையை முன் வைக்க விரும்புகின்றேன்.

நாங்கள் இந்த நாட்டில் வாழும் மக்கள் யாவரும் பல்லின சமூகத்திற்கு மத்தியிலேயே வாழுகின்றோம். பல்லின சமூகத்திற்கு மத்தியில் வாழும் நாங்கள் மிகவும் தூர நோக்கோடு நடந்து கொள்ள வேண்டும். 1956 இல் மொழி தொடர்பில் பிரச்சினை எழுந்தது. அரசியல்வாதிகளால் பிழையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த தீர்மானத்தின் காரணமாக தமிழ் சிறார்கள் மட்டுமல்ல சிங்கள,முஸ்லிம் சிறார்கள் உலகிலே ஒரு பிழையான வழிகாட்டுதலான நிலைக்கு உட்பட்டார்கள் என்று சொல்வதில் பிழையில்லை. சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டதைப் போன்று தமிழையும் ஆங்கிலத்தையும் கட்டாயப்படுத்தி சம நிலையோடு இம்மொழிகளை அன்று வழங்கி இருக்க வேண்டும். அந்த சரியான தீர்மானங்களை எடுக்கத் தவறியதன் காரணமாக 30 வருட விடுதலைப் புலிகளின் யுத்தத்திற்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. அதேபோன்று முஸ்லிம் சிங்களக் கலவரங்களுக்கு முகம் கொடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இந்நாடு மிகவும் பொருளாதார நெருக்கடியான சூழலுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. அதன் காரணமாக நான் அரபுப் பாடசாலைகளுக்கு ஒரு விசேட ஆலோசனை ஒன்றை முன் வைக்க விரும்புகின்றேன்.

அரபுக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கட்டாயக் கல்வியாக சிங்களமும் ஆங்கிலமும் கற்பிக்கப்படல் வேண்டும். அதன் மூலம் தேர்ச்சி பெற்று சிங்கள சிறார்களுடன் சம நிலையோடு தோளோடு தோள் கைகோர்த்துக் கொண்டு தங்களிடமுள்ள கல்வி அறிவின் மூலம் எங்களுக்கிடையே காணப்படும் தூர இடைவெளியை இல்லாமற் செய்தால் சக வாழ்வு உறுதி செய்யப்படும். அரபுக் கல்லூரி அதிபர் ஆசிரியர் குழுமத்தினரிடம் இங்கு வருகை தந்துள்ள புத்திஜீவிகளிடத்திலும் இந்த வேண்டுகோளை நான் முன் வைக்கின்றேன்.

கடந்த கால வன்முறையின் காரணமாக சேதமாக்கப்பட்ட இந்த அரபுக் கல்லூரியை மீளவும் புனர் நிர்மாணம் செய்வதற்கு முன் வந்த பழைய மாணவர்களுக்கு நான் மிகுந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாங்கள் எல்லோரும் மனிதர்கள். எமது நாட்டில் வாழும் மனிதர்கள். ஏனென்றால் இந்நாட்டுக்கு அரபு நாட்டில் இருந்து ஆண் அரபிகள் தான் வந்தார்கள். அவர்கள் திருமணம் முடித்தது சிங்களத் தாய்மார்களையாகும். அதன் காரணமாக சிங்கள முஸ்லிம்களுக்கிடையே உறவு இருந்து கொண்டிருக்கிறது. எமது கிராமங்களில் வாழும் மூதாதையருடைய பிறப்புப் பதிவில் சிங்களவர்களுடைய நாமம் இருக்கிறது. எனவே நாங்கள் வேறு பிரிந்து கொண்டு செயற்படாமல் எல்லோரும் ஒன்று பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

கலவரத்தின் போது முஸ்லிம் கடைகள் தீக்கிரையாக்கப்பட்ட போது அதனை அணைப்பதற்கும் பொலிஸாருடன் சேர்ந்து தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகள் செய்தோம். பிழையான வழிகளிலுள்ள இளைஞர்களுக்கு சரியான வழிகாட்டுதல்களைச் செய்ய வேண்டும். அவர்கள் வன்முறைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கான நல்ல பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களை வழங்குதல் வேண்டும். முஸ்லிம் பள்ளிகளுக்கு உள்ளே இருப்பவையோ விஹாரைகளுக்கு உள்ளே இருப்பவையோ சிங்கள, முஸ்லிம் கடைகளுக்குள்ளே இருப்பவை அனைத்தும் எங்களுடைய தேசிய சொத்துக்கள். அவற்றை அழிக்க முயற்சிகள் செய்கின்ற மிக மோசமான கருத்தேற்றங்களைச் செய்து இனவன்முறைகளைத் தூண்டுபவர்கள் இருப்பார்களாயின் அவர்களை இனவாதிகளாகவோ சமூகத்தின் துரோகிகளாகவோ அவர்களைப் பார்க்கின்றோம். இதுதான் உண்மையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**ஹெட்டிப்பொல கொட்டாம்பிட்டிய ஜமாலிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் அப்பாஸ் இர்ஸான் அஹ்மத் (ஜமாலி) தலைமையுரை நிகழ்த்திய போது...**

இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீக, லௌகீக அறிவை வளர்க்க அரும் பணியாற்றிக் கொண்டிருந்த பலதரப்பட்ட அரபுக் கல்லூரிகளில் எமது 'ஜமாலிய்யா' கலாசாலையும் ஒன்றாகும்.

கொட்டாம்பிட்டிய எனும் கிராமத்தில் பண்டுவஸ்நுவர ராஜதானியவுக்கு அருகாமையில் எமது 'ஜமாலிய்யா' கலாபீடம் அமைந்துள்ளது.

இக்கல்லூரி 1991 ஆம் ஆண்டு கொட்டாம்பிடிய 'மஸ்ஜிதுல் ஹீதா' ஜும்ஆ பள்ளிவாசலின் நிர்வாக சபையினரதும், ஊர் ஜமாஅத்தினர்களினதும் பேரில் ஜும்ஆப் பள்ளிவாசலில் சுமார் 36 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு 1994 ஆம் ஆண்டு முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட முன்னணி அரபு கலாபீடங்களில் ஒன்றாகும்.

இக்கல்லூரியின் ஆரம்ப அதிபராக இவ்வூரைச் சேர்ந்த மௌலவி எம்.ஐ.எம். இப்றாஹீம் (தீனி) கடமையாற்றினார்.

1991 இல் இருந்து 2019 வரை ஏற்றத் தாழ்வுகளுடன் சீரும் சிறப்புமாக வீரநடை போட்டுக் கொண்டிருந்த எமது கலாபீடம் 70 ஆலிம்களையும் 35க்கு மேற்பட்ட ஹாபிழ்களையும் இந்நாட்டுக்கு சேவை செய்யும் நோக்குடன் வெளியாக்கியுள்ளது.

சுமார் 29 வருட காலங்களில் மொத்தமாக ஆறு பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. இவ்வாறு வீரு நடைபோட்டுக் கொண்டிருந்த எமது வரலாற்றுப் பாதையில் 2019 ஆம் ஆண்டு சஹ்ரானினால் நடத்தப்பட்ட இஸ்லாத்திற்கும், குர்ஆனிற்கும், ஹதீஸிற்கும் எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத குண்டுத்தாக்குதலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தாக்குதளில் முற்றாக தீக்கிரையான எமது கலாபீடத்தை மீள ஆரம்பிப்பதற்கு ஊர் நிர்வாகிகள் மற்றும் ஊர் ஜமாஅத்தினர் குறிப்பாக இக் கலாபீடத்தின் எனது சக பழைய மாணவர்களின் ஆலோசனைகள், முயற்சிகள் செய்து பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து பலரது தியாகத்திற்கு மத்தியில் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரம்பத்திற்கு எம்மை நம்பி மாணவர்களை அனுப்பிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, உமது பிள்ளைகளை அமானிதமாக நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம். உமது பிள்ளைகளை அல்லாஹ்வின் உதவியோடு ஆளுமைமிக்க தக்வாவுடைய நவீன சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆலிம்களாக உருவாக்குவதற்குரிய முழு முயற்சியையும் நாங்கள் செய்வோம்.

அத்தோடு எமது கல்லூரியை இதுவரை காலமும் நடத்திச் சென்ற நிர்வாகிகள் மற்றும் இங்கு கடமை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை நன்றியோடு நினைவுகூருகிறேன்.

இதுவரை காலம் எமது இக்கல்லூரியை நடத்திச் செல்வதற்கு உதவி செய்த அனைத்து பரோபகாரிகளையும் நன்றியோடு நினைவு கூர்ந்ததோடு மீண்டும் கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுக்குமாறும் வேண்டிக் கொண்டார்.

ஆகவே மீள ஆரம்பமாகும் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு தேவையான நிவர்த்தி செய்யப்பட வேண்டிய பல தேவைகள் உள்ளன. எனவே எதிர்காலத்தில் மீண்டும் எமது கலாபீடம் மென்மேலும் முன்னேற்றப்பாதையில் வீருநடை போட சமூகத்திலுள்ள சகல தனவந்தர்களும், புத்திஜீவிகளும், நலன் விரும்பிகளும் ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றேன்.

**அல் ஜமாலியா அரபுக் கல்லூரியின் மௌலவி சான்றிதழ் பெற்றவர்கள் விபரம்**

### ஆண்டு 1998

- ★ மௌலவி எம்.ஐ.எம். பஸ்லூர் ரஹ்மான் (ஜமாலி) கஹட்டகஸ்திகிலிய
- ★ மௌலவி எம்.எஸ்.எம். லாபிர் (ஜமாலி) கல்பிட்டி
- ★ மௌலவி ஏ.எம்.எம். நஸீர் (ஜமாலி) கிண்ணியா
- ★ மௌலவி ஏ.எப்.எம். அஸ்மி (ஜமாலி) திருகோணமலை
- ★ மௌலவி எம்.பி.எம்.நளீம் (ஜமாலி) கந்தளாய்
- ★ மௌலவி எம்.எம்.முஸ்தகீம் (ஜமாலி) கல்லாஞ்ஞியாகம
- ★ மௌலவி ஏ.ஜி.எம்.ஸரூக் (ஜமாலி) சிராஜ் நகர்

### ஆண்டு 2000

- ★ மௌலவி ஏ.எல்.எம். நிஸாம் (ஜமாலி) தோரகொடுவ
- ★ மௌலவி ஏ.சி.எம். ஸாஜித் (ஜமாலி) முல்லைத்தீவு
- ★ மௌலவி எம்.எம்.அன்ஸார் (ஜமாலி) மதுரங்குளி

### ஆண்டு 2001

- ★ மௌலவி ஏ.ஜே.எம். சியாம் (ஜமாலி) மன்னார்
- ★ மௌலவி ஏ.என்.எம் பாரிஸ் (ஜமாலி) கண்டி
- ★ மௌலவி எச்.ஏ.எம். இப்னுஸ்ஸலாம் (ஜமாலி) கொள்ளன்தமுவ
- ★ மௌலவி ஏ.எம்.எம். ரிழ்வி (ஜமாலி) குருந்துகொள்ள
- ★ மௌலவி எம்.எஸ்.எம்.பைரூஸ் (ஜமாலி) மடிகே, மிதியாலை

### ஆண்டு 2006

- ★ மௌலவி எம்.ஜே.அதாஉள்ளாஹ், அம்புகாகம, நிகவெரடிய
- ★ மௌலவி எம்.ஜே.நியாஸ் உப்புக்குளம், மன்னார்

### ஆண்டு 2007

- ★ மௌலவி அஸ்மி நுரைச்சோலை, கல்பிட்டி
- ★ மௌலவி எம்.ரி.எம். இர்பாஸ் மதவ, குருணாகல்
- ★ மௌலவி ஏ.எல்.எம்.அஸாம், மடியே, மிதியாலை
- ★ மௌலவி எம்.ஆர்.எம்.ரிஸாம் ஹம்மாலியா, பண்டாரகொஸ்வத்த
- ★ மௌளவி ஏ.எல்.எம். முனவ்வர், கட்டுவென்வில, பொலன்னறுவ

### ஆண்டு 2008

- ★ மௌலவி எம்.ஆர்.எம்.புஹாரி, கட்டுவென்வில, பொலன்னறுவ
- ★ மௌலவி எம்.எச்.எம். ரிஸ்மி, கல்கமுவ
- ★ மௌலவி ஏ.எல்.எம். ஹனீபா, கட்டுவென்வில, பொலன்னறுவ
- ★ மௌலவி ஏ.எஸ்.எம். நஸீர்தீன், கட்டுவென்வில, பொலன்னறுவ
- ★ மௌலவி எம்.ஜே.எம். முஹம்மத், மடிகே, மிதியாலை
- ★ மௌலவி எம்.எல்.எம்.முஸ்தபா, கட்டுவென்வில, பொலன்னறுவ
- ★ மௌலவி எம்.ஏ.எம்.நஸீம், சிராஜ் நகர், தம்பலகாமம்

### ஆண்டு 2009

- ★ மௌலவி எஸ்.வை.எம். சிஹான், யகம்வில, ஆரிகாமம்
- ★ மௌலவி எம்.எப்.எம். நஸ்வர், தெலியாகொன்ன, குருநாகல்
- ★ மௌலவி எம்.எச்.எம். அஸ்லம்
- ★ மௌலவி எம்.ஐ.எம். இர்ஷாத், இகுருவத்த, குருநாகல்
- ★ மௌலவி எம்.ஆர்.எம்.ஜௌஸி (ஜமாலி) சிராஜ்நகர்
- ★ மௌலவி எம்.ரி.எம் றிப்கான் (ஜமாலி) நாரம்மல
- ★ மௌலவி யு.எப்.எம். காமில் (ஜமாலி)
- ★ மௌலவி எம்.ஐ.எம். ஹபீலுர் ரஹ்மான் (ஜமாலி) குருணாகல்
- ★ மௌலவி எம்.ரி.எம். நிஸாம் (ஜமாலி) கல்கமுக
- ★ மௌலவி ஏ.டி.எம். நிஸார் (ஜமாலி) நுவரெலியா




























## குறைந்த வலுசக்தி செயற்திறன் குளிர்சாதனப் பெட்டிகளை அறிமுகப்படுத்தும் அங்குரார்ப்பண நிகழ்வு

வீடு குளிரூட்டப்பட்டதாக இல்லாவிடின் குடியிருப்பு மின்சாரக் கட்டணத்தில் மிகப்பெரிய செலவாக அமைவது குளிர்சாதனப்பெட்டியாகும். குளிர்சாதனப்பெட்டி முதிர்ச்சியடையும் போது இந்த விளைவு அதிகமாக காணப்படும், குறிப்பாக பத்து வருட சேவை காலத்தை நிறைவு செய்த பிற்பாடு. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (ளுடுளுநுயு) முன்னோடி குளிர்சாதனப் பெட்டி மாற்றுத் திட்டத்தை 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி டீஆஐஊர் இல் ஆரம்பித்தது. அதே நேரத்தில், மூன்று பெரிய உபகரண விற்பனையாளர்களால் வழங்கப்படும் 15 மாதிரி குளிர்சாதனப் பெட்டிகளுக்கு குறைந்தபட்ச சக்தி செயல்திறன் (ஆநுP) பெயரிடல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது வாடிக்கையாளர்கள் தங்கள் அடுத்த கொள்வனவின் போது திறமையான மாதிரியைத் தேர்ந்தெடுக்க வழியமைக்கிறது. குளிர்சாதனப் பெட்டி விநியோகத்தர்களை தன்னார்வு முறையில் சக்தி பெயரிடல் திட்டத்தில் சேர ஊக்குவிப்பதற்காகவும், பொது மக்களிடையே குளிர்சாதனப் பெட்டிகளுக்கான ஆநுP பெயரிடல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த வெளியீடு நடத்தப்பட்டது.

உபகரணங்களின் சக்தி பெயரிடல் திட்டம் ளுடுளுநுயு ஆல் நடத்தப்படும் முக்கிய திட்டங்களில் ஒன்றாகும். இந்த திட்டத்தின் நோக்கம், சக்தி திறன் கொண்ட தயாரிப்புகளை சந்தையில் நிறைவாக காணப்படுவதை ஊக்குவிப்பதன் மூலம் சாதனங்களின் சக்தி நுகர்வை படிப்படியாகக் குறைப்பதாகும், அதே நேரத்தில் சக்தி விரயம் செய்யும் பொருட்கள் சந்தையில் நுழைவதைத் தடுக்கிறது. முக்கியமான சக்தி பயன்பாட்டுத் தகவலைக் கொண்டுள்ள பெயரிடலின் மூலம் நுகர்வோர் சக்தி திறன் கொண்ட தயாரிப்புகளை விற்பனை செய்யும் இடத்தில் அடையாளம் காண அனுமதிப்பதன் மூலம் இது அடையப்படுகிறது. ஒழுங்குமுறை மூலம் ஒரு கட்டாயத் திட்டமாக இந்தத் திட்டம் உயர்த்தப்பட்டவுடன், நாட்டில் திறமையற்ற பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விற்பனையைத் தடை செய்ய முடியும்.தற்போது டுநுனு விளக்குகள், கணினிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் சக்தி திறன் மற்றும் தொடர்புடைய தகவல்களை வழங்கும் அங்கீகார வகை பெயரிடல்களை கொண்டுள்ளன. அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச சக்தி திறன் மதிப்புக்கு மேல் சக்தி திறன் கொண்ட தயாரிப்புகள் மட்டுமே பெயரிடல்களைக் காட்ட அனுமதிக்கப்படுகின்றன. எனவே இது “குறைந்தபட்ச சக்தி திறன் (ஆநுP)“ பெயரிடல் என அழைக்கப்படுகிறது. ஆநுP பெயரிடல்களுக்கு சந்தை மாற்றியமைத்த பிறகு, நட்சத்திர மதிப்பீடுகளுடன் சக்தி பெயரிடல்கள் படிப்படியாக இந்த சாதனங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும். குளிர்சாதனப் பெட்டிகளில் ஆநுP பெயரிடல்களைக் காட்சிப்படுத்துவது தற்போது தன்னார்வ அடிப்படையில் காணப்படுவதுடன் இந்த ஆண்டுற்குள் இது கட்டாயமாக்கப்படும். வீட்டு மின்சாரம் பயன்படுத்துபவர்கள், ஆநுP சக்தி பெயரிடல்களுடன் கூடிய திறமையான குளிர்சாதனப் பெட்டிகளை வாங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள், இது அவர்களது சொந்த மின்சாரக் கட்டணத்தையும், நாட்டின் எரிபொருள் இறக்குமதிச் செலவையும் குறைக்க உதவும் ஒரு முக்கிய நடவடிக்கையாகும்.இந்த முன்னோடித் திட்டம் 1,000 பழைய குளிர்சாதனப் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய ஆநுP இணக்கமான மற்றும் சக்தி திறன் கொண்ட குளிர்சாதனப்பெட்டிகளை மேல் மாகாணத்தில் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் ஆண்டுக்கு 480,000 மறுா மின்சாரம் சேமிக்கப்படுகிறது.

இது ஒரு பொதுவான பங்கேற்பாளர் குடும்பத்தின் மின்சாரக் கட்டணத்தில் தோராயமாக 30மூ குறைப்பு. முன்னோடித் திட்டம் உண்மையான சேமிப்பை அளவிடவும் ஆவணப்படுத்தவும் பயன்படுத்தப்படும் மற்றும் கைவிடப்பட்ட குளிர்சாதன பெட்டிகள் மற்றும் தொடர்புடைய அபாயகரமான பொருட்களை அகற்றுவதற்கான விரிவான வலையமைப்பை சோதிக்கும். முன்னோடித் திட்டம் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்குள் 500,000 அலகுகளை அகற்றி, 500புறுா மின்சாரத்தை (தேசிய மின்சார பயன்பாட்டில் தோராயமாக 3மூ) சேமிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வானளவு உயரும் மின் கட்டணத்திற்கான மிகச்சிறந்த தீர்வு அபான்ஸ் புசநநசீழ GREEN PRO சிறப்பு சேமிப்பு குளிர்சாதனப்பெட்டி

நீங்கள் உங்கள் இல்லத்தில் பயன்படுத்தும் மின் உற்பத்திப் பொருட்களில் அதிகமாக மின்சாரம் விரையமாவது குளிர்சாதனப் பெட்டிகளுக்காகும். அது உங்கள் வீட்டு மின் பட்டியலின் 50% அளவு செலவாகிறது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆற்றல் திறன் கொண்ட குளிர்சாதனப் பெட்டிகளை ஊக்குவித்தல் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் ஆதரவுடன், அபான்ஸ் நிறுவனம் மலிவு விலையில் அபான்ஸ் GreenPro சுப்பர் சேவிங் குளிர்சாதனப் பெட்டியை சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும் முன்னணி குளிர்சதானப் பெட்டி அபான்ஸ் GreenPro குளிர்சாதனப் பெட்டியாகும். அபான்ஸ் GreenPro சுப்பர் சேவர் குளிர்சாதனப்பெட்டியானது நிலையான நிலைமைகளின் கீழ் செயல்படும் போது 75 வாட்களை மட்டுமே பயன்படுத்துகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த R600C குளிர்பதன வாயு மின்சாரத்தை சிறப்பாக சேமிக்கிறது. 40 மீட்டர் தடித்த சுவர்கள் இருப்பதால் குளிர்ச்சி சிறப்பாக பாதுகாக்கப்படுவதோடு, மிகவும் சிறந்த முறையில் மின்சாரத்தை சேமிப்பதற்கு உதவுகிறது.

இலங்கை ஆற்றல் மதிப்பீடுகளுக்கான நிலையான அமைப்பாக கருதப்படும் இலங்கை சுனித்யா எரிசக்தி அதிகாரசபை அபான்ஸ் குளிர்சாதனப்பெட்டிகளை அங்கீகரித்துள்ளது. ஏனைய போட்டி உற்பத்திகளோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு குளிர்சாதனப் பெட்டி அபான்ஸ் GreenPro குளிர்சாதனப் பெட்டியாகும். இதில் கொப்பர் டியூப் பயன்படுத்தப்பட்டிருப்பதால் நீடித்துழைக்கும் தன்மையை கொண்டுள்ளமையே இதன் சிறப்பம்சமாகும். மேலும் நம்பகமான விற்பனையின் பின்னரான சேவையுடன் கொம்பிரெஸருக்கு 10 வருட உத்தரவாதமும் வழங்கப்படுகிறது. GreenPro குளிர்சாதனப் பெட்டிகளில் இருக்கும் மற்றுமொரு சிறப்பம்சம் யாதெனில் தேவையான அளவு உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியும். குளிர்சாதனப்பெட்டியின் உள்ளே வெப்பநிலை ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் ஒரே சீராக இருப்பதால், குறிப்பிடத்தக்க மின்சார சேமிப்பு






கிடைக்கிறது. இதன் காரணமாக குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே, மேல், கீழ் மற்றும் கதவில் அமைந்துள்ள ராக்கைகளில் ஒரே சீராக குறித்த வெப்பநிலை பரப்பப்படுகிறது. அதன்படி GreenPro குளிர்சாதனப் பெட்டியில் நீங்கள் களஞ்சியம் செய்யும் உணவுகள் நீண்ட நேரம் பாதுகாப்பாக பராமரிக்கப்படுகிறது. ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளோடு ஒப்பிடும் போது GreenPro குளிர்சாதனப்பெட்டி 185 லீட்டர் பிரம்மாண்ட கொள்ளளவை கொண்டுள்ளதோடு, தேவையான அனைத்து உணவுகளையும் புத்துணர்வாகவும், பாதுகாப்பாகவும் களஞ்சியம் செய்து வைத்துக்கொள்ள முடியும். அதன் அழகிய நிறைவு மற்றும் தோற்றம் எந்தவொரு சமையலறைக்கும் புத்துணர்ச்சியூட்டுவதோடு, பிரகாசத்தையும் தருகிறது. உள்ளே இருக்கும் LED லைட்டிங்

சிஸ்டம் நல்ல வெளிச்சத்தைத் தருவதோடு நீண்ட நேரம் நீடிக்கும். மின்சாரத்தை சேமிக்கவும் இது பெரிதும் உதவுகிறது. அபான்ஸ் GreenPro சிறப்பு சேமிப்பு குளிர்சதானப்பெட்டியை 18 மாதங்கள் இலகு தவணை முறையில் நாடளாவிய அபான்ஸ் காட்சியறைகள் மற்றும் BuyAbans.com இடமிருந்து விசேட

விற்பனையின் பின்னரான சிறப்பு சேவைகளுடன் பெற்றுக்கொள்ள முடியும்.







# நவீன மற்றும் சுகாதார பாதுகாப்புடன் முறையான தரத்தைக் கொண்ட சிங்கர் குளிர்சாதனப் பெட்டி




வலுசக்தி பாதுகாப்பைக் கொண்ட இலங்கையை நோக்கி செல்லும் பயணத்தில் குளிர்சாதனப் பெட்டிக்கான உச்ச வலுசக்தி அளவு ஒன்று அறிமுகம் செய்யப்பட்டவுடன் இந்நாட்டின் நுகர்வுப் பொருள் விற்பனையில் முதன்மையான சிங்கர் நிறுவனம் அந்தத் தரநிலையையும் விஞ்சி உயர் தரத்திலான சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகளை வாடிக்கையாளர்களுக்கு 100% சுற்றுச்சூழல் சார்புடையதாக சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டியின் தனித்துவம் மற்றும் வலுசக்தியை சிக்கனப்படுத்தும் குளிர்சாதனப் பெட்டியின் பயன்பாடு எவ்வாறானது என்பது பற்றி சிங்கர் நிறுவனத்தின் பணிப்பாளர் கெலும் கொஸ்பலவத்த அவர்களுடன் செய்த நேர்காணலே இது.

**அறிமுகப்படுத்தப்பட்ட வலுசக்தி அளவு சிங்கர் குளிர்சானப் பெட்டிக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது?**

சிங்கர் நிறுவனம் குளிர்சாதனப் பெட்டிகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்து தற்போது பல்லாண்டுகள் (36) ஆகிவிட்டன. குளிர்சாதனப் பெட்டி உற்பத்தியாளர் என்ற வகையில் சுற்றுச்சூழலுக்கு சார்புடையதாகவும் வலுசக்தியை பாதுகாப்பான முறையிலும் வாடிக்கையாளருக்காக தரப்படுத்தப்பட்ட குளிர்சாதனப் பெட்டி ஒன்றை வழங்குவதற்கே நாம் எப்போதும் எதிர்பார்க்கிறோம். தற்போது இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் சந்தையில் விற்பனை செய்ய முடியுமான குளிர்சாதனப் பெட்டிக்காக வலுசக்தி அளவுகள் பலதை அறிமுகம் செய்துள்ளது. உண்மையில் நாம் அது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். ஏனென்றால் ஏற்கனவே அந்த வலுசக்தி அளவுக்கு அமையவே சிங்கர் குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. இலங்கை நிலைபெறுதகுவலு அதிகாரசபை அறிமுகப்படுத்திய இந்தத் திட்டத்திற்கு அமைய சந்தையில் விற்பனையாகும் சிங்கர் குளிர்சாதனப் பெட்டியின் தரம் தொடர்ந்தும் உறுதி செய்யப்படுகிறது. அதேபோன்று பாதுகாப்பானதாக அமைகிறது. மற்றது பல்வேறு வடிவிலான குளிர்சாதனப் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதால் இவ்வாறான தரநிலை அளவுக்கு நாம் இசைவாக்கம் பெற வேண்டும். ஆனால் சிங்கர் குளிர்சாதனப் பெட்டிக்கு குறிப்பாக எமக்கு இதற்காக இசைவாக்கம் அடைய வேண்டிய தேவை இருக்கவில்லை என்பதை இங்கு நான் குறிப்பிட வேண்டும். இதனை அறிமுகம் செய்வதற்கு முன்னர் இருந்தே அந்த தரத்திற்கு மற்றும் வலுசக்தி அளவுக்கு நாம் குளிர்சாதனப் பெட்டிகளை உற்பத்தி செய்தோம். செயல்திறன் உச்ச நிலையில் இருந்தது. தெற்காசிய பிராந்தியத்தில் முதல்முறையாக R600a குளிராக்கி இருக்கின்ற குளிர்சாதனப் பெட்டியை சந்தைக்கு அறிமுகப்படுத்தியது சிங்கர் நிறுவனமாகும். அது அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது 10 ஆண்டுகள் ஆகிறது. எமது அறிமுகப்படுத்தலுடன் ஏனைய குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் இந்தத் தொழில்நுட்பத்திற்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. தற்போது ஏழு (Not seven many) வடிவங்களில் நாம் குளிர்சாதனப் பெட்டிகளை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளோம். அதில் சிங்கர் சிசில் வடிவம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மற்றைய குளிர்சாதனப் பெட்டி வடிவங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டிக்கு சந்தையில் பெரும் கேள்வி உள்ளது.



சிங்கர், சிசில் குளிர்சாதனப் பெட்டிகள் எமது கைகளால் எமது தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி செய்யப்படுவது உங்களுக்குத் தெரியுமா? அதன் மூலம் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கியதோடு நாட்டின் வருடாந்த குளிர்சாதனப் பெட்டி தேவையில் 45%ஐ உற்பத்தி செய்வதற்கும் எம்மால் முடிந்தது. எமது கைகளால் எமது நாட்டின் அபிவிருத்தியின் பங்காளியாக இருப்பதில் சிங்கர் பெருமை அடைகிறது.

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அறிமுகம் செய்த வகையில் சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டி நவீனப்படுத்தப்பட்டதா?**

புதிதாக முக்கிய நவீனப்படுத்தல் இங்கு இடம்பெறவில்லை. எங்களது குளிர்சாதனப் பெட்டிகளில் அந்தத் தொழில்நுட்பம் ஆரம்பம் தொடக்கம் இருந்தது. நாம் சந்தைக்குச் சென்று எமது குளிர்சாதனப் பெட்டிகள் தரத்தில் உயர்ந்தவை என்று கூறுவதை விட நிலைபெறுதகு வலு அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட முறையின் கீழ் சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டிகள் தரத்தில் உயர்ந்தது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படுகிறது.

**சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகளின் செயல்திறன் எவ்வாறானது?**

மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்த செயற்பாடு மிக நல்ல விடயம். சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையால் சந்தையில் விற்பனை செய்ய வேண்டிய குளிர்சாதனப் பெட்டிக்காக தயாரிக்கப்பட்ட வலுசக்தி அளவை விட உயர்ந்ததாக உள்ள என்று குறிப்பிட முடியும். ஆசியாவில் மிக செயல்திறன் கொண்ட மற்றும் வலுசக்தியை சிக்கனப்படுத்தும் குளிர்சாதனப் பெட்டி என சிங்கர்/சிசில் குளிர்சாதனப் பெட்டியை அடையாளப்படுத்த முடியும்.

**சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டியின் வடிவம் பற்றி குறிப்பிடுவதென்றால்?**

No Frost மற்றும் Direct Cool என்ற வகையில் விசேட அம்சங்கள் கொண்ட இரட்டை கதவுகள் மற்றும் ஒற்றைக் கதவு என இந்த சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டிகளை வாங்குவதற்கு வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு உள்ளது. R600a குளிராக்கி தொழில்நுட்பத்தைக் கொண்டதாக இருப்பதோடு உணவுப் பொருட்களை புதிதாய் வைத்திருப்பதற்கும் வலுசக்தி, சிக்கனம் போன்ற சிறப்பம்சங்கள் பலதும் சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகளில் இருக்கின்றன. அதன்படி சுற்றுச்சூழல் வெப்பநிலைக்கு இணையாக குளிர்சாதனப் பெட்டியின் உட்புற வெப்பநிலை தானாக செயற்படுத்தப்படுவது முதன்மையான சிறப்பம்சமாகும். அதேபோன்று மின்சாரம் கூடிக் குறையும் நேரங்களில் குளிர்சாதனப் பெட்டியில் கொம்ப்ரசருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதற்கு இசைவாக்கம் பெறும் தானியங்கி செயற்பாடு கொண்ட கொள்ளளவு சென்சர் போன்று, குளிர்சாதனப் பெட்டியின் கதவை திறக்கும்போது மின் சக்தி செலவிடப்படுவதை தடுக்கும் செயல்முறை, வெப்பநிலைக் கட்டுப்பாட்டு முறைகள் பொன்ற தொழில்நுட்ப முறைகள் பலதையும் கொண்டதாக சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டி அமைந்துள்ளது.

**வாடிக்கையாளர் ஒருவர் சந்தையில் சிறந்த குளிர்சாதனப் பெட்டி ஒன்றை கண்டறிவது எவ்வாறு?**

அதற்காக ஹைட்ரோகாபன் - R 600a போன்ற குளிராக்கி, ஓசோன் படலத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தாத தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள குளிர்சாதனப் பெட்டியாக இருக்க வேண்டும். சிங்கர் சிசில் குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி செய்யப்படுவது R 600a சிறந்த குளிராக்கியை பயன்படுத்தியாகும். அதேபோன்று நாம் பயன்படுத்துகின்ற R 600a வடிவ இயற்கை குளிராக்கிக்கு வாடிக்கையாளர்கள் அதிகம் நாட்டம் காண்பிப்பதை பார்க்க முடியும்.

அதனால் உங்களிடம் இருப்பது பழைய குளிர்சாதனப் பெட்டியாக இருந்தால் புதிய குளிர்சாதனப் பெட்டி ஒன்றை வாங்கும்படியே வாடிக்கையாளர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கூற வேண்டியுள்ளது. ஏனென்றால் அதன் மூலம் பணம் மற்றும் வலுசக்தி என இரு வளங்களும் மிச்சப்படுத்தப்படுகின்றன. பொதுவாக குளிர்சாதனப் பெட்டி பெரிதாகும் அளவுக்கு அதற்காக செலவாகும் வலுசக்தியும் அதிகம். குளிர்சாதனப் பெட்டியின் கதவை அடிக்கடி திறக்காமல் இருப்பதும் அதில் பொருட்களை சேமிப்பதில் அறிவுபூர்வமாக செயற்படுவதும் முக்கியம்.

**குளிர்சாதனப் பெட்டியை பயன்படுத்த வேண்டிய முறை பற்றி கூறுவதென்றால்?**

அதனை நேர்த்தியாக வைத்திருப்பது மிக முக்கிமானது. குறிப்பாக உணவுப் பொருட்களை சேமிக்கும்போது வரிசை முறையாக வைக்க வேண்டும். மேல் தட்டில் குளிரை அகற்ற வேண்டிய பொருட்கள், சமைத்த உணவு மற்றும் பழங்களும் நடுத் தட்டில் காய்கறிகளும் வைக்கப்படுவது முக்கியம். தேவையற்ற பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் இருந்து நீக்கி வாரத்துக்கு ஒருமுறையேனும் குளிர்சாதனப் பெட்டியை சுத்தப்படுத்துங்கள். பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவற்றை நாளொன்றுக்கு தேவையான அளவில் பாத்திரம் ஒன்றுக்குள் சேமித்து வைக்க முடியும்.

திரவ பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கும்போது நன்றாக மூடுவதும் அவசியம். சூடான உணவுகளை குளிர்சாதனப் பெட்டிக்குள் வைப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். குளிர்சாதனப் பெட்டியின் இரு பக்கமாகவும் பின் பக்கமாகவும் நன்றாக காற்றோட்டமாக இருக்க வேண்டும். குளிர்சாதனப் பெட்டியை சரியான இடத்தில் வைப்பது மற்றும் சுத்தமாக வைத்திருப்பது மிக முக்கியமானது. குறிப்பாக வலுசக்தியை பாதுகாப்பதற்கு மற்றும் செயல்திறனுடன் தரத்தோடு குளிர்சாதனப் பெட்டியை பயன்படுத்துவதற்கு இந்த விடயங்கள் பற்றி வடிக்கையாளர்கள் கருத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

துஷாரி நேரஞ்சா விக்ரமசிங்க

LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
: 0112 429 339, 0777 270 076
Coordinated by
M.I.Nizamdeen




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## மெதகம பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

மெதகம பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2023-04-01ஆம் திகதி முதல் 2026-03-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறிபொறிக்கப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

- பெறுகை விண்ணப்பங்கள் வழங்கப்படுதல் - 2023-02-17ஆம் திகதி 2023-03-14ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை
- பெறுகை விண்ணப்பங்களைத் திறத்தல்: 2023-03-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு
- வதிவிடத்தை உறுதி செய்யும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளர் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- பெற்றுக்கொண்ட பெறுகை விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென பெயரிட்டு வெவ்வேறான இரு சிறிய உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த உறைக்கு முத்திரைக் குறி பொறித்து 2023-03-13ஆம் பி.ப. 1.30 மணிக்கு முன் ''தலைவர், மெதகம பிரதேச சபை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் என்பதுடன் நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதானால் சபையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் குத்தகைக்கு எடுப்பதற்கு எதிர்பார்க்கும் ஆதனத்தின் பெயரைக் குறிப்பிட்டு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் சமர்ப்பித்தல் எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பெறுகை விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளும்போது தமது தேசிய அடையாள அட்டை / சாரதி உரிமம் / வெளிநாட்டு கடவுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-2266474 தொலைபேசியில் விசாரித்தறியலாம் அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**அட்டவணை**

| ஆதனத்தின் விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத கேள்விப் பிணை முறித் தொகை) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை | ஆகக் குறைந்த கேள்வி | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|
| மெதகம வாரச்சந்தை புதிய கட்டிடத்திலுள்ள 10ஆம் இலக்கக் கடை | 5000.00 | 25000.00 | 50000.00 | 9000.00 |
| இறைச்சிக் கடை மீன் கடை அமைந்துள்ள புதிய கட்டிடத்திலுள்ள 03ஆம் இலக்கக் கடை | 5000.00 | 25000.00 | 50000.00 | 9000.00 |
| மெதகம வாரச் சந்தை 11ஆம் இலக்க அல்லி கடை அறை | 5000.00 | 25000.00 | 50000.00 | 3000.00 |

**ரஞ்சித் பியதிகம,**
**தலைவர்**
**மெதகம பிரதேச சபை.**

CSIAP

THE WORLD BANK

# Invitation for Bids

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## National Competitive Bidding

**Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)**
**Project No: P163742**
**IFB No: 2022/09**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) – World Bank in the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture and it intends to apply part of the proceeds of this credit to eligible payments under the Contracts given in the table below.

2. The Chairman, Regional Procurement Committee (Northern Province) on behalf of the Climate Smart Irrigated Agriculture Project (CSIAP) invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

| Lot No | Contract No | Description of Work | Estimated Total Cost Excluding VAT(LKR) | CIDA Registration | Non -refundable Fee (LKR) | Bid Security Value in (LKR) and Validity Date |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-336896-CW- RFB / NP/ DPDO/Rehb.T (39)/2 023/01 | Construction of Head Works & Canal System of Thevankaddu Kulam in Upper Malkai Aru Cascade, Mulankavil ASC Area, Poonakiri Divisional Secretaries Division at Kilinochchi District, Northern Province | 90.17 Mn | C4 or above | **12,500.00** | **1,355,000.00 15th August 2023** |
| 02 | LK-MOA-336903-CWRFB / NP/ DPDO/Rehb.T (65)/2 023/02 | Construction of Head Works & Vanneri kulam in Upper Malkai Aru Cascade, Akkarayan ASC Area, Karachchi Divisional Secretaries Division at Kilinochchi District, Northern Province | 90.30 Mn | C4 or above | **12,500.00** | **1,355,000.00 15th August 2023** |

3. Bidding shall be conducted through National Competitive Bidding (NCB).

4. Interested bidders may obtain further information from **Deputy Project Director, Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi (T.P: 021 228 4881 Fax: 021 228 4880, Email: dpd.np@csiap.lk),** and inspect the bidding documents free of cost at the same place on working days from **9.00 hrs to 14.00 hrs.**

5. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements in Bidding Document. Further the successful bidder shall have valid registration Grade in Construction Industry Development Authority (CIDA) as mentioned in above Table under the specialty of **Irrigation & Drainage Canals.** Bidders are free to bid for more than one Contract but selections, will be made accordingly to the financial and other capacity limits of the Contractors.

6. Bidding Document in English Language can be purchased by eligible bidders on the submission of a written application on original Letter Head to the **Deputy Project Director** at the address mentioned in **item 4** above, and paying a non-refundable fee (Please refer above table for the amount) in Cash only on Working days from

   ➤ **28th February 2023** to **20th March 2023** from **09:00 hrs.to 14:00 hrs. for Lot no 01 & 02.**

7. Pre-bid meeting and subsequent Site Visit will be arranged on **7th March 2023** at 10.00 Hrs, at the place mentioned in **item 4** above. Prospective bidders are requested to inspect the sites with the assistance of the relevant officers at their own cost.

8. Bid must be accompanied by an Unconditional Bid Guarantee on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table. Any Bid without a valid Bid Guarantee as indicated will be considered as non-responsive and rejected without any query.

9. All pages of the Bidding Documents shall be signed by the bidder and affixed his seal.

10. The Bids shall submit as the Original and the Duplicate. The original and the duplicate should be Enclosed in separate sealed envelopes and marked as the "Original" and "Duplicate"' respectively. Both envelopes shall be enclosed in a sealed single envelope, and write the Description of Work and Contract No on top of left-hand corner of the envelope.

11. Completed Bids shall either be deposited in the Tender Box kept for this purpose or send under registered post address to **The Chairman, Regional Procurement Committee (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi** to reach

    ➤ on or before **:11.00 am on 21st March 2023 Lot no 01 & 02.**

12. Receiving of the Bids shall be closed

    ➤ at **11.00 am on 2023-03-21 for Lot no 01 & 02**

Late Bids shall not be accepted. Bids will be opened immediately after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.

**Chairman,**
**Regional Procurement Committee (Northern Province) Climate Smart Irrigated Agriculture Project,**
**Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction,**
**Wilson road, Kilinochchi**

Date - 2023-02-17

## இலங்கை மின்சார சபை

# 2023 மின் கட்டணத் திருத்தம்

கீழ்க்காணும் இறுப்பனவுகளுக்குரிய மின் கட்டணமானது, அனைத்து நுகர்வோர் வகைகளுக்கும் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இறுப்பனவில் ஏற்பட்ட மாற்றங்கள்:

- சமய மற்றும் தொண்டுழிய அமைப்புகளின் இறுப்பனவுகளின் பிரிவில், 180 (கி.வொ.மணி.) மின் அலகுகளிற்கு மேலதிகமான நுகர்விற்கு, தொகுதி வாரியான கட்டணம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்கான மின் கட்டணமுறைமை பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## 2023 மின் கட்டணத் திருத்தம்

| | | |
|---|---|---|
| **அமுலாகும் திகதி (30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்குரியது)** | 2023-02-15 | |
| **நுகர்வோர் வகைகள்** | | |
| **வீட்டுபயோக அறவீடு** | | |
| | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி. வொ. மணி) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) |
| **மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 0 - 60** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30 | 30.00 | 400.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி. 31 - 60 | 37.00 | 550.00 |
| **மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.ம. 60 இற்கு மேல்** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 60 | 42.00 | 650.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி 61 - 90 | | |
| பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120 | 50.00 | 1,500.00 |
| பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180 | | |
| பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல் | 75.00 | 2,000.00 |
| **பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இறுப்பனவை தெரிவுசெய்து கொண்ட வீட்டுபயோக நுகர்வோர்** | | |
| பகல் (மணி 0530 – மணி 1830) | 70.00 | 2,000.00 |
| உச்ச பயன்பாட்டு நேரம் (மணி 1830 – மணி 2230) | 90.00 | |
| உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (மணி 2230 – மணி 0530) | 40.00 | |
| **சமய மற்றும் தொண்டுழிய அமைப்புகள்** | | |
| ***மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 0 - 180*** | | |
| பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30 | 30.00 | 400.00 |
| பகுதி 2 : கி. வொ. மணி 31 - 90 | 37.00 | 550.00 |
| பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120 | 42.00 | 650.00 |
| பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180 | 45.00 | 1,500.00 |
| பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல் | 50.00 | 2,000.00 |

| இதர நுகர்வோர் வகைகள் | | | **கைத்தொழில்** | | **பொதுப்பயன்பாட்டு நோக்கம் / ஹோட்டல் / அரச நிறுவனம்** | |
|---|---|---|---|---|---|---|
| | | | **கைத் தொழில் நோக்கம் 1-1** | **கைத் தொழில் நோக்கம் 1-2** | **பொதுப் பயன்பாட்டு நோக்கம் 1-1/ ஹோட்டல் 1-1/ அரச நிறுவனம் 1-1** | **பொதுப்ப யன்பாட்டு நோக்கம் 1-2/ ஹோட்டல் 1-2 / அரச நிறுவனம் 1-2** |
| **கட்டண வகை 1** ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்குக் குறைவான அல்லது சமனான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல். | **மாதாந்த பாவனை வீச்சு மின் அலகுகள்** | | கி. வொ. மணி. 0 – 300 வரை | கி. வொ. மணி. 300 இற்கு மேல் | கி. வொ. மணி. 0 – 180 வரை | கி. வொ. மணி. 180 இற்கு மேல் |
| | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி.வொ.மணி) | | 26.00 | 26.00 | 40.00 | 47.00 |
| | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) | | 1,200.00 | 1,600.00 | 1,000.00 | 1,600.00 |
| **கட்டண வகை 2** ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்கு அதிகமான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல். | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி.வொ.மணி) | பகல் (மணி 0530 – மணி 1830) | 37.00 | | 47.00 | |
| | | உச்ச பயன்பாட்டு நேரம் (மணி 1830 – மணி 2230) | 40.00 | | 55.00 | |
| | | உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (மணி 2230 – மணி 0530) | 34.00 | | 39.00 | |
| | உச்சக் கேள்விக் கட்டணம் (ரூ./கி.வோ.அம்.) | | 1,600.00 | | | |
| | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) | | 5,000.00 | | | |
| **கட்டண வகை 3** வோல்ட் அளவு கி. வோ. (kV) 11 இற்குக் கூடிய அல்லது சமனான வழங்கல். | அலகுக்குரிய கட்டணம் (ரூ.Æ கி.வொ. மணி) | பகல் (மணி 0530 – மணி 1830) | 36.50 | | 46.00 | |
| | | உச்ச பயன்பாட்டு நேரம் (மணி 1830 – மணி 2230) | 39.50 | | 54.00 | |
| | | உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (மணி 2230 – மணி 0530) | 33.50 | | 38.00 | |
| | உச்சக் கேள்விக் கட்டணம் (ரூ./ கி.வோ.அம்.) | | 1,500.00 | | | |
| | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) | | 5,000.00 | | | |
| வீதி விளக்கு (ரூ./கி.வொ.மணி.) | | | 45.00 | | | |

| **மின்சார வாகனங்களுக்கான இலங்கை மின்சார சபையின் மின்கல மின்னேற்றும் நிலையங்களின் இறுப்பனவு** | | |
|---|---|---|
| பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட | நேரோட்ட விரைவு மின்னேற்றம் (ரூ. / கி. வொ. மணி ) | நிலை 2 ஆடலோட்ட மின்னேற்றம் (ரூ. / கி. வொ. மணி ) |
| பகல் (மணி 0530 – மணி 1830) | 88.00 | 70.00 |
| உச்ச பயன்பாட்டு நேரம் (மணி 1830 – மணி 2230) | 112.00 | 90.00 |
| உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (மணி 2230 – மணி 0530) | 53.00 | 40.00 |

| **பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இறுப்பனவை தெரிவுசெய்து கொண்ட விவசாய நுகர்வோர்** | | | |
|---|---|---|---|
| **கட்டண வகை 1** ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்குக் குறைவான அல்லது சமனான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல். | | அலகு விலை (ரூ./ கி. வொ. மணி) | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ.) |
| | பகல் (மணி 0530 – மணி 1830) | 37.00 | 1,600.00 |
| | உச்ச பயன்பாட்டு நேரம் (மணி 1830 – மணி 2230) | 40.00 | |
| | உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (மணி 2230 – மணி 0530) | 34.00 | |

- 2022 ஐப்பசி 1ம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2022 ஆம் ஆண்டின் 25ம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை அறவீட்டு சட்டத்தின்படி மாதாந்த சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு இலங்கை மின்சார சபையின் மாதாந்த மின்சார கட்டணத்தின் நூற்றுக்கு 2.5 வீதமாகும்.
- 2009 வருட 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 30 (2) (ட) பிரிவிற்கு அமைவாக இலங்கை மின்சார சபையினால் மேற்குறித்த திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

**1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின்கீழான விற்பனை**

# மக்கள் வங்கி ஏலவிற்பனை

## காலி கோட்டை கிளை (013)

**காணித்துண்டம்:** தென் மாகாணம் காலி மாவட்டத்தில் காலி மாநகர சபை எல்லை மற்றும் காலி கடவத்சதர பகுதி என்பவற்றுக்குட்பட்ட காலி கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவில் 226 மஹமோதர கிராம அலுவலர் பிரிவிலுள்ள "சின்னத்தம்பிகேவத்த" என்றறியப்படுகின்ற "பிரங்ச காரையாகேவத்த" என அழைக்கப்படும், 2013.10.06 ஆந்திகதியன்று உரிமம்பெற்ற நில அளவையாளர், எஸ்.ஜீ. வீரசூரிய என்பவரினால் நிலஅளவையிடப்பட்ட மற்றும் 2013.10.08 ஆந்திகதிய 40/2013 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட A எனும் காணித்துண்டினது A3 எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்:** கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து. 40/2013 ஆம் இலக்க தள வரைபடத்திற்கிணங்க, பதினேழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (A-0, R-0, P-17.5). காலி காணி பதிவகத்தில் இலக்கம் Q.188/138 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் உரிய இடத்தில் 2023.03.08 அந்திகதி மு.ப. 11.30 மணிக்கு மக்கள் வங்கி பிரதேச பிராந்திய தலைமை அலுவலகத்தில் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக-** 2020.12.04 ஆந்திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2020.12.04 ஆந்திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி :-** காலி பிரதான பேருந்து நிலையத்திலிருந்து கொழும்பை நோக்கி காலி வீதி நெடுகிலும் சுமார் 1.8 கி.மீ சென்று, விடயப்பொருளாகவுள்ள ஆதனத்தை உங்கள் வலது கைப்புறமாகக் காணாலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை :-** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்னூதிகாரசபைக்குச் செலுத்தப்படற்பாலதான உள்ளூரதீகாரசபை வரி 01%
3. விற்பனை விலையின் 2 1/2%, (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவிளைஞர் மற்றும் கூவநர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்,
6. சான்றுப்படுத்துகைக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம் (காலி), இல, 22, லோவர் டிக்சன் வீதி, காலி என்பவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி : 091-2232311, 223563 தொலைநகல்: 091-2231413

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பின்வரும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவுவிலையை இழப்பிப்பதற்கும் ஆதனத்தை மீளவிற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும்.

**11/55, போகஹவத்த.**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி : 011-2053286, 072-0881044, 072-3207533, 076-9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும்**
**உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,**
**மதிப்பீட்டாளர் மற்றும்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

---

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

# வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** - உதவி தோட்ட அத்தியட்சகர்கள் (Assistant Superintendents)

**தகைமைகள்** - உதவி தோட்ட அத்தியட்சகர்கள்

(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1, 2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில்/பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் ஒரு இளமாணிப் பட்டம்
   **மற்றும்**
   SLSPC அல்லது JEDB பிராந்திய பெருந்தோட்ட நிறுவனமொன்றில் பயிலுநர் நடுகையாளராக (Creeper) 9 மாத கால பயிற்சி காலத்தை பின்பற்றியிருத்தல்
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்/ தொழில்நுட்பம்/தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேயிலைப் பெருந்தோட்டத் துறையில் தேசிய தொழிற்றிறனில் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   **அத்துடன்**
   கூட்டுத்தாபனம், சபை, பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம், அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனத்தில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
   **மற்றும்**
   SLSPC அல்லது JEDB பிராந்திய பெருந்தோட்ட நிறுவனமொன்றில் பயிலுநர் நடுகையாளராக (Creeper) 9 மாத கால பயிற்சி காலத்தை பின்பற்றியிருத்தல்
3. அரசாங்க நிறுவனம்/அரசு சார்ந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய பெருந்தோட்ட நிறுவனத்தில் உதவி அத்தியட்சகராக 3 வருட காலத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேலதிக நன்மைகள்** - உள்ளக மற்றும் வெளியக மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழான வசதிகள்

ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10% தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

மேற்பார்வை செய்வதற்கு ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு கொடுப்பனவு மற்றும் எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்படும்.

உள்வாரி மற்றும் வெளிவாரி தொழிலாளர் கொடுப்பனவு சகிதம் தளபாடமிடப்பட்ட ஒரு பங்களா வழங்கப்படும்.

**சம்பள அளவு** - முகாமைத்துவச் சேவையின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமான சம்பள அளவு JM 1-1 - 2016 [42,600- l0 x 755- 18 x 1,135- 70,580] ரூபா மேற்படி பதவிக்கு உரித்தாகும்.

**வயது** - 22 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை** - நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

- இயைபுடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- இயைபுடைய மேலதிக கல்வி/தொழில்சார் தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் - 25 புள்ளிகள்

100 புள்ளிகள்

**ஏனையவை** - இந்த வகுதியான அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணக்கம் கண்டிப்பாக இருக்கும்.

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற் கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்** - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கம்/கூட்டுத்தாபனம்/நியதிகள் சபை என்பவற்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களின் திணைக்களத் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2023 மார்ச் 07ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**
**011-5875895**

2023-02-14

---

குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையின் 255ஆம் பிரிவுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்ற பிசுக்கால் மூலம் ஏலவிற்பனை

## ஹிங்குரக்கொட மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கிலக்கம் : 585/DR/18
தன்மை : பணம்
எழுத்தாணை இலக்கம் : 376/20

இல.75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு 02. என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள மக்கள் வங்கி

எதிர்

வழக்கிலக்கம் : DR/19/18
தன்மை : பணம்
எழுத்தாணை இலக்கம் : 36/22

1. எம்.ஏ.சிந்தா பிரியங்கனி பெரேரா மதுசிங்க
2. பிரசாத் நிலந்த குமார [illegible] இருவரும், பிரியங்கனி அரிசி ஆலை, இல. 118 சந்தன பொகுன, உணகலாவெஹெர.
3. கே.ஏ.காமினி குமாரசிங்க அரிசி ஆலை, இல.1090, உணகலாவெஹெர, பொலன்னறுவை.
4. எம்.எம்.நிஹால் பண்டார, மாவரகெதர, ஆர்.பீ. அரிசி ஆலை, இல.1234, உணகலாவெஹெர. சந்தனபொகுன.

எதிராளிகள்

ஹிங்குரக்கொட மாவட்ட நீதிமன்றத்தில் DR/19/18, என்ற இலக்க வழக்கில் 2019.07.04ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்வைக்கு ஏற்ப, எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனத்தை தடை ஏற்படுத்தி விற்பனை செய்தல் எழுத்தாணையின் அடிப்படையில் வழக்காளிக்கு வருமதியான ரூபாய் 21,599,194.16 தொகையையும் மற்றும் அத்தகைய தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை 2018.05.28ஆம் திகதி முதல் ரூபாய் 21,176,000.02 தொகைக்கு வருடத்திற்கு 10% சதவீத வட்டியையும் மற்றும் வழக்காளிக்கு ஏற்படுகின்ற செலவினங்களையும் எதிராளிகளிடமிருந்து மீட்டுக் கொள்வதற்காக 2022 ஒக்டோபர் 20ஆம் திகதி ஹிங்குரக்கொட மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் மூலம் தடையேற்படுத்தப்பட்ட அத்தகைய வழக்கின் எதிராளிகளுக்கு சொந்தமான கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனங்களில் அவர்களுக்கு சொந்தமான சகல உரிமைகள் மற்றும் உடமைகளையும்,

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி காலை 11.00 மணிக்கு அத்தகைய ஆதனங்கள் அமைந்துள்ள பிரியங்கனி அரிசி ஆலை,இல.118, சந்தன பொகுன, உணகலாவெஹெர, என்ற முகவரியில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

| கைப்பற்றப்பட்டு தடையேற்படுத்தப்பட்டுள்ள ஆதனங்கள் | |
|---|---|
| 1 | சம்பா நெல் மூடைகள் 80 (50 கி.கி) |
| 2 | ஐ பார் 5 அடி நீளம் 13 (இரும்பு) |
| 3 | 5x3"×4" அளவிலான வேம்பு யன்னல் மரக் குற்றிகள் 14 |
| 4 | 7x3"x4" அளவிலான வேம்பு யன்னல் மரக் குற்றிகள் 20 |
| 5 | 6 அடி நீளமான 8 அங்குல அகல வேம்பு பலகைகள் 05 |
| 6 | 6x8" அகல வேம்பு பலகைகள் 56 |
| 7 | 10x10"அகல வேம்பு பலகைகள் 08 |
| 8 | 6 அடி நீளமான 3 அங்குல அகல சமலை மரப் பலகையால் தயாரிக்கப்பட்ட கதவு நிலைகள் 150 |
| 9 | 5x10" அளவிலான தேக்கை பலகைகள் 80 |
| 10 | 10x2"x4" சலாகை 23 |
| 11 | 6x3"x10" கதவு நிலை வேம்பு குற்றிகள் 03 |
| 12 | 6x6"×5" பலகைகள் 20 |
| 13 | 10 அடி நீளமான 5 அங்குல அகல பலகைகள் 03 |
| 14 | 3 அடி நீளமான 3 அங்குல அகல தேக்கை பலகைகள் 10 |
| 15 | 3 அடி நீளமான 3 அங்குல அகல முதிரை பலகைகள் 35 |
| 16 | 4 அடி நீளமான 3"x4" அகல முதிரை பலகைகள் 09 |
| 17 | 7 அடி நீளமான 6" அங்குல அகல பலகைகள் 30 |
| 18 | 4 அடி நீளமான 4" அங்குல அகல முதிரை பலகைகள் 35 |
| 19 | 6 அடி நீளமான 8" அங்குல அகல முதிரை பலகைகள் 40 |
| 20 | 8x3"×4" அளவிலான வேம்பு கதவு நிலை குற்றிகள் 150 |
| 21 | 6 அடி நீளமான 4" அங்குல அகல முதிரை பலகைகள் 20 |
| 22 | 3 அடி நீளமான 3"x4" அகல வேம்பு பலகைகள் 25 |
| 23 | 8 அடி ×4 1/2" அகல தேக்கை கதவுகள் 05 |
| 24 | தேக்க யன்னல் கதவுகள் 08 |
| 25 | 18 அடி நீளமான 4 அங்குல ஜீஐ குழாய்கள் 02 |
| 26 | 18 அடி நீளமான 3 அங்குல ஜீஐ குழாய்கள் 10 |
| 27 | Track வகை உடற்பயிற்சி இயந்திரம் 01 |
| 28 | K 75 சிறு உழவு இயந்திரம் 01 |

**கையொப்பம்**
**பதிவாளர்**
**என்.டீ.எஸ்.ஹேவாமலவி**
**பதிவாளர்/**
**பிரதி பிசுக்கால்/சமாதான நீதவான்**
**மாவட்ட/நீதவான் நீதிமன்றம் ஹிங்குரக்கொட**

---

# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

NW CBH-7343 Nissan, 2016, car கூடிய விலைக் கோரி க்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 010460

301- 4 21 8 Nissan Sunn y , 1996, car கூடி ய விலைக் கோ ரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 071 1210 810 . 010461

**117 வேன்கள் விற்பனைக்கு**

253-6573 Toyota Hiace, 1991, van கூடிய விலைக் கோ ரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 010449

**118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு**

WP KK-5451 Kia Sorento, 2010, jeep கூடிய வி லைக் கோ ரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 010459

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

CP LD-5956 Tata, 2005, lorry கூடி ய விலைக் கோரி க்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714 5 42 958 . 010455

WP L A -5 948 Isuzu, 1996 , lorry கூடிய விலை க் கோரி க்கை க்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714 5 42 958 . 010457

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

WP GM-1504 Bajaj, 2001, WP ABA-7933 B ajaj, 2015, Threew heel கூடிய விலைக் கோரி க்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 010454


**Repeat Your Ad For Better Offers**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

it's what you want www.adz.lk


---

**கடற்றொழில் அமைச்சு**

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

NAQDA

## விலைமனுக்கோரல்

## பெறுகை அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) பின்வரும் பொருட்கள் மற்றும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | முன்மனுக் கூட்டம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| **NQ/DPC/2023/NCB/G/01** Procurement of PCR Test Kits and other related chemical for Detention of Shrimp Disease for PCR Laboratory - Bathuluoya | ரூ. 175,000.00<br>Lot A -ரூ.125,000/-<br>Lot B - ரூ. 50,000/-<br>(2023.07.08 வரை) | ரூ.3,000.00 | - | 2023.03.09 பி.ப. 3.00 | 2023.03.10 பி.ப. 2.00 |
| **NQ/DPC/2023/NCB/G/04** Procurement of Supply and Delivery Ornamental Fish Feed (a) To be supplied and delivered on monthly basis as per the delivery schedule. | ரூ. 275,000.00<br>(2023.07.08 வரை) | ரூ.5,000.00 | 2023.03.01 மு.ப.10.00 (NAQDA தலைமை அலுவலகம்) | 2023.03.09 பி.ப. 3.00 | 2023.03.10 பி.ப.2.00 |
| **NQ/DPC/2023/NCB/S/01** Provision of Medical Insurance Scheme for NAQDA Staff – 2023 / 2024 | ரூ 200,000.00<br>(2023.07.08 வரை) | ரூ.6,000.00 | - | 2023.03.09 பி.ப. 3.00 | 2023.03.10 பி.ப.2.00 |

02. தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை (**www.naqda.gov.lk**) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
**திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
**2023.02.17**



# இங்கிலாந்து லயன்ஸ் உடனான இரண்டாவது ஒருநாள் போட்டிக்கு இலங்கை ஏ குழாத்தில் மாற்றம்

இங்கிலாந்து லையன்ஸ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டிக்கான இலங்கை ஏ குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை நேற்று (16) வெளியிட்ட இரண்டாவது போட்டிக்கான குழாத்தில் மூன்று மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடருக்கு தயாராகும் முகமாக சாமிக்க கருணாரத்ன, பிரவீன் ஜயவிக்ரம ஆகியோர் அணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வேகப் பந்துவீச்சாளர் மிலான் ரத்நாயக்க அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இளம் சகலதுறை வீரர் துனித் வெள்ளாலகேவுடன், இசித விஜேசுந்தர மற்றும் அம்ஷி டி சில்வா ஆகியோர் இரண்டாவது போட்டிக்கான ஏ குழாத்தில் இடம்பெற்றுள்ளனர்.

அதேநேரம் முதல் போட்டியில் விளையாடியிருந்த அனுபவ வீரர் அஞசலோ மத்தியூஸ் தொடர்ந்தும் அணியில் தக்கவைக்கப்பட்டுள்ளதுடன், சதீர சமரவிக்ரம அணியின் தலைவராக தொடர்ந்தும் செயற்படவுள்ளார்.

தவிர, தேசிய அணி வீரர்களான அவிஷ்க பெர்னாண்டோ, நுவனிது பெர்னாண்டோ மற்றும் பிரமோத் மதுசான் ஆகிய வீரர்களும் இரண்டாவது போட்டிக்கான குழாத்தில் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து லையன்ஸ் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்ததுடன், இரண்டாவது போட்டி நாளை சனிக்கிழமை (18) நடைபெறவுள்ளது.

**இலங்கை ஏ குழாம்**

அவிஷ்க பெர்னாண்டோ, லசித் குரூஸ்புள்ளே, நுவனிது பெர்னாண்டோ, அஞ்சலோ மத்தியூஸ், சதீர சமரவிக்ரம, சஹான் ஆராச்சிகே, துனித் வெல்லாலகே, இசித விஜேசுந்தர, பிரமோத் மதுசான், துஷான் ஹேமந்த, அம்ஷி டி சில்வா, கவிஷ்க அஞ்சுல, லஹிரு உதார, நிபுன் தனன்ஜய, சுமிந்த லக்ஷான்



# பிஃபா தடை: சாஃப் கிண்ணத் தொடரில் இலங்கை இல்லை போட்டியை நடத்துகிறது இந்தியா

தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு (சாஃப்) கிண்ணத் தொடரை நடத்தும் உரிமை இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருப்பதோடு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தடை அமுலில் இருப்பதால் இலங்கை இந்த பிராந்தியத் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

14ஆவது சாஃப் கிண்ணப் போட்டி வரும் ஜூன் 30 தொடக்கம் ஜூலை 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரை நடத்த இலங்கை முன்னதாக விருப்பம் தெரிவித்திருந்தது. அதேபோன்று நேபாளமும் போட்டியை நடத்த விண்ணப்பித்திருந்தது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (14) மெய்நிகர் கூட்டமாக நடைபெற்ற தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் போட்டியை நடத்தும் உரிமை இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கால்பந்து நிர்வாகத்தில் மூன்றாம் தரப்பின் தலையீடு இருப்பதாகக் கூறி இலங்கை கால்பந்து சம்மேளனம் மீது பிஃபா கடந்த மாதம் தடை விதித்த நிலையில் அந்தத் தடை தொடர்ந்து நீடிக்கிறது. இதனால் இலங்கைக்கு இந்தப் போட்டியை நடத்தவோ அல்லது போட்டியில் பங்கேற்கவோ முடியாதுள்ளது.

போட்டியை நடத்த நேபாளம் ஆர்வம் காட்டியபோதும் இந்தியாவில் போதுமான வசதிகள் இருப்பதாக காரணம் கூறப்பட்டுள்ளது.

இதன்படி இம்முறை தொடர் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் என ஆறு நாடுகளைக் கொண்டதாக அமைய வாய்ப்பு உள்ளது.

எனினும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே நீடிக்கும் இராஜதந்திர முறுகல் காரணமாக பாகிஸ்தான் அணி இந்தியா வருவதில் சிக்கல் ஏற்படக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. கடந்த முறை இந்தியாவில் போட்டி நடந்தபோது பாகிஸ்தான் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரக்பி உலகக் கிண்ணம் இலங்கை வருகை

ரக்பி உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு வழங்கப்படும் வெப் எலிஸ் கிண்ணம் கொழும்பு மற்றும் கண்டியில் இந்த வாரம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

இதன்படி இந்தக் கிண்ணம் நாளை சனிக்கிழமை (18) குதிரைப்பந்தயத் திடல் மைதானத்தில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து அது வரும் ஞாயிற்றுக்கிழமை (19) சி.ஆர் மற்றும் எப்.சி. மைதானத்திற்கு மாற்றப்படவுள்ளது.

லொட்ஜ்டன் பிளேஸில் கிண்ணம் மு.ப. 11 தொடக்கம் பி.ப. 3 வரை காட்சிக்கு வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து கண்டிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ள வெப் எலிஸ் கிண்ணம் கண்டி விளையாட்டுக் கழக மைதானமான நித்தவல விளையாட்டு கழக மைதானத்தில் பெப்ரவரி 22 ஆம் திகதி மு.ப. தொடக்கம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

உலகக் கிண்ணத்தை இலங்கைக்கு கொண்டுவர தேசிய விளையாட்டு சபை செயற்பட்டிருந்தபோதும் இலங்கை கால்பந்து நிறுவனத்திற்கு இதற்கான அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# சம்மாந்துறை அணி சம்பியன்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



களுதாவளை கெனடி விளையாட்டு கழகத்தின் 64 வருட பூர்த்தியினை முன்னிட்டு களுதாவளை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்மாந்துறை விளையாட்டு கழகம் 18 ஓட்டங்களினால் வெற்றிபெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டது. ஏசியன் விளையாட்டுக் கழகத்துக்கு எதிரான இறுதிப் போட்டியில் 8 ஓவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 99 ஓட்ட இலக்கை காத்து சம்மாந்துறை அணி வெற்றியை உறுதி செய்தது.

# அல் கொய்தா அமைப்பின் புதிய தலைவர் அல் அதெல்

அல் கொய்தா தலைவர் ஐமன் அல் சவாஹிரி 2022 ஜூலையில் கொல்லப்பட்டதை அடுத்து ஈரானை தளமாகக் கொண்ட எகிப்தியரான சைப் அல் அதெல், அந்த அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

“ஈரானைத் தளமாகக் கொண்டிருக்கும் சைப் அல் அதெல், அல் கொய்தாவின் புதிய தலைவர் என்ற எமது மதிப்பீடும் ஐ.நாவுடன் ஒத்துப்போவதாக உள்ளது” என்று இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அல் கொய்தா குழுவின் புதிய தலைவராக அதெல் தற்போதிருந்து நீடித்து வருவது எமது உறுப்பு நாடுகளின் பெரும்பான்மையான கருத்தாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை கடந்த செவ்வாயன்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எகிப்து சிறப்புப் படையின் முன்னாள் லெப்டினன்ட் கேர்ணலான 62 வயது அலெ, அல் கொய்தாவின் முக்கிய உறுப்பினராக உருவெடுத்தவராவார்.



## சர்வதேச செய்திகள்

### துருக்கி, சிரிய பூகம்பம்:

# 248 மணி நேரத்தின் பின் 17 வயதான யுவதி மீட்பு

துருக்கி மற்றும் சிரியாவில் இடம்பெற்ற பயங்கர பூகம்பம் நிகழ்ந்து 248 மணி நேரத்தின் பின்னர் இடிந்த கட்டடம் ஒன்றில் இருந்து 17 வயது இளம் பெண் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்படுவோர் பற்றிய நம்பிக்கை இழந்து வரும் நிலையில் தெற்குத் துருக்கியில் இந்த யுவதி காப்பாற்றப்பட்டுள்ளார். 17 வயதான அலைனா ஒல்மாஸ் என்ற அந்த யுவதி கரமன்மராஸ் மாகாணத்தில் உள்ள துல்கத்ரொக்லு மாவட்டத்திலேயே இடிபாடுகளில் சிக்கி உயிருடன் இருந்துள்ளார்.

சிகிச்சைக்காக அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி மக்கள் உறங்கிக் கொண்டிருந்த அதிகாலை நேரத்தில் ஏற்பட்ட 7.7 ரிக்டர் அளவு பூகம்பம் மற்றும் 12 மணி நேரத்தின் பின்னர் ஏற்பட்ட 7.6 ரிக்டர் அளவிலான இரண்டாவது சக்திவாய்ந்த அதிர்வினால் துருக்கியில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 36,187 ஆக அதிகரித்துள்ளது.

அண்டை நாடான சிரியாவில் இந்த பூகம்பத்தினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 5,800க்கு மேல் அதிகரித்துள்ளது.

இதன்மூலம் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 42,000ஐ நெருங்கியுள்ளது.

பூகம்பத்தில் உயிர்தப்பியவர்களை தேடும் மீட்புப் பணிகள் தொடர்ந்து இடபெற்றுவரும் நிலையில் முன்னதாக 228 மணி நேரத்தின் பின்னர் இடிபாடுகளில் இருந்து 13 வயது சிறுவன் ஒருவன் மீட்கப்பட்டான்.

துருக்கியின் ஹடாய் மாகாணத்தில் இடிந்த கட்டடம் ஒன்றில் இருந்தே முஸ்தபா என்ற அந்த சிறுவன் காப்பாற்றப்பட்டான்.

# பேரழிவுப் பனிப்பாறைக்குள் வெப்ப நீர் கசியும் ஆபத்து



அண்டார்டிகாவில் உள்ள “பேரழிவு பணிப்பாறை” என அழைக்கப்படும் த்வைட்ஸ் பனிப்பாறையின் பலவீனமான பகுதிகளுக்குள் வெப்ப நீர் கசிவதாக அங்கு ஆராய்ச்சி மேற்கொண்டுவரும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இது கடல் மட்டத்தை பெரும் அளவு உயரச் செய்யும்.

த்வைட்ஸ் பணிப்பாறை பிரிட்டன் அளவு பெரியது என்பதோடு அது உலகின் கடல் மட்டத்தை அரை மீற்றருக்கு மேல் (1.6 அடி) உயர்த்தும் அச்சுறுத்தலைக் கொண்டதாகும். இது அருகில் இருக்கும் பனிப்பாறைகளையும் பலவீனப்படுத்தி கடல் மட்டம் மேலும் 3 மீற்றர் வரை (9.8 அடி) உயரச் செய்யும் அச்சுறுத்தலைக் கொண்டதாகும்.

இந்நிலையில் நீருக்கடியில் இயங்கும் இயந்திர வாகனத்தை பயன்படுத்தி விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்விலேயே இந்த வெப்ப நீர் கசிவு பற்றிய விபரம் கண்டறியப்பட்டுள்ளது.

# தஞ்சப் படகு மூழ்கி 73 பேர் உயிரிழப்பு

லிபிய கடற்கரைக்கு அப்பால் படகு ஒன்று மூழ்கியதில் காணாமல்போயுள்ள 73 தஞ்சக்கோரிக்கையாளர்களும் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஐ.நாவின் குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் ஏழு பேர் மாத்திரமே உயிர் தப்பிய நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை



பெற்று வருகின்றனர். இதுவரை 11 சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாக லிபிய செம்பிறை சங்கம் மற்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலகில் அதிக உயிரிழப்பு பதிவாகும் தஞ்சக்கோரிக்கையாளர்களின் கடல் பாதையில் ஐரோப்பாவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்தப் படகு மூழ்கியுள்ளது. மத்தியதரைக் கடலில் மேற்கொள்ளப்படும் இந்த அபாயகரமான பயணங்களில் இந்த ஆண்டில் 130க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டில் 1,450 பேர் உயிரிழந்துள்ளனர்.

# பஸ் பள்ளத்தில் விழுந்து பனாமாவில் 39 பேர் பலி

பனாமாவில் அமெரிக்காவை அடையும் நோக்குடன் தஞ்சக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி ஒன்று பள்ளத்தில் விழுந்ததில் 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொஸ்டாரிக்கா நாட்டு எல்லைக்கு அருகில் வடக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இந்த பஸ் வண்டியை ஓட்டுநர் திருப்ப முயன்றபோதே தவறுதலாக பள்ளத்தில் விழுந்திருப்பதாக கூறப்படுகிறது. இந்த பஸ் வண்டியில்



66 பேர் இருந்திருப்பதோடு 20 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எந்த நாட்டவர்கள் என்பது உறுதி செய்யப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கானோர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பனாமாவின் சதுப்புநிலப் பகுதியைக் கடந்து செல்கின்றனர். முன்னெப்போதும் இல்லாத அளவாக கடந்த ஆண்டு 248, 000 குடியேறிகள் புலம்பெயர்ந்து சென்றனர். அவர்களில் பெரும்பாலானோர் வெனிசுவேலாவைச் சேர்ந்தவர்களாவர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை – மொனராகல

01. மொனராகல, மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக்குழுத் தலைவரினால், பின்வரும் சிற்றுண்டிச் சாலைக்காக தேசிய சிற்றுண்டிச்சாலை கேள்விதாரர்களிடமிருந்து 2023.03.09 வரையான காலத்தில் பி.ப. 2.30 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கோவை இலக்கம் | கருமத்தின் பெயர் | விண்ணப்பதாரரின் தகைமைகள் | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா. | கேள்விப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| DGH/MO/12/ சிற்றுண்டிச்சாலை/ 23 | மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலைச் சேவையை வழங்கல் | கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் | 3,000.00 | 10,000.00 |
| DGH/MO/12/ Aircom/ 22/23 | Air Compressor & Vacuum Plant இயந்திரத்தின் சேர்விசு மற்றும் பராமரித்தல் (2023 வருடம்) | கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் | 3,000.00 | 10,000.00 |
| DGH/MO/12/ TP/22-23 | உள்ளக தொலைபேசித் தொகுதியின் சேர்விசு மற்றும் பராமரிப்பு வேலைகள் (2023 வருடம்) | கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் | 3,000.00 | 10,000.00 |

கேள்விதாரரொருவரின் சார்பாக முன்வரும் தகவுத்திறன்களைக் கொண்ட முகவரொருவர் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவரினால் பின்வருவற்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளும் முழுமையான கேள்விப் படிவத் தொகுதியொன்றின் மூலம், முத்திரையிடப்பட்ட கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

I. மொனராகல மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்று.

II. மொனராகல மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகருக்கு, கேள்விப் படிவ கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டு.

02. இவ்வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரம் இதற்கான கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். வேறு வகையான மாதிரிப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

03. வைத்தியசாலை அலுவலகத்தில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. 2023.02.17 முதல் 2023.03.09 வரையான காலத்தில், வார வேலை நாட்களில். மு.ப. 09.00 முதல் பி.ப. 02.30 வரை அலுவலக நேரங்களில் இதற்கான கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகல என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் கேள்விகள் அனுப்பப்படல் அல்லது வைத்தியசாலையின் பெறுகைப் பெட்டியில் நேரடியாக சேர்த்தல் வேண்டும். 2023.03.09 அன்று பி.ப. 02.30 இற்கு கேள்விகள் மூடப்பட்டு, உடனடியாகவே அவை, மாவட்ட பொது வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

06. எந்தவொரு கேள்வியையும் அல்லது அனைத்துக் கேள்விகளையும் நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

07. அரச கேள்வி ஒப்பந்தங்களை மீறியமைக்காக அபகீர்த்தியானோர் பட்டியல் (Black list) படுத்தப்பட்டவர்களுக்கு கேள்விப்படிவங்கள் (ஆவணங்கள்) வழங்கப்பட மாட்டாது.

**விசாரணைகள் கணக்காளர்**
**0552276261/ 0552276912**

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மொனராகல.**

## சுகாதார அமைச்சு

## மருத்துவ வழங்கல் பிரிவு

## கேள்வி விலைகளைக் கோரல்

சுகாதார அமைச்சுக்கு உரித்தான மருத்துவ வழங்கல் பிரிவின் பின்வரும் கருமங்களை மேற்கொள்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான முறைமையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி விலைகள் கோரப்படுகின்றன.

02. இந் நிர்மாணங்களிற்காக கேள்விகள், இரண்டு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | கருமத்தின் பெயர் | கேள்விதாரரின் தகைமை தரம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| 01. | Supply, Installation and Refilling of Fire Protection System Medical Supplies Division at Colombo 10. | EM 04 Above | 4,500.00 |
| 02. | Supply, Installation and Refilling of Fire Protection System Medical Supplies Division at Digana. | EM 05 Above | 4,500.00 |
| 03. | Supply, Installation and Refilling of Fire Protection System Medical Supplies Division at Wellawatta. | EM 05 Above | 4,500.00 |
| 04. | Supply, Installation and Refilling of Fire Protection System Medical Supplies Division at Angoda-No. 01 | EM 05 Above | 4,500.00 |

03. இதற்காக, மருத்துவ வழங்கல் பிரிவின் நிருவாக அலுவலகத்தினால் வழங்கப்படும் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. 2023.02.20 முதல் 2023.03.10 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலப்பிரிவில், எழுத்துருவ விண்ணப்பமொன்றை நிருவாக அலுவலரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்று, உரிய கேள்விக்கட்டணங்களை சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்து, மருத்துவ வழங்கல் பிரிவின் நிருவாகப் பிரிவில் இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. 2023.03.13 அன்று பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், அதற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக மருத்துவ வழங்கல் பிரிவின் கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தின் கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

06. கேள்விகள் திறக்கப்படுவதற்கு முன்னர், வேலைக்களக் கூட்டம் 2023.03.09 அன்று பி.ப. 2.00 இற்கு மருத்துவ வழங்கல் பிரிவில் நடைபெறும்.

07. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து, பின்னர் அவற்றை ஒருறையில் சேர்த்து அதில் கேள்வியின் பெயர் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில், விண்ணப்பதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். மேலதிக விபரங்களை 011-2694113 என்ற இலக்கத்தை அழைத்து, மருத்துவ வழங்கல் பிரிவின் நிருவாக அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மருத்துவ வழங்கல் பிரிவு,**
**இல. 357, பூஜ்ய பத்தேகம விமலவங்ஸ ஹிமி மாவத்த,**
**கொழும்பு-10**

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP//06/ PT/6433(EL) | Spares for the Light House Lamps | 20,000.00 | 1,000.00 | 2023.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6430(MP) | 02 Nos. Hydraulic Power Pack (Thruster) of Bubenzer EmergencyBrake Device of Main Hoist System – 65T ZPMC STS Crane at ECT | 18,000.00 | 1,000.00 | 2023.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2023 பெப்ரவரி 17 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

### புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

## கொள்முதல் அறிவித்தல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில், அந்த திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரால், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 08 நிறுவனங்களுக்கான (வடக்கு தெற்கு நட்புக் கூடம் - மிஹிந்தளை, தேசிய கலா பவனம் - கொழும்பு -07, ஜோன் த சில்வா ஞாபகார்த்த மண்டபம்- கொழும்பு- 07. தேசிய கலை நிகேதனம் குண்டசாலை, சிங்கள அகராதி அலுவலகம் கொழும்பு-07, நூல் களஞ்சியம் கொழும்பு-07, வலிசிங்க ஹரிச்சந்திர கலாசார கேந்திரம்- நீர்கொழும்பு, எதிரிவீர சரச்சந்திர நாடக பயிற்சி பாடசாலை - தலங்கம) ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்க தகுதியான நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ஏலம் (NCB) முறையின் கீழ் சீல் செய்யப்பட்ட ஏலங்கள் கோரப்படுகின்றன.

| கொள்முதல் இலக்கம் | விடயம் | ஏல ஆவண கட்டணம் | ஏலப் பத்திரம் |
|---|---|---|---|
| DCA/04/03/28/2023 | கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்த 08 நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குதல். | ரூ. 5,000.00 (திருப்பி செலுத்த முடியாதது) | ரூ.150,000.00 (திருப்பி செலுத்தக்கூடியது) |

விலைமனு சமர்ப்பிக்கும் போது நிறுவனம் அனைத்திற்கும் அல்லது சில நிறுவனங்களுக்காக அல்லது ஒரு நிறுவனத்திற்காக சேவைகளை வழங்குவது தொடர்பாக விலைமனு சமர்ப்பிக்கப்படலாம்.

ஏலத்தின் செல்லுபடியாகும் காலம் ஏலம் முடிந்த திகதியிலிருந்து 77 நாட்கள் ஆகும். ஒவ்வொரு ஏலப் படிவமும். இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட மேற்படி பெறுமதியின் மீளப்பெறக்கூடிய ஏலப் பத்திரத்துடன், கலாசார அலுவல்கள் பணிப்பாளர் பெயரில் பெற்ற அதன் மூலப் பிரதியை இணைக்கப்படல் வேண்டும்.

அரச / அரை அரச நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் அமைப்பாக இருக்க வேண்டும். வணிகப் பதிவிலிருந்து குறைந்தபட்சம் 05 வருட சேவை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வணிகப் பதிவுச் சான்றிதழ் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் பதிவு உரிமம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டிராத நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

இது சம்பந்தமாக, ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 2023.02.17 முதல் 2023.03.13 வரை வேலை நாட்களில் மு.ப 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை தங்கள் நிறுவனத்தின் கடித தலைப்பில் கலாசார அலுவல்கள் பணிப்பாளருக்கு எழுத்துப்பூர்வ கோரிக்கை கடிதம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிராப்பரிக்கு 5,000.00 ரூபாவை திருப்பிச் செலுத்த முடியாத தொகையை செலுத்தி, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கொள்வனவுப் பிரிவில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் சிங்கள மொழியில் மட்டுமே ஏலப் பத்திரங்களைப் பெற முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கொள்வனவு பிரிவின் 011-2875795 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்டு ஒட்டப்பட்ட ஏலங்கள் 2023.03.14 அன்று பி.ப. 1.30 மணிக்கு முன் பெறக்கூடிய வகையில், பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்ததும் அதாவது 2023.03.14 அன்று பி.ப. 1.30 மணிக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளரின் உத்தியோகப்பூர்வ அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன், இந்நிகழ்வில் ஏலதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ளலாம். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும்.
திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

**தலைவர்.**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**8ஆம் மாடி, செத்சிறிபாய,**
**பத்தரமுல்லை**

# பெறுகை அறிவித்தல்

## வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்லல் 2023/2024 போதனா வைத்தியசாலை – குருநாகல்

1. குருநாகல் போதனா வைத்தியசாலையின் உணவகத்தை 2023/2024ஆம் ஆண்டிற்கு நடத்திச் செல்வதற்கு வழங்குநர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கு அதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற சேவை வழங்குநர்களிடமிருந்து 2023.03.08 மு.ப. 10.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி திறத்தல் அத்தினம் அவ் வேளையிலேயே வைத்தியசாலை பணிப்பாளர் பணிமனையில் இடம் பெறுவதுடன் அவ் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
3. கேள்வி ஆவபணங்களை 2023.03.07 பி.ப. 3.00 வரை ரூ. 2500.00 தொகையை வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் தலைமையகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘வைத்தியசாலையின் உணவகதத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள் 2023.∴2024’ என்று குறிப்பிட்டு தலைவர் பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பிரதம கணக்காளர் பணிமானையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிடலாம்.
5. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியளிடப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அரச நலன்புரி உணகங்களை நடத்திச் செல்லும் போது அரசிற்கு அறவிட வேண்டிய கொடுப்பனவுகளை செலுத்தாதுள்ள மற்றும் உடன்படிக்கைகளை மீறியுள்ளவர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
6. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது பூர்த்தியற்று சமர்ப்பித்துள்ள விலைமனுக்களுடனான கேள்வி ஆவணங்களை நிராகரிக்கும் உரிமை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவருக்குரியது.
7. கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மதிப்பீட்டிற்கு உற்படுத்தப்பட்டதன் பின்பு தேர்ந்தெடுக்கப்படும் சேவை வழங்குநர் வைத்தியசாலையுடன் பராமாரிப்பு சேவை உடன்படிக்கையொன்றுக்கு வரல் வேண்டும்.
8. இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொ. பே. இல. 037-2233906ஐ அழைத்து நீடிப்பு இல. 2800 இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரல்

### இலங்கை வங்கியில் தற்போதுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட (ஒருங்கிணைந்த - நிகழ்நிலை) தகவற் தொழில்நுட்ப அமைப்பின் காப்புத் தீர்வினை விரிவாக்குதல்

**கேள்விப்பத்திர இலக்கம் : P/PROC/2022/39**

